சகோதரி ஸ்டெல்லா தினகரன்

அழைப்பின் மேன்மை

THE SUPREME CALLING



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

அழைப்பின் மேன்மை

சகோதரி ஸ்டெல்லா தினகரன்

வெளியீட்டாளர் :

இயேசு அழைக்கிறார்

72, இராஜாஜி சாலை,

சென்னை - 600 001.

	வருடம்	பிரதிகள்
முதல் பதிப்பு	: நவம்பர் 2010	3000
இரண்டாம் பதிப்பு	: ஜனவரி 2011	3000

Copyright 2011 by Dr. Stella Dhinakaran

All Rights Reserved
under international copyright law.
Contents and / or cover may not be reproduced
in whole or in part in any form without the express written
consent of the publisher.

Printed at : VASANTH PRINTS, Chennai - 600 086.
Ph : 044 - 2435 5802, Mobile : 94440 12139

முன்னுரை

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியதைப் போன்று இந்த உலக வாழ்வில் உபத்திரவங்கள், போராட்டங்கள், துன்பங்கள் யாவும் மலிந்து கிடக்கின்றன. இது பக்தர்கள் மற்றும் யாவர் வாழ்விலும் பிரசங்கி 9:2-ல் வாசிக்கிறபடி, எல்லோருக்கும் ஒரே விதமாய் சம்பவிக்கிறது. சன்மார்க்கனுக்கும், துன்மார்க்கனுக்கும் ஒரேவிதமாக நடக்கிறது. இந்த நிலையை மாற்றியமைக்க வல்லமையுள்ளவர் சர்வவல்லவராகிய நம் ஆண்டவர் ஒருவரே!

> இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? எரேமியா 32:27

என்ற வசனத்தின்படியே, 'அவரால் ஆகாதது ஒன்றுமில்லை' என்று விசுவாசிக்கிறவர்கள் வாழ்வில், யாவற்றிலும் சகலவித சம்பூரண நன்மையினால் நிரப்புவார். விசேஷமாக தம் நாம மகிமைக்கென்று தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் மீது தம் கண்களை வைத்து அவர்களை அவர்களுடைய சகலவித பாடுகள், துன்பங்களிலிருந்து விடுதலையாக்கி, புகழ்ச்சியும், கனமும் மகிமையுமுண்டாக அவர்களை முடிவிலே ஆசீர்வதிப்பார். யோபுவின் வாழ்க்கை முடிவில் அவ்வாறாகத்தான் மாறியது. ஆம்! ஆண்டவர் தம்மை உத்தமமும், உண்மையுமாய் பின்பற்றும் பக்தர்களை ஒருநாளும் கைவிடமாட்டார். அவர் சித்தப்படியே அவர்களை உயர்த்தி கனப்படுத்துவார்.

அதேவண்ணமாகத்தான் என் வாழ்விலும் நான் கடந்து சென்ற பல்வேறு கண்ணீரின் பாதையிலும் அவர் கூடவேயிருந்து, எதிர்பார்க்காத அளவுக்கு என்னை எப்படியெல்லாம் உயர்த்தி

கனப்படுத்தினார் என்பதை வெளிப்படுத்தி இப்புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். இதை வாசிக்க வாசிக்க நீங்களும் உற்சாகம் பெற்று, அவருடைய வழிகளைப் பின்பற்றி நடக்க ஏதுவுண்டாக்குவார். அதற்காகத்தான் மனந்திறந்து என் வாழ்வில் நடந்த சம்பவங்களனைத்தையும் விவரித்து எழுதியிருக்கிறேன். மற்றப்படி வேறு எந்த எண்ணத்திற்காகவும், என் சுய பெருமைக்காகவும் இப்புத்தகம் எழுதப்படவில்லை.

> எதை செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்யுங்கள். கொலோ. 3:24

என்றபடி கர்த்தர் பெரியவர். தம்மை நேசிக்கிற, தம்மையே நம்பியிருக்கிற தம் தாசர்களை எவ்விதம் தூக்கி நிறுத்துவார் என்பதை அறிவிப்பதின்மூலம் கர்த்தருடைய மகத்துவத்தை வெளிப்படுத்தவே இப்புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. விசேஷமாக ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்டு, அழைக்கப்பட்டவர்கள் அதன் மேன்மையை உணர்ந்துகொள்ளும்படியாகவும் இதனை வெளியிட்டிருக்கிறேன்.

பரம அழைப்பிற்கு பங்குள்ளவர்களாயிருக்கிற பரிசுத்த சகோதர, சகோதரிகளாகிய நீங்களும் இயேசு கிறிஸ்துவையே கவனமாய் நோக்கிப்பார்த்து, பாவங்களையும், பாரங்களையும் தூரமாய் உதறித்தள்ளிப்போட்டுவிட்டு, ஆண்டவரின் அழைப்பின் மேன்மையை உணர்ந்தவர்களாய் அவரையே கனப்படுத்தி, ஆசீர்வாதம் பெற ஆண்டவர் தாமே அருள்புரிவாராக.

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

பொருளடக்கம்

	பக்கம்
1. பிறப்பும், இளமைப் பருவமும்	1
2. திருமண வாழ்வும், நீரிழிவு நோயின் நுழைவும்	10
3. பாடுகளும், வெற்றி நன்மைகளும்	25
4. வாழ்க்கையின் பாடுகளும், வல்லவர் இயேசுவின் வழிநடத்துதலும்	54
5. சரீரத்தின் பாடுகளும், கர்த்தரின் அற்புத பாதுகாவலும்	77
6. ஜெபத்தில் அறிந்த உன்னத இரகசியங்கள்	94
7. அழைத்தவரின் அளவற்ற அன்பு	116

1. பிறப்பும், இளமைப் பருவமும்!

"திருப்பாதிரிப்புலியூர்" என்னும் இடம், தென்னாற்காடு மாவட்டத்தை சார்ந்த கடலூர் புதிய பட்டிணத்திலுள்ள ஒரு பகுதியாகும். அங்குதான் என் தகப்பனார் திரு.எம்.எஸ். பாலையா அவர்களுக்கும், திருமதி கமலம் அம்மாளுக்கும் 1938ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் தேதியன்று நான்காவதாகவும், கடைசி மகளாகவும் நான் பிறந்தேன்.

என் குடும்பத்தினரைப் பற்றிய அறிமுகம்!

என் தகப்பனார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இடையன்குடியை சார்ந்தவர்கள். என் தாயின் தகப்பனார், அந்த நாட்களில் உண்மையாய் ஆண்டவருக்கென்று பய பக்தியுடன் உழைத்த Rev.அருமைநாயகம் என்ற போதகர்! அவர்கள் திருநெல்வேலி பகுதியிலும் மற்றும் கடலூர் பகுதியிலும் போதகராக பணியாற்றினார்கள். அதேபோன்று என் தகப்பனாரின் முன்னோர்களிலும், கர்த்தருக்கென்று பாடல் எழுதும் வரம் பெற்ற பக்தர்கள் இருந்ததாகவும், தேவனோடு நெருங்கி வாழ்ந்த பக்தியுள்ள பலரும் இருந்ததாகவும் என் தகப்பனார் கூறுவார்கள். இவ்வாறாக தெய்வ பக்தியுள்ள சந்ததியில்தான் நான் பிறந்திருக்கிறேன். என் தந்தையாரும் கூட அந்நாட்களில் ஈரோடு, இடப்பாடி போன்ற சிறிய ஊர்களில் அவருடைய வங்கிப் பணியை நிறைவேற்றி வந்த நாட்களில், என் தாயாரோடு சேர்ந்து ஆலய ஆராதனையை தாங்களே முன்னின்று நடத்தி வந்த பக்தி நிறைந்த பெற்றோர்கள் தான் என்பதை மிகப் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். அந்தவிதமான அஸ்திபாரம்தான் இன்று நானும் ஊழியத்தின் பாதையில் நடக்க தேவ கிருபையை அருளியிருக்கிறது.

பண்டிகை நாட்களில் மட்டும் அருகிலிருக்கும் பெரிய ஊர்களிலிருந்து போதகர்கள் வந்து ஆலய ஆராதனை நடத்துவார்கள். கிறிஸ்தவர்களல்லாத மற்ற மக்களும் ஆவலோடு வந்து அந்த ஆராதனைகளில் பங்கு பெறுவார்கள். என் தாயாரும் சுகமில்லாதோர் வீடுகளுக்கு வேதாகமப் பெண்களோடு சென்று, அவர்களுக்காக ஜெபிப்பார்கள். இந்தவிதமான சூழ்நிலையில்தான் என் பெற்றோரும் ஆண்டவரை பயபக்தியுடன் வழிபட்டு வந்திருக்கிறார்கள்.

என் தகப்பனார் "இம்பீரியல் வங்கி" என்று அந்த நாட்களில் அழைக்கப்பட்ட இன்றைய State Bank-ல் பணி புரிந்து வந்தார். நான் அறிந்தபடி, ஈரோடு, இடப்பாடி, திருச்சி போன்ற பல இடங்களிலும் பணிபுரிந்து, பின்பு கடலூர் பழைய பட்டிணம் என்று சொல்லப்பட்ட இடத்தி லுள்ள வங்கியில் பணிபுரிய வந்து சேர்ந்தார்கள். என் பெற்றோர் தங்களுக்கு தெரிந்த அளவிற்கு பயபக்தி, ஒழுக்கம் இவைகளில் எங்களை கண்டிப்புடன் வளர்த்து வந்தார்கள். எனக்கு மூத்தவர்களாக இரண்டு அண்ணன்மார் கள் இருந்தனர். திரு.வில்பிரட், திரு.ஜார்ஜ் பாலையா என்பது அவர்கள் பெயர். இவர்கள் இருவரும் வங்கிகளில் தான் பணிபுரிந்து வந்தார்கள். அவர்களுக்கு அடுத்ததாக, என்னோடு பிறந்தது ஒரே ஒரு மூத்த சகோதரி! அவர்கள் பெயர் திருமதி ஏஞ்சலினா ஜார்ஜ் என்பதாகும். என் சகோதரியின் கணவர் திரு.எட்வர்டு ஜார்ஜ் அவர்களும் என் சகோதரர்களின் துணைவியர்கள் திருமதி ஜேன் வில்பிரட் அவர்களும், திருமதி ஐடா ஜார்ஜ் அவர்களும்கூட பக்தியில் சிறந்தவர்களாக எங்களோடு சேர்ந்து கர்த்தரை உண்மையாகத் தேடுகிறவர்களாக கர்த்தர் வழிநடத்தினபடியால் எங்கள் குடும்பம் கிறிஸ்துவை அறிந்து பயபக்தியுடன் வாழும் குடும்பமாகவே திகழ்ந்தது.

தேவனின் மெல்லிய சத்தம்

நான் கடலூர் பழைய பட்டிணத்திலும், புதிய பட்டிணத்திலுமாக என் பள்ளிப் படிப்பை முடித்தேன். அதன்பிறகு மேற்கொண்டு எந்த கல்வித்துறையை தெரிந்தெடுப்பது என்பது மிகவும் சர்ச்சைக்குள்ளாகியது. என் தாயாருக்கு, பிள்ளைகள் நிறைய படிக்க வேண்டும் என்று ஆவல். ஆனால் என் தகப்பனாரோ, அதற்கு நேர் விரோதம். விசேஷமாக "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்னும் பழங்கால நோக்கம் கொண்டவராக ஆசிரியைப் பயிற்சி பெற்று, ஏதோ ஒரு சான்றிதழைப் பெற்றுவிட்டால் அது போதும்! அதுவும் சென்னையைப் போன்ற பெரிய பட்டணங்களுக்கு செல்ல வேண்டியதில்லை என்று என் விஷயத்தில் உறுதியாக இருந்தார்கள். என் தாயாரும் என் இரண்டாவது சகோதரரும் அதற்கு நேர் மாறாக, என்னை நன்கு படிக்க வைக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கிடையே விவாதம் முற்றிப்போய் முடிவில் காலம் கடந்துபோனதால், ஒரு வருஷம் எதிலும் சேர இயலாமல், வீட்டிலேயே வீணாய் காலம் கழித்தேன். அந்த நாட்களில் என்னையுமறியாமல் நான் என்னைத் தாழ்த்த ஆரம்பித்தேன். அடுத்த ஆண்டில் என் தாயாரிடம், "அம்மா! எனக்காக கவலைப்படாதீர்கள். அப்பா விருப்பம் போல் நடக்கட்டும்" என்று நான் கூற, சர்ச்சை முடிவுற்றது. திருச்சியிலிருக்கும் "சகல பரிசுத்தவான்களின் ஆசிரியை பயிற்சி பள்ளி"யில் சேர்ந்தேன்.

ஆரம்பத்தில் பெற்றோரின் பிரிவு ஒருபுறம்! புதிய சூழ்நிலை மற்றொருபுறம்! இந்நிலையில் ஒருநாள் மாலை வேளையில் நான் என் அறையில் அமர்ந்து, என் பரிதாப நிலைமையை எண்ணி தனிமையில் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தேன். அச்சமயம் யாரோ என்னை அழைத்து பேசுவது போல் உணர்ந்தேன். என் பெயரை அழைத்து, "நீ உன் மேசை மீதிருக்கும் வேத புத்தகத்தை எடுத்து வாசி" என்பது



தான் அந்த சத்தம். இனம் தெரியாத ஒருவித பயத்துடனும், பக்தியுடனும் முதன்முறையாக என் வேத புத்தகத்தை கரத்தில் எடுத்தேன். அதுவரை என் தாயாரை சந்தோஷப் படுத்துவதற்காக மட்டுமே ஏதோ ஒன்றை "அர்த்தம் ஏதும் விளங்காத நிலையில்" வேத புத்தகத்தை வாசித்து வந்த நான், அன்று தான் முதன் முறையாக பய பக்தியுடன் வாசிக்க ஆரம்பித்தேன். ஆனால், அன்றும் எந்த பகுதியும் எனக்கு விளங்காத நிலையில், சரித்திரங்கள் அடங்கிய சாமுவேல் புத்தகத்தை படிக்க ஆரம்பித்தேன். ஆனால் எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது! அன்று நான் வாசித்த அந்த வார்த்தைகள் மூலம் ஆண்டவர் என்னோடு முகமுகமாய் பேசுவதாக உணர்ந்தேன். மட்டுமின்றி, என்னையுமறியாமல் என் உள்ளத்தின் ஆழத்தில் இனம் தெரியாத விதத்தில் ஒரு பக்திப் பரவசம் எனக்குள் உண்டாயிற்று. ஆண்டவர் மீது ஒரு விசேஷித்த தெய்வீக அன்பும் என்னை நிரப்பியது. அன்று முதல் என் உள்ளத்தில் உலகம் தரக்கூடாத தெய்வீக சந்தோஷம் என்னை நிரப்பியது. அங்கு பயின்ற மாணவிகள் இளநிலையில் பயிலும் ஒருவர், முதுநிலையிலுள்ள ஒருவரோடு அன்புகூர்ந்து, நெருங்கிப் பழகும் பழக்கம் கொண்டிருந்தனர். ஆனால் எனக்கோ, "என் நேசர் இயேசு என் உற்ற நண்பராக" தெய்வீக அன்பினாலும், பரலோக இன்பத்தினாலும் என்னை வெகுவாக நிரப்பினார்.

இவ்விதமாக ஈராண்டுகளுக்குப்பின் நான் ஒரு ஆசிரியையுமானேன். ஆசிரியையாக பள்ளிக்கு புறப்பட்டு செல்லும் வழியிலெல்லாம், "என் நேசர் இயேசுவின்மேல் சார்ந்த

வளாய்" அவரோடு பேசிக்கொண்டே போவேன். இதினிமித்தம் "சிறந்த ஆசிரியை" என்ற நற்பெயருடன் மூன்றாண்டுகள் ஆசிரியைப் பணியினை நிறைவேற்றி முடித்தேன். என் வயது 21-ஐ எட்டியவுடனே என் தகப்பனார் எல்லாவற்றிலும் கணக்கிட்டு, அந்தந்த சமயங்களில் அதையதை நிறைவேற்றுவதில் கவனமாயிருந்தவரானபடியால், என் எதிர்காலத்தைக் குறித்தும் கணக்குப் போட ஆரம்பித்தார். எனக்கு திருமணம் செய்ய அவர்கள் முயன்று கொண்டிருப்பதை என் தாயார் மறைமுகமாக என்னிடம் வெளிப்படுத்திய பொழுது, என் உள்ளத்தில் ஒருவித பயம் எழும்பியது! "பெற்றோரோடு, இன்பமாய் எந்தவிதமான கவலையுமற்று வாழும் வாழ்வு எத்தனை இனிமையாயிருக்கிறது! வாழ்க்கையில் சரியான துணைவர் கிடைக்காவிட்டால் என் நிலை என்ன ஆகும்?" என் மனதில் ஒரே கவலை! ஒருநாள் தனி அறையில் முழங்கால்படியிட்டு, "ஆண்டவரே! நான் உம்மை முழுமனதுடன் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர். நான் உம்மை இன்னும் அதிக ஆழமாய் அறிந்து, உம்மை பின்பற்றத்தக்கதாக என்னிலும் அதிகமாய் உம்மை நேசிக்கிற ஒருவரை துணைவராய் தாரும். இல்லாவிடில், ஒருவேளை உம்மை அறியாத மனிதர் எனக்கு துணையாக வந்துவிட்டால், நீரே எனக்கு துணைநின்று, அந்த நிலையிலும், அவரை உம் வழியில் மாற்ற நீரே என்னை நன்மையாய் வழிநடத்தும்" என்று கெஞ்சிப் பிரார்த்தித்தேன்.

திருமணம் செய்துகொள்வதின் நோக்கம் என்ன?

எனக்கு அருமையான வாலிபர்களே! எதற்காக திருமணம் செய்து கொள்கிறோம்? இதைக் குறித்து ஆண்டவர் சொல்வதென்ன? "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" என்று கூறுகிறார் (ஆதி. 2:18). ஆகவே, தாமாகவே அதை நிறைவேற்றி, முதலில் ஆதாமையும், பிறகு ஏவாளையும் அவரே சிருஷ்டித்தார். இன்றும் அதேபோன்று தேவ சித்தத்தின்படியான துணையைத் தெரிந்தெடுத்து வாழும் இல்வாழ்வே இனிமை நிறைந்ததாயிருக்கும்.

ஆனால் இந்நாட்களில், இவ்விதமாக தேவ சித்தத்தை நாடித்தேடுவதற்கு பதிலாக மாம்ச இச்சைக்கு அடிமைப்பட்டு, எளிதில் கெட்டுப்போகும் பெண்கள், அதன்பின் தங்கள் வாழ்க்கை நாசமடையும்பொழுது, வாழ்நாளெல்லாம் அழுது புரளுகின்றனர். அதுமட்டுமின்றி, இவ்வாறு தங்கள் வாழ்க்கையை இழந்து தவிக்கும் பெண்கள், வேறு வழி ஏதும் தெரியாமல் தங்களுக்கு உதவி செய்ய வேறு யாராவது கிடைப்பார்களா என்று எண்ணி, மனைவி, பிள்ளைகளோடு சந்தோஷமாக வாழ்கிற திருமணமான ஆடவர்களிடம் நயவஞ்சகமாக அன்பு காண்பித்து, அவர்கள் வாழ்வையும் கெடுத்து நாசமாக்குகின்றனர். இது போன்ற எத்தனை பரிதாபமான, மற்றும் பயங்கரமான காரியங்களை இவ்விதமான பெண்கள் செய்து தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக வாழ்ந்து, நித்திய ஜீவனை இழக்கும் வழிகளில் சென்று துணிகரமாக துரோகம் செய்கின்றனர். ஆண்களைப் பற்றி கேட்கவே வேண்டாம். கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடக்கும் வாலிபர்கள் தவிர, பல வாலிபரின் வாழ்க்கை, எபேசியர் 2:3-ன்படி, தங்கள் மாம்சமும், மனதும் விரும்பினவைகளை செய்து, கோபாக்கினையின் பிள்ளைகளாக துணிகரமாக வாழ்வதில் இன்பம் காண்கிறவர்களாய்,

வாலிபப் பெண்களை மோசம் போக்கி, அவர்கள் வாழ்வை அழிக்கின்றனர்.

என்க்கு அருமையான வாலிப செல்வங்களே! திருமண மாகுமுன்பு உங்கள் வாழ்வில் ஏற்படும் இவ்விதமான மாம்சீக சலனங்களையெல்லாம் கர்த்தருடைய பெலனால் மேற்கொள்ள, கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் அவருடைய பிரசன்னத்தின் இன்பத்தினால் நிறைந்து வாழுங்கள். உங்கள் உள்ளத்தில் இவ்வித ஆசை இச்சைகள் எழும்பும் பொழுது, அவைகளை கர்த்தரிடம் ஜெபத்தில் கூறி, அவர் சித்தம் மட்டுமே நடக்க பொறுமையாய் காத்திருங்கள். உங்கள் மனம் விரும்பியபடியே நடக்க வேண்டும் என்று பிடிவாதமாய் இருப்பது ஆபத்தானது. பெற்றோருக்கு தெரி யாமல் இப்படிப்பட்ட நேரங்களில், திருட்டுத்தனமாக, பல காரியங்களில் தனித்து செயல்படுவீர்களானால், பிற்காலத் தில் உங்கள் காரியங்களில் தோல்வி ஏற்படும்பொழுது, விசேஷமாக நீங்கள் மிகவும் நம்பிய உங்கள் தோழனோ அல்லது தோழியோ உங்களை கைவிடும்பொழுது, உங்கள் வாழ்வே நாசமடைந்துபோக வழி உண்டாகும் என்பதை மறந்து போகாதிருங்கள்.

அன்பான வாலிபப் பெண்களே! உங்கள் கற்பை பய பக்தியோடு திருமணம் ஆகும்வரை பரிசுத்தமாய் காத்துக் கொள்ள வேண்டியது மிகமிக அவசியம். **“இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும்” (யாக்கோபு *1:15*).**

> **களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவா மல், பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக் கடவோம்.**
>
> **ரோமர் 13:13**

இவ்வாறெல்லாம் மாம்ச இச்சையினால் சோதிக்கப் படும் வேளைகளில், தெய்வபயத்துடன், அந்த குறிப்பிட்ட இடத்தைவிட்டும், அந்த குறிப்பிட்ட நபரைவிட்டும் தூர

மாய் அகன்று விடுங்கள். அந்த சோதனை உங்களைவிட்டு அகலும்படி ஜெபத்துடன் உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

யோபு என்ற பக்தன்:

என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?

யோபு 31:1

என்று சொல்லி, பரிசுத்தமாக தன்னைக் காத்துக்கொண்டார். அதேபோன்று அழகு நிறைந்த இளம் வாலிபன் யோசேப்பு, இச்சை நிறைந்த ஒரு ஸ்திரீயால், பாவம் செய்ய வற்புறுத்தப் பட்ட நேரத்தில், **"இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய் வது எப்படி?"** என்று உறுதியாகக் கூறி, அந்த பாவ சூழ் நிலையிலிருந்து வெற்றி பெற்றதினிமித்தம் அதன் பின்னர் மிகப் பெரிய பாடுகள் வந்தபொழுதிலும், முடிவில் அவன் தேவனால் எவ்வளவாய் கனப்படுத்தப்பட்டான் என்பதை வேத புத்தகத்தில் வாசித்து, நீங்கள் அவ்வாறே எந்த சூழ் நிலையிலும் பரிசுத்தமாகவே வாழ உங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது அவர் உங்கள் எதிர்கால வாழ்வை தாமே பொறுப்பெடுத்து ஆசீர்வாதமாக வழி நடத்துவார்.

வாலிப வயதுள்ள என் அருமை செல்வங்களே, உங்கள் மனம்போன போக்கிலெல்லாம் நடந்து, அதினிமித்தம் தேவன் உங்களுக்கென்று வைத்திருக்கிற நிகரற்ற ஆசீர்வாதங் களை எளிதில் இழந்து, வாழ்நாளெல்லாம் கண்ணீரில் வாழாமல், கசப்பை அனுபவிக்காமல், கர்த்தருக்கு பிரிய மானதாக, அவர் சித்தத்தின்படியே உங்கள் எதிர்கால வாழ்வு கட்டப்படவும், யோசேப்பைப் போல் தெய்வ ஆசீர்வாதம் நிறைந்த வாழ்வை நீங்கள் பெறவும்தக்கதாக உங்களை அடக்கியொடுக்கி, கர்த்தர் விரும்பும் பரிசுத்தத்தை மட்டுமே கடைபிடித்து வாழ்ந்து, தேவன் "ஏற்ற துணையை" அவர் "விரும்பும் ஏற்ற நாளிலே" உங்களுக்கு

அருளிச்செய்து, நேர்த்தியாக யாவற்றையும் செய்து முடிக்கும்படி, தேவனுடைய வழிநடத்துதலுக்காக உபவாசத்தோடு கூடிய ஜெபத்துடன் காத்திருங்கள் *(பிரசங்கி 3:11).*

என் எதிர்காலத்தைக் குறித்த தீர்மானம்

தேவனுடைய பெரிதான கிருபையினால் நானும் என் எதிர்காலத்தைக் குறித்து, நானாகவே சொந்தமாக ஒரு தீர்மானமும் ஏறெடுக்காமல், முதலாவது கர்த்தரின் கரத்திலும், பின்பு என் பெற்றோரின் கரத்திலும் அந்த பெரிய பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தேன். அதினிமித்தமாக, கர்த்தரே எனக்காக யாவற்றையும் அழகாக செய்து முடித்தார் *(சங்கீதம் 138:8).*

கர்த்தரையே முழுவதுமாக நம்பியிருந்த தமது மகளாகிய என் வாழ்வை எப்படி கட்டினார், எவ்வாறு என் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட்டது என்னும் காரியங்களை தொடர்ந்து அறிய அடுத்த அத்தியாயத்திற்குள் செல்வோமா?

* * * * *

"நாளுக்கு ஓர் நல் வார்த்தை"

தினசரி தியான புத்தகம் : ஆண்டு முழுவதும் வாசித்து பயனடைய வேத வசனங்களும், ஆலோசனைகளும், ஜெபமும் அடங்கிய புத்தகம். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம், குஜராத்தி, பஞ்சாபி ஆகிய பல மொழிகளில் இப்புத்தகம் கிடைக்கும்.

அணுக வேண்டிய முகவரி :
"இயேசு அழைக்கிறார்"
72, இராஜாஜி சாலை
சென்னை - 600 001.

2. திருமண வாழ்வும், திரியேக தேவனின் துணையும்!

கடந்த அத்தியாயத்தில் நான் என் எதிர்காலத்தைக் குறித்து செய்த வேண்டுதலைப் பற்றி எழுதியிருந்தேன். "ஜெயத்தைக் கேட்கிற தேவன்" என்று நாம் வேத புத்தகத்தில் வாசிப்பது போல் (சங்கீதம் 65:2) கர்த்தருக்கு தன் இளம் வயதிலேயே தன்னை முழுவதுமாக அர்ப்பணம் செய்து, அவருக்காகவே பக்தி வைராக்கியத்துடன் வாழ்ந்து வந்த தமது தாசனாகிய சகோதரர் தினகரன் அவர்களை கர்த்தர் தெரிந்தெடுத்து எனக்கு வாழ்க்கைத் துணைவராக தமது மகா இரக்கத்தினாலும், கிருபையினாலும் அருளிச்

எங்கள் திருமணம்

செய்தார். திருமணமாவதற்கு சில நாட்களுக்கு முன்பே அவர் தன் தகப்பனார் மூலமாக, "நான் அலுவலக வேலையை முடித்த பின்பும் கர்த்தருடைய வேலையில் ஈடுபட வேண்டியதாயிருக்கும். அவள் அதற்கெல்லாம் தடையேதும் சொல்லக் கூடாது" என்ற கோரிக்கையை என்னிடம் சொல்லி அனுப்பினார். ஆனால், ஆண்டவர் என்னையும் தம் அடியாளாக அதற்கு முன்னதாகவே மாற்றியிருந்தபடியால், நான் அதைக் குறித்து சற்றும் கவலைப்படாமல், அத்தகைய பக்திமானின் மனைவியாவது எவ்வளவு பெரிய பாக்கியம் என்பதை உணர்ந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் மாத்திரம் செலுத்தினேன். இவ்வாறு நாங்கள் இருவரும் கர்த்தருக்

கென்று வாழ திருமணத்திற்கு முன்பே மிகுந்த ஜெபத்துடன் எங்களை தனித்தனியே ஆயத்தம் செய்துகொண்டோம்.

தேவ சித்தத்தின்படி திருமணம்

இன்றும் திருமணமாகப் போகும் நிலையிலுள்ள வாலிப உள்ளங்களே, இவ்வாறே நீங்களும் கர்த்தருடைய சித்தத்திற்கென்று திருமணத்திற்கு முன்பே உங்களை ஒப்புவிப்பீர்களென்றால் எவ்வளவு நலமாயிருக்கும்! இன்றைய நாட்களில் காணப்படும் கசப்பான பிரிவினைகள் யாவும் இருக்கவே இருக்காது அல்லவா! அதை விட்டுவிட்டு மாம்சத்தின் ஆசை இச்சைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதால்தான் இன்றைய திருமணங்கள் நிலைத்து நிற்க இயலாமல், விரைவில் பரிதாப நிலையில் முறிந்து போவதைக் காண்கிறோம்.

என் பக்தி நிறைந்த தாய், என்னுடைய திருமண நிச்சயதார்த்தம் முடிந்து, திருமணத்திற்கு இரண்டு மாதங்கள் இருந்த வேளையில், தினமும் எனக்கு நல்ல பக்தி நிறைந்த ஆலோசனைகளை கற்றுக்கொடுத்தார்கள். "உனக்கு வரப்போகிற துணைவர் தன் பெற்றோருக்கு ஒரே மகன்! ஆகவே, உன் பெற்றோராகிய எங்கள் மீது நீ அன்புகூருவது போல், அவர்களையும் கர்த்தருடைய உதவியோடு, ஜெபத்தோடு, யாதொரு வித்தியாசமுமின்றி கவனித்துக்கொள்ள வேண்டும்." இப்படி பல நல்ல ஆலோசனைகளை எனக்கு கற்றுக் கொடுத்து, என்னை "ஒரு நல்ல மனைவியாக" திகழ, என்னை ஆயத்தப்படுத்தின என் தாயாரைக் குறித்து நான் கர்த்தரை இன்றும் ஸ்தோத்தரிக்கிறேன்.

இன்றைய நாகரீக உலகில் வாழும் என் பெற்றோர்களே! நீங்களும் உங்கள் பிள்ளைகளுடைய இருதயங்களை, பண ஆசை, பொருள் ஆசை, உலகப் பிரகாரமான வைராக்கியம் போன்றவைகளால் கெடுக்காமல், அவர்களோடு

சேர்ந்து பயபக்தியுடன், அவர்கள் நல்வாழ்விற்காக ஜெபி யுங்கள். நல்ல பக்தி நிறைந்த ஆலோசனைகளை மட்டுமே கொடுங்கள். அப்பொழுது மட்டுமே உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை கர்த்தருடைய ஆசீர்வாதத்தோடு செழித்திருக்கும். அதேபோன்று திருமணத்தை எதிர்நோக்கியிருக்கும் மண மக்களே! நீங்களும் அதிக ஜெபத்துடன் உங்கள் வாழ்வின் குறைவுகளையெல்லாம் ஆண்டவருடைய சமூகத்தில் அறிக்கை செய்து, அவைகளை விட்டுவிட்டு, "கர்த்தருக்கு பயப்படும், மற்றும் அவர் வழிகளில் நடக்கும் மகனாகவோ அல்லது புத்தியுள்ள, குணசாலியான ஸ்திரீயாக, விலை யேறப்பெற்ற முத்தாகவோ *(நீதிமொழிகள் 31:10-31)* உங்களை கர்த்தர் மாற்றும்படி, ஜெபத்தோடு அவர் கரத்தில் ஒப்புக்கொடுங்கள்.

என் நிச்சயதார்த்த நிகழ்ச்சியின்போது, நீதிமொழிகள் *31:10-31*ல் உள்ள பகுதியை போதகர் வாசித்தார். அந்த வேத வசனங்களை அன்றுதான் கவனமாகக் கேட்டேன். எனக்கு உள்ளத்தில் ஒரே பயம்! "ஐயோ, 'அதிகாலையில் நேரப் பட்டு எழுந்து' என்று எழுதப்பட்டிருக்கிறதே! நானோ, ஏழு மணிக்கு அம்மா படுக்கையிலேயே காபி கொண்டு வந்து கொடுத்தால் தானே எழும்புகிறேன்" என்று ஒரு பெரிய பாரம் ஏற்பட்டது. இப்படியாக வேத வசனம் மூலம் கர்த்தர் என் வாழ்வின் குறைவுகளையெல்லாம் மாற்றி, பரிசுத்த திருமண வாழ்வுக்கென்று என்னை ஆயத்தம் செய்தார். தாழ்மை, அன்பு இவைகளிலெல்லாம் குறைவு பட்டிருந்த என்னை, தமது கிருபையால் மாற்றி ஆயத்தப் படுத்தினார். என் அன்புக்குரிய சகோதரியும்கூட பல விஷயங் களில் எனக்கு முன்மாதிரியாக இருந்து, நல் ஆலோசனைகள் பலவற்றைக் கொடுத்து என்னை ஆயத்தப்படுத்தினார்கள்.

இன்றயை நாட்களில் திருமணம் நிச்சயிக்கப்பட்டதுமே, திருமணமான தம்பதியரைப்போன்று உல்லாசமான

வாழ்க்கையில் நெருக்கமாக பழகுகின்றனர், திருமணமாகப் போகும் தம்பதியர்! இதற்கு பதிலாக தங்கள் குடும்ப வாழ்வு கர்த்தருடைய ஆசீர்வாதம் நிறைந்ததாய் விளங்கும்படி, ஜெபத்திலும், உபவாசத்திலும் காத்திருந்து, பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்கு தங்களை ஒப்புவிப்பார்களென்றால் எவ்வளவு நலமாயிருக்கும்! ஆனால், இக்காலத்து வாலிபர்களுக்கு இத்தகைய பக்திக்குரிய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வது சற்று கடினம்தான். "நீங்கள் பழைய காலத்து ஆசாமிகள்" என்று சொல்லி நம்மை பரிகசிப்பார்கள். எனினும், உண்மையாய் தெய்வீக வழியில் நடக்க விரும்புகிறவர்களாவது, இவ்விதமான பக்தியின் மார்க்கத்தில் பரமனுடைய ஆசீர்வாதத்தை நாடி செயல்படுவது சாலச் சிறந்தது.

பக்தியோடு ஆரம்பிக்கும் திருமண வாழ்வு

அடுத்து என் கணவர் தமது பக்தி வைராக்கியத்தை எவ்வாறு காண்பித்தார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். திருமணம் இனிதே தேவ ஆசீர்வாதத்துடன் முடிந்தது. வரவேற்பு நிகழ்ச்சிகள் யாவும் முடிவடைந்தது. முதல்முறையாக சில நிமிடங்கள் நாங்கள் தனிமையில் இருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது அவர் என்ன சொன்னார் தெரியுமா? "நாம் முதலில் முழங்கால் படியிட்டு நம்மை இணைத்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். அடுத்து, நாம் ஆரம்பித்திருக்கிற இல்லற வாழ்வில் அவரும் இணைந்து முப்புரி நூலாக நம்மோடு ஐக்கியப்படும்படி (பிரசங்கி 4:12) ஒருமனதுடன் வேண்டுதல் செய்வோம்" என்றார். இதைக் கேட்டு, உடனே நானும் முழங்கால்படியிட்டு கர்த்தரை ஒருமனதுடன் துதித்து, ஸ்தோத்திரம் செய்தபின்பு, அவரை எங்கள் இல்வாழ்வில் இணையும்படி வேண்டுதல் செய்தோம். அன்று முதல் 48 ஆண்டுகள் ஆண்டவர் தமது உண்மையில் மாறாதவராக

எங்கள் இல்லற வாழ்வை இனிதே யாதொரு குறைவுமின்றி கஷ்டத்திலும், நஷ்டத்திலும், சுகத்திலும், துக்கத்திலும், இன்பத்திலும், துன்பத்திலும் ஒருவருக்கொருவர் ஆறுதல் தருபவர்களாக வழிநடத்தி ஆசீர்வதித்தார். ஆண்டவரும் ஒவ்வொருநாளும் எங்களோடு தங்கி, அதிசயமானவராக விளங்கி, மகிமையான விதத்தில் வழிநடத்தினார்.

இன்றைக்கும், திருமணமாகி இல்வாழ்வை ஆரம்பிக்கும் தம்பதியர் ஒவ்வொருவரும், அந்த நாளில்தானே எங்களைப் போல் கர்த்தருக்கு மட்டுமே முதலிடம் கொடுப்பார்களென் றால், அப்பொழுது, மத்தேயு 6:33ன்படி, சகலவிதமான நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் கர்த்தர் தம் வாக்கின் படியே வாழ்நாள் முழுதும் கூடக்கொடுப்பது உறுதி. என் அன்புக்குரிய தம்பதியரே! இந்த சிறிய ஆலோசனையை நீங்களும் ஏற்று நடக்கும்படி, பாசத்துடன் வேண்டிக் கொள்கிறேன்.

அறுசுவை உணவைத் தயாரிப்பதில் ஆண்டவரின் ஞானம்

இதன்பிறகு எங்கள் இல்லற வாழ்வை பாண்டிச்சேரி என்ற ஊரில் இனிதே ஆரம்பிக்க, ஆண்டவரும் எங்கள் இல்லறத்தை தமது பிரசன்னத்தினால் அலங்கரித்தார். அது கிறிஸ்து இயேசுவை மையமாகக் கொண்ட ஒரு ஜெப வீடாக விளங்கும்படி அருள் புரிந்தார். திருமணத்திற்கு முன்பே என் தாயார், "அம்மா! விரைவில் உனக்கு திருமணம் செய்து வைக்கப்போகிறோம். சமையல் செய்ய கற்றுக் கொள்" என்பார்கள். நானோ, "அம்மா! எல்லாம் அதுஅது அந்தந்த நேரம் வந்துவிடும். கவலைப்படாதீர்கள்" என்று சோம்பேறித்தனத்துடன் சமாளித்துவிடுவேன். கடைசியில் திருமணமானபொழுது, கடலைப் பருப்புக்கும், துவரம் பருப்புக்கும்கூட வித்தியாசம் தெரியாத பரிதாப நிலையில்

என் பெற்றோர்

என் குடும்ப வாழ்வை ஆரம்பித்தேன். ஆனால், ஆண்டவர் என் மீது மிகுந்த இரக்கம் கொண்டவராக என் பெற்றோர் தங்கியிருந்த கடலூருக்கு அருகாமையிலேயே உள்ள பாண்டிச்சேரி என்ற ஊரில் என் கணவரின் வேலையினிமித்தம் நாங்கள் தங்கியிருந்தபடியால், என் தாயார் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து என்னோடு தங்கி எனக்கு சமையலை கற்றுக் கொடுத்தார்கள். அப்பொழுதெல்லாம் மசாலையை மாற்றி மாற்றிப் போட்டுவிட்டு அம்மாவிடம் நன்றாகத் திட்டு வாங்கிக் கொள்வேன். அவ்வளவு அறியாமை!!! அம்மா பாவம்! எவ்வளவு நாட்கள் என்னோடு இருப்பார்கள்? அப்பாவையும் அவர்கள் சென்று கவனிக்க வேண்டும். ஆகவே, ஒருநாள் நான் ஆண்டவரோடு பேசினேன். "ஆண்டவரே! என் தாயின் வார்த்தையை அப்பொழுதே கேட்காத குற்றத்தை எனக்கு தயவாக மன்னியும். இப்பொழுதும் நீர் என்னோடுகூடவே இருக்கிறபடியால், நீரே எனக்கு கற்றுத்தாரும்" என்று ஜெபித்தேன். ஒவ்வொரு நாளும் சமையல் செய்யுமுன் இவ்வாறு ஜெபிப்பேன். உண்மையாகவே ஆண்டவர் என் ஜெபத்தைக் கேட்டு, ஒரு மாதத்திற்குள்ளாகவே நன்றாக சமையல் செய்ய கற்றுக் கொள்ளும் பாக்கியம் செய்தார். அநேக உறவினர்கள் மற்றும் ஊழியர்களும் விருந்தாளிகளாக வரவும், அவர்களையெல்லாம் உபசரிக்கவும்கூட தேவையான ஞானம் தந்தார்.

கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். நீதிமொழிகள் 2:6

அடுத்து, இல்லற வாழ்வில் ஆண்டவர் எனக்கு கற்றுக் கொடுத்த பாடம், வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ளுதல். அதற்கு ஒரு சாட்சியை இங்கே கூறுகிறேன் பாருங்கள். எங்களுடைய பாட்டியம்மா ஒருவர், எவரையுமே குறை கூறிக்கொண்டிருப்பவர்கள்! அவர்கள் ஒருசில நாட்கள் எங்களோடு தங்கும்படி வந்தார்கள். எனக்கு உள்ளத்தில் ஒரே பயம்தான். ஆனால் அவர்கள் போகும்பொழுது என்ன சொன்னார்கள் தெரியுமா? "நானும் புதிதாகத் திருமண மான ஒரு சிலருடைய வீடுகளுக்கெல்லாம் போய் வந்தேன்; உங்கள் வீட்டைப்போல் அவர்கள் எல்லாருக்கும் சுத்தமாக வைத்துக் கொள்ளவோ, குடும்பத்தை நேர்த்தியாக நடத்தவோ தெரியவில்லை" என்று பெருமையாகக் கூறிய போது, அன்றன்று என்னை அழகாய் கரம்பிடித்து வழி நடத்தும் ஆண்டவர் இயேசுவையே அதற்காக நான் முழு மனதுடன் வாழ்த்தி, ஸ்தோத்தரித்தேன்.

மட்டுமல்ல! ஆண்டவர் என்னோடே கூடவேயிருந்து, அந்நாட்களில் பாண்டிச்சேரியில், என்மீது அன்பு செலுத்தி என்னை உற்சாகப்படுத்தும்படி என் அருமை அண்ணன் திரு.ஜார்ஜ் அவர்களையும், அன்பு அண்ணி திருமதி ஐடா ஜார்ஜ் அவர்களையும் கொடுத்து என்னை சந்தோஷப் படுத்தினார். பலவிதங்களில் அவர்கள் எனக்கு உதவியாயி ருக்கும்படி கர்த்தர் வழிநடத்தினார்.

என் அன்பு பிள்ளைகளே! எனக்கு ஆரம்ப நாட்களில் இவ்வாறெல்லாம் சகலவிதங்களிலும் உதவிய ஆண்டவரை, நீங்களும் உறுதியாய் ஆரம்பமுதல் பற்றிக்கொள்வீர்களா னால், அதே கர்த்தர் உங்களையும் அவ்விதமாகவே அற்புத மான ரீதியில் வழிநடத்துவார். உங்கள் தாய், தகப்பன் கூறும் புத்திமதிகளையும், ஆலோசனைகளையும் பயபக்தி யுடன் கேட்டு நடப்பீர்களானால் கர்த்தர் உங்களிலும்

பிரியமாயிருந்து சகல காரியங்களிலும் கரம்பிடித்து நடத்துவார்.

> என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. நீதி.1:8

மாமனாரின் முன்மாதிரியான ஜெப வாழ்க்கை

என் மாமனார் திருத்துரைசாமி அவர்களது வாழ்வின் மூலம், ஆண்டவர் எனக்கு முக்கியமான ஒரு காரியத்தையும் கற்றுக்கொடுத்தார். அவர்கள் ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுந்து யாருக்கும் தொல்லை கொடுக்காமல் டார்ச் லைட் உபயோகித்து வேதம் வாசிப்பார்கள். தான் வாசித்த வேத பகுதியில் காணப்படும் வாக்குத்தத்தங்களைப் பிடித்து குடும்பத்தில் ஒவ்வொருவருக்காகவும் வாய் திறந்து ஸ்தோத்திரத்தோடே சத்தமாக வேண்டுதல் செய்வார்.

என் மாமனார்
திருத்துரைசாமி அவர்கள்

என் மகன் பால் தினகரன் வாலிப மகனாக இருந்த பொழுது, அதுவும் ஆண்டவருக்கு சொந்தமான மகனாக மாறாதிருந்த நிலையில், தினமும் அவன் பெயரைச் சொல்லி, "ஆண்டவரே! என் பேரனை உம் அன்பின் கயிறுகளால் உம்மண்டையில், உமக்கு பிரியமான மகனாக இழுத்துக்கொள்ளும்" என்று சத்தமாக ஜெபிப்பாராம். அவருக்கு அருகில் உறங்கிக்கொண்டிருக்கும் பேரனுக்கு தாத்தாவின் இந்த செய்கை அந்த நாட்களில் கோபம் கோபமாக வருமாம். "என் தாத்தா நீங்களும் தூங்காமல், என்னையும் தொல்லைப்படுத்துகிறீர்கள்?" என்று கூறி

கோபப்படுவானாம். ஆனால், அந்த பக்தியுள்ள தாத்தாவின் கருத்தான, பக்தி நிறைந்த, விசுவாசத்தோடுகூடிய ஜெபத்தைக் கேட்டுத்தான், கர்த்தர் இன்று மகன் பால் தினகரனின் வாழ்வை, அவருக்கு மகிமையான வாழ்வாக மாற்றியிருக்கிறார் என்பதை அன்று அவன் எப்படி அறிந்திருக்கக்கூடும்?

என் அன்பான வயதுசென்ற தாத்தா, பாட்டிமாரே! நீங்களும்கூட அவ்வாறே கர்த்தருக்கு பிரியமில்லாத வகையில் வாழும் உங்கள் பேரப்பிள்ளைகளுக்காக தாத்தா துரைசாமி அவர்களைப் போல் அதிகாலையில் எழுந்து ஸ்தோத்திரத்தோடேகூட கர்த்தரிடம் மன்றாடி ஜெபியுங்கள். அதை விட்டுவிட்டு, வீணான திருப்தியற்ற முறு முறுப்புக்கு இடம்கொடாமல், உங்கள் குடும்பத்தார் ஒவ்வொருவருக்காகவும், அவர்கள் பெயர்களையெல்லாம் சொல்லி ஜெபியுங்கள். அதினிமித்தம் கர்த்தர் உங்களுக்கு சமாதான வாழ்வைத் தந்து, நன்மையானவைகளையே நீங்கள் காணும்படி அருள்புரிவார்.

இணைந்து ஜெபிக்கும் இல்லற வாழ்வு

என் மாமனார் செய்த மற்றுமொரு முக்கியமான பக்திக்குரிய காரியம் என்னவென்றால், சரியாக காலை 6 மணிக்கு குடும்ப ஜெபம் செய்ய அமர்ந்து, சத்தமாகப் பாடல் பாடுவார். நாங்கள் யாவரும் உடனே எழுந்து வந்து ஜெபத்தில் கலந்துகொள்வோம். இந்த காரியத்தை நாங்களும் எங்கள் இல்லற வாழ்வில் பயபக்தியுடன் தொடர்ந்து கடைபிடிக்க ஆரம்பித்தோம். இரவிலும் படுக்கைக்குப் போகு முன்பு இருவருமாக இணைந்து, அந்த நாள் முழுவதும் பெற்ற கர்த்தரின் வழிநடத்துதலை எண்ணி நன்றி செலுத்துவோம். எங்கள் வாழ்நாளெல்லாம் எங்கள் இல்லற வாழ்வு இயேசுவின் பிரசன்னத்தால் நிரம்பவும், அவரே அற்புத

மான விதத்தில் எங்களை வழிநடத்தவும் இந்த காரியம் பேருதவியாக இருந்தது.

இன்றைய நாட்களில், இல்லற வாழ்வில் தேவ சமாதானம், தெய்வீக சந்தோஷம், தேவ கரத்தினால் வழி நடத்தப்படுதல் இவையெல்லாம் சற்றும் காணப்படாமற் போவதற்கு, இவ்விதமாக குடும்பமாக யாவரும் இணைந்து செய்யும் ஜெபம், காலை மாலை வேளைகளில் இல்லாமற் போவதே இதற்கு முக்கிய காரணம். குடும்ப ஜெபம், உங்களுக்குள் ஒருமனதையும், ஒற்றுமையையும், குறைவுகளை மறந்து மன்னித்து அன்பு செலுத்தும் நற்கிரியைகளையும் உண்டுபண்ணும். காரணங்கள் பல சொல்லி, கர்த்தருடைய பிரசன்னத்தை காலால் எட்டி உதைத்துவிடாமல், பயபக்தியுடன் இன்றே இந்த இன்பமான வாழ்வை இறைவன் இயேசுவினிடமிருந்து பெற்று மகிழுங்கள். ஆண்டவர் இயேசுவோடு இணைந்து வாழும் இல்வாழ்வில் தான் எத்தனை பேரின்பம்! எத்தனை நன்மை!

> இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும் . . . ஒப்பாயிருக்கிறது;
>
> சங்கீதம் 133:1-3

இந்த அறியாதவர்கள், இதுவரை அனுபவியாதவர்கள் தயவுசெய்து இன்றே உங்கள் வாழ்வை செழிக்கச் செய்ய வல்லவராம் இயேசு இரட்சகரிடம் இணைந்து, மெய்யான இன்பம் பெறுங்கள். நிறைவானவராகிய அவர் உங்கள் வாழ்வை தம் பிரசன்னத்தினால் நிரப்பும்பொழுது, நிகரில்லாத நன்மையும், கிருபையும் உங்களை நிச்சயம் தொடரும் (சங்கீதம் 23:6). நாங்கள் இவைகளையெல்லாம் அனுபவித்து, தெய்வீக இன்பம் கண்டதினால் தான் நீங்களும்

அதேபோன்று ஆசீர்வாதம் பெறவேண்டுமென்ற பாரத்தி னால் இதை எழுதுகிறேன்.

இல்வாழ்வு சிறக்க சில வழிமுறைகள்

விசேஷமாக, திருமண வாழ்வை ஆரம்பிக்கிறவர்கள், ஆரம்ப முதலே எங்கள் வாழ்வில் நாங்கள் கண்ட இத்தகைய தெய்வீகப் பேரின்பங்களை நீங்களும் பெற்று மகிழுங்கள். முக்கியமாக பெற்றோர் தங்கள் பிள்ளைகள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தால் நிறைந்த குடும்ப வாழ்க்கையை வாழ்வ தற்கு, அவருக்கு பிரியமானவர்களாய் "கிறிஸ்துவின் இல்லறமாகவும்" "கிறிஸ்துவே அவர்கள் குடும்பத்தின் தலைவராகவும், கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாகவும்" அவர்கள் வாழ்வில் விளங்குவதற்கும் அவர்களை நல்வழி யில் நடத்துவதில் மட்டுமே கவனமாயிருப்பீர்களாக!

இதை விட்டுவிட்டு, பெண் வீட்டாரிடத்தில் எவ்வளவு பணம், பொருள் வசூலிக்கலாம், அவர்கள் ஏழ்மை நிலையி லிருந்தாலும்கூட அவர்களை வேதனைப்படுத்தி கொஞ்ச மும் ஈவு, இரக்கம் இல்லாமல் அவர்களால் இயலாது என்று தெரிந்தபொழுதிலும், அவர்களை பாடுபடுத்தி பல காரியங்களை அவர்களிடம் கேட்பது, கர்த்தருக்கு முன்பாக பாவமாயிருக்கும். அவர்கள் வேதனையோடு விடும் கண்ணீர் உங்களுக்கு சாபமாக மாறும்.

இதைத் தவிர்த்து, ஒருவருக்கொருவர் இரண்டு வீட்டா ரும் புரிந்துகொண்டு, "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியோடு" (I தீமோ. 6:6), உங்கள் பிள்ளைகளுக்கும் அந்தவிதமான நல்வழிகளை கற்றுக் கொடுப்பீர்களானால், அவர்கள் வாழ்வில் கர்த்தருடைய ஆசீர்வாதம் நிலைத்திருக் கும். இன்று குடும்பங்களில் காணப்படும் குழப்பங்கள், பிரிவினைகள், கசப்பு இவைகளுக்கு அங்கு இடமேயிராது. சமாதானத்தின் தேவன் சாத்தானை கால்களின் கீழே நசுக்கிப்

போடுவார் (ரோமர் 16:20). கர்த்தர் விரும்புகிறபடியேயும், தேவன் அழைத்த அழைப்பின்படியேயும் இயேசு கிறிஸ்து வோடு ஐக்கியம் கொண்ட அருமையான கிறிஸ்தவ வாழ்வை 1 கொரி. 1:9ன்படி உங்கள் ஒவ்வொருவருக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் அருளிச் செய்வார். கர்த்தரையே நம்பி, அவர் முகத்தையே நாடித்தேடி பயபக்தியுடன் வாழும் தம்பதிகளுக்கு தமது தெய்வீக சமாதானத்தை ஒவ்வொரு நாளும் அருளுவார் (சங்கீதம் 29:11). திருமணத்தில் ஈடு படப்போகும் ஆண், பெண் இருபாலரும் இவைகளை யெல்லாம் மிகவும் கவனமாக கடைபிடிக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன். அப்பொழுது பிசாசு வெட்கப் பட்டு உங்களைவிட்டு விலகிப் போவான். கர்த்தர் தமது தெய்வீகப் பிரசன்னத்தால் உங்கள் வாழ்வை நிரப்புவார். உங்களுக்காக அவரே யாவற்றையும் செய்து முடிப்பார் (சங்கீதம் 138:8).

இன்றைய நாட்களில் மற்றுமொரு பரிதாபமானதும், பயங்கரமானதுமான காரியம் என்னவென்றால், தம்பதியரின் குடும்ப வாழ்வை பெற்றோரே அலைக்கழிக்கிறதை நாம் காண்கிறோம். தாய்மார் திருமணமான பின்பும் தன் மகன் தன் வழியிலேயே நடக்க வேண்டும்; மகனை மனைவி யோடு சேரவிடாமல், அவர்களை சந்தோஷமாக வாழ விடாமல் இப்படியாக எத்தனையோ பெண்கள் கண்ணீரில் வாழ்வதற்கு காரணமாக இருக்கின்றனர். அதேபோன்று தங்கள் மகளை திருமணமான பின்பும் தன் கூடவே வைத்துக் கொண்டு, புருஷனோடு சந்தோஷமாக வாழ்வதைத் தடுக்கும் கடின உள்ளம் கொண்ட தாய்மாரும் இன்று இருக்கத்தான் செய்கிறார்கள். இதனால் பாடுபடும் இளம் உள்ளங்கள் எத்தனையெத்தனை? "அவர்கள் வாழவேண்டிய வயதில் அவர்களை வாழவிடாமல், இதற்கு நான் தடை யாக இருக்கிறேனே" என்று அவர்கள் சற்றும் யோசிப்பதே இல்லை. அன்பான தாய்மாரே! உங்கள் பிள்ளைகள்

தங்களுடைய புருஷனோடோ அல்லது மனைவியோடோ இணைந்து, ஒருமித்து சந்தோஷமாக வாழ்ந்திருப்பதையே நீங்கள் பார்த்து சந்தோஷமடையுங்கள். உங்களால் அவர்கள் வாழ்வு எந்த விதத்திலும் கெட்டுப்போகாதபடி உங்கள் குறைவுகளையெல்லாம் கர்த்தரின் நிமித்தம் மாற்றிக்கொள்ளுங்கள். கர்த்தர் அப்பொழுது உங்கள்மேல் பிரியமாயிருப்பார்.

மருமகன், விசேஷமாக மருமகள் புதிதாக வீட்டிற்குள் வரும்பொழுது இரு சாராரும் ஜெபத்துடன் கர்த்தரிடத்திலிருந்து பெறும் பொறுமையோடு, அன்போடு பழகுவதிலும், சிறு சிறு தவறுகளையும் பெரிதுபடுத்தாமலும், மன்னித்து மறக்கும் பண்புடனும் நடந்துகொள்வது மிகவும் அவசியம். ஏனென்றால், ஒருவரோடொருவர் இணைந்து போக கொஞ்ச நாட்கள் ஆகும். "எங்கள் வீட்டில் நாங்கள் இப்படித்தான் செய்வோம்" என்று பிடிவாதம் பண்ணாமல், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து இசைந்து போவது தான் கிறிஸ்துவின் சிந்தையாகும்.

> **கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;**
> **பிலிப்பியர் 2:5**

இவைகளையெல்லாம் மனதில் பதிய வைத்துக்கொண்டவர்களாய், தேவன் அருளும் தெய்வீக சமாதானத்தை காத்துக்கொள்ளும்பொழுது வெற்றியுள்ள குடும்ப வாழ்வை நிச்சயம் பெற்று மகிழலாம்.

சில குடும்பங்களில் வயது சென்ற பெரியோரால், சிற்சில சமயங்களில் பாடுகள் வரலாம். வீணான வம்பு வார்த்தைகளையெல்லாம் கேட்க நேரிடலாம். இதற்கெல்லாம் மனம் கலங்கி சோர்ந்துபோய், குடும்ப வாழ்வையே வெறுத்து, தாய் வீட்டிற்கு ஓடிப்போய் ஒளிந்துகொள்வது சரியேயல்ல!

ஒரு பெண்ணுடைய வாழ்வின் உதாரணத்தை சொல்லு கிறேன் கேளுங்கள். அவளுக்கு திருமணமாகிறது. புருஷன் மிகவும் நல்லவர். எனவே, சந்தோஷமாக வாழ்ந்து வந்தாள். அப்பொழுதுதான் ஒரு செய்தி வந்தது. அவளது மாமன், மாமி அவர்களோடு நிரந்தரமாக வந்து தங்கப் போகிறார்கள் என்பதுதான் அந்த செய்தி.

அதை அறிந்த அவளுடைய சிநேகிதிகள் சிலர், "ஐயோ! உன் மாமியார் சரியான சண்டைக்காரி ஆயிற்றே! எப்படி அந்த அம்மாவோடு நிம்மதியாக வாழப் போகிறாய்?" என்றார்கள். அவளோ, கொஞ்சமும் கலங்காமல், "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13) என்றாள். மாமியும், மாமாவும் வந்து சேர்ந்தார்கள். சில மாதங்கள் கடந்தபின்பு, ஒரு சாதாரணமான சிறு காரியத்தை பெரிய தாக்கி, மாமியார் சண்டைக்கு வரிந்து கட்டி எழுந்தபொழுது, மருமகள் "ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்" என்று முணு முணுத்துக் கொண்டே அடுத்த அறைக்குப் போய் கதவை சாத்திக்கொண்டு, கர்த்தரை நோக்கி மன்றாடி, சத்தமிட்டு துதிக்க ஆரம்பித்தாள். "அதற்குள் மாமியாரின் அதிகார சத்தம் மாறி, அமைதி எழும்பியதும், அவள் ஒன்றுமே நடவாததுபோல் வெளியில் வந்து, மாமியாரிடம் அன்புடன் பேசினாள். இது நாளடைவில் மாமியாரின் அன்பற்ற கடின உள்ளத்தையும்கூட மாற்றி, அந்த வீடு தெய்வீக சமாதானம் நிறைந்த வீடாக வெகு விரைவில் மாறியது.

இல்வாழ்க்கை என்பது வாழ்க்கையில் ஒருவருக்கொரு வர் துணையாக, ஒருவரையொருவர் அன்புடன் கருத்தாகக் கவனித்து, இணைந்து நடக்கும் இனிய வாழ்வுதான்! ஆனால், அதிலும் போகப்போக பல்வேறு பாடுகளும், நன்மைகளும் கலந்தே வருகின்றன என்பதுவும் ஒரு வேதனையான உண்மைதான்! அவ்வாறு எங்கள் வாழ்வில்

நாங்கள் கடந்து சென்ற கண்ணீரின் பாதைகளும், அவற்றி னூடே கர்த்தர் தமது கிருபையினால் அருளிச் செய்த அளவில்லாத ஆசீர்வாதங்களையும் அறிந்துகொள்ள அடுத்த அத்தியாயத்திற்குள் செல்வோமா?

* * * * *

புத்தக சாட்சி

அன்புள்ள சகோதரி ஸ்டெல்லா தினகரனுக்கு,

'நாளுக்கு ஓர் நல் வார்த்தை' (பஞ்சாபி) என்ற புத்தகம், பஞ்சாபி மொழி பேசும் மக்களுக்கு எவ்விதம் பயனுள்ளதாயிருக்கிறது என்பதை எழுத வாஞ்சிக்கிறேன்.

1) 83, 78 வயது நிரம்பிய வயதான தம்பதியர் சிங்கப்பூரில் வாழ்கின்ற னர். மூட்டு வலியினால் ஆலயம் செல்ல முடியாத இவர்கள், வீட்டில் இருந்த வாறே 'நாளுக்கு ஓர் நல் வார்த்தை' என்ற தினசரி தியான புத்தகத்தை தினமும் வாசிக்கிறார்கள். இதிலுள்ள வாக்குத்தத்தங்களை வைத்து பரிசுத்த வேதாகமத்திலுள்ள வசனங்களைக் கண்டுபிடிக்க அவர்கள் கற்றுக்கொண்டனர். இதை மற்ற பஞ்சாபி மக்களுக்கும் அறிமுகப்படுத்தி வருகிறார்கள்.

2) இப்புத்தகத்தை வாங்கிய சகோதரி ஒருவர், ஆண்டவரை அறியாத ஒருவருக்கு வெகுமதியாக இதைக் கொடுக்க, அதை பெற்றுக்கொண்ட அவர்கள் ஒருசில பக்கங்களை மட்டுமே வாசிக்க ஆரம்பித்த மாத்திரத்தில், ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தார். அவரோடுகூட, வீட்டில் வேலை செய்யும் பணிபெண்ணும் ஆலயத்திற்கு வந்தாள். அன்று வழங்கப்பட்ட செய்தி அவர்களை தொட்டது. ஆராதனை முடிந்ததும் இருவரும் ஜெபத்திற்காக முன்னே வந்தார்கள்.

இப்புத்தகத்தை ஆங்கிலத்திலிருந்து பஞ்சாபி மொழிக்கு மொழியாக்கம் செய்ய என்னை உந்திய ஆண்டவருக்கு என் நன்றி. நான் இப்புத்தகத்தை அநேகருக்கு அறிமுகம் செய்துவருகிறேன். அநேகர் இதன் ஆங்கிலப் பதிப்பையும் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டு வருகின்றனர்.

சகோதரி மன்னா – சிங்கப்பூர்

22 மார்ச், 2009.

(வாசகரே! சகோதரி மன்னா அவர்களைப் போல இதை வாசிக்கும் நீங்களும், 'நாளுக்கு ஓர் நல் வார்த்தை' என்ற புத்தகத்தின் மூலம் ஆசீர்வதிக்கப்படலாம். மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறலாம்).

3. பாடுகளும், பெற்ற நன்மைகளும்!

குழந்தைப் பேற்றில் குறைவும் பாடுகளும்

திருமணம் முடிந்தபின்பு சிலகாலம் முடிவதற்குள் மக்கள் சமுதாயம் கேட்கும் கேள்வி 'ஏதேனும் விசேஷம் உண்டா?' என்பதுதான். ஆம்! ஆண்டவரும் தம்பதியர் மீது மனமிரங்கி அடுத்து கொடுக்கும் தெய்வீக ஆசீர்வாதம் "குழந்தைப்பேறு" என்பதுதான்! எங்களையும் கர்த்தர் அவ்வாறே ஆசீர்வதித்ததினால் நானும் கர்ப்பம் தரித்தேன். "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதன்படியே மூன்றாம் மாதத்தில் எனக்கு கருச்சிதைவு ஏற்பட்டு எங்கள் குடும்பமே அதினிமித்தம் மனவேதனைக்குள்ளாகியது. இதற்கு இரண்டு காரணங்களை நான் கண்டுபிடித்தேன்.

திருமணமான புதிது! விசேஷமாக, கர்ப்பம் தரித்த எனக்கு எதிலெதிலெல்லாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் என்ற அறிவு இல்லாமலிருந்தது. மூன்று மாதம் முடிந்து நான்காம் மாதம் துவங்கும் நிலைமை. நானோ வீட்டைக் கழுவி சுத்தம் செய்து, மற்றும் பல கடினமான காரியங்களை அச்சமயத்தில் செய்யக்கூடாது என்பதை அறியாதிருந்தபடியால், அன்றே அந்த ஆசீர்வாதத்தை இழந்தவளானேன். இந்த பெரிய தவறு எனக்கு பெரிய இழப்பைக் கொண்டு வந்தபடியால், இன்றும் என்னிடம் வரும் கர்ப்பவதிகளுக்கெல்லாம், ஆரம்ப நாட்களில் எப்படி இளைப்பாறி, கவனமாக தங்கள் கர்ப்பத்தை காத்துக்கொள்ளவேண்டும் என்பதை போதித்து உதவி செய்கிறேன்.

மற்றுமொரு காரியம் என்னவென்றால், திருமண வாழ்வில் பணம் பற்றாக்குறையினால் வந்த வேண்டாத எண்ணங்கள். நாங்கள் இல்லற வாழ்வை ஆரம்பித்த நாட்களில் என் கணவருக்கு மிகவும் குறைவான ஊதியம்தான்

கிடைத்தது. இதை வைத்து மாதம் முழுவதும் குடும்பம் நடத்த வேண்டும். என் கணவரோ அந்த நிலையிலும் தசம பாகத்தை சரியாகக் கொடுத்துவிடுவார். ஆனால் அப்படிப் பட்ட பழக்கத்தை, தேவ நியதியை அதுவரை அறியாதிருந்த என்னை இந்த செயல் சற்று சிந்திக்க வைத்தது. இது அவசியமா? என்றும் எண்ண வைத்தது. கர்த்தருடைய காரியங்களில் பயபக்தி மிகவும் தேவை என்பதை அறியாத ஆரம்ப ஆவிக்குரிய நிலை! அதை ஓர் பாடமாக வாழ்க்கை யில் அறியும்படிக்குத்தான் அந்த இழப்பை நான் சந்திக்க வேண்டியதிருந்தது என்று என் உள்மனம் சொல்லியது. அன்றுமுதல், சம்பளம் வந்ததும், நானே என் கணவரிடம், "தசம பாகம் செலுத்திவிட்டீர்களா?" என்று கேட்டு உற்சாகத்தோடு, ஒருமனதோடு இருவரும் அதை செயல் படுத்த கர்த்தர் கிருபை செய்தார்.

> நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்.
>
> சங்கீதம் 119:71

என்று வேத புத்தகத்தில் நமக்காக எழுதப்பட்டிருப்பது எத்தனை உண்மை பாருங்கள். ஆகவே, உபத்திரவம் வழியாகக் கடந்து செல்லும்பொழுது, ஜெபத்துடன் நம் குறைவுகளை சரிசெய்து, நீதியாய் நடப்பது மிகமிக அவசியம்.

கர்த்தருக்கு கொடுப்பதால் ஆசீர்வாதம்!

ஆகவே, திருமணம் ஆன தம்பதியரே! நான் செய்த இந்த மாபெரும் தவற்றினை நீங்களும் செய்யாதிருங்கள். இருவரும் உங்கள் வருவாயைப் பெற்றவுடனே அதில் கர்த்தருக்கென்று செலுத்தவேண்டிய பத்தில் ஒரு பாகத்தை பயபக்தியுடனும், ஒருமனதுடனும் செலுத்திவிடுங்கள்.

> என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணி களைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ வென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.
>
> மல்கியா 3:10

என்ற வேத வசனத்தின்படி நீங்கள் கவனமாக இருக்கும் பொழுது உங்களை சம்பூரண ஆசீர்வாதங்களால் நிரப்புவார்.

> உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற் பலனாலும் கர்த்தரை கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். நீதிமொழிகள் 3:9,10

என்ற தேவனுடைய வார்த்தைகளையெல்லாம் அலட்சியம் பண்ணாமல், முதலில் கர்த்தரை கனம்பண்ணுவதில் மிகவும் கவனமாயிருங்கள். தமது வார்த்தையில் மாறாத கர்த்தர் அவ்விதமாகவே உங்களை அற்புதமாக வழிநடத்து வார். எங்களையும் அவ்விதமாகவே கரம்பற்றி நடத்தினார் என்பதை இன்று நினைத்தாலும் ஆச்சரியமாயிருக்கிறது.

இன்று, சில ஏழை எளிய மக்கள் தங்களுக்கே அதிகமான தேவைகள் இருந்தபொழுதிலும், கர்த்தருக்கென்று கட்டப் படுகிற ஜெபகோபுரங்களுக்கு, அல்லது மக்களுடைய ஆத்தும நன்மைக்கென்று ஒளிபரப்பப்படுகிற தொலைக் காட்சி நிகழ்ச்சிகளுக்கு தங்கள் சக்திக்கு மீறி முழுமனதுடன் பணம் கொண்டு வந்து கொடுக்கும்பொழுது, எங்கள் கண்கள் கண்ணீரால் நிரம்பும். ஆனால் வசதிபடைத்த மக்களோ, கர்த்தருக்கென்று கொடுக்க மனமற்றவர்களாய், "நான்" "எனது" என்று தங்களுக்கே செலவு செய்து முடிவில் மருத்துவ செலவுக்கும் மற்றும் வேண்டாத காரியங்களுக்

கும் செலவழித்து வேதனையில் உழலுவார்கள். ஆனால், ஆண்டவர் ஒரு ஏழை விதவையின் கொடுக்கும் அன்பைக் கண்டு, அவளைக் குறித்து பெருமையுடன் பேசியதைப் போல் (லூக்கா 21:3), ஊழியத்திற்கென்று சக்திக்கு மீறி முழு மனதுடன் கொடுக்கும் ஏழை மக்களைக் குறித்தும் அப்படியே புகழ்ந்து பேசுவார். மட்டுமல்ல! அவர்களை நிறைவாய் ஆசீர்வதித்து, அவர்கள் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியும், சமாதானமும் நிறைவாய் தந்து ஆசீர்வதிப்பார். பிரியமானவர்களே! உற்சாகமாய் கர்த்தருக்கென்று கொடுத்து, கர்த்தருடைய பிரியத்தை நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள். பேராசைப்பட்டு பெருநஷ்டமாகப் போகாதபடி, தாராளமாகக் கொடுங்கள்.

நான் சில காலம் வறுமை நிலையில் இருந்தபோது, மூன்றே புடவைகளை தைத்துத் தைத்து தடுமாறிக் கொண்டிருந்தேன். ஆனால் கர்த்தர் ஆசீர்வதித்தபிறகு, அதற்கு நேர் மாறாக நிறைவாய் நான் ஆண்டவருடைய அனுக்கிரகத்தை பெற்றபொழுது, அதிலிருந்து ஏழை எளிய மக்களுக்கு, ஊழியக்கார சகோதரிகளுக்கு வாரி வழங்கியபொழுது, கர்த்தர் மென்மேலும் குறைவின்றி நிரப்பிக் கொண்டேயிருந்தார். நீங்களும் தசமபாகம் மட்டுமின்றி, ஏழைகளுக்கு முழுமனதோடு இரங்கி, தேவ ஆசீர்வாதத்தை நிறைவாய் பெற்று வாழுங்கள்.

முதலில் தரித்த கர்ப்பம் ஆரம்பத்திலேயே இழப்பாக மாறியது. எனினும், கர்த்தர் எங்களை ஆற்றித் தேற்றியதால் ஆறுதல் பெற்றோம். அடுத்து மறுபடியும் கர்ப்பம் தரித்தேன். என் பெற்றோர், உறவினர்கள், மற்றும் யாவருமே, ஒரு குழந்தையை கவனிப்பதுபோல் என்னை கவனித்தனர். கர்ப்பவதியான எனக்கு என் தந்தை காட்டிய அன்பு எத்தனையெத்தனை! என்னை மருத்துவமனைக்குக்கூட அனுப்பாமல், ஒரு விசேஷித்த தாதியைக் (Nurse) கூடவே வைத்து, மிகுந்த கரிசனையோடு கவனித்தார்கள். என்

தாயைப் பற்றி சொல்லவே வேண்டாம். என் அன்பு சகோதரி எனக்கு உதவி செய்வதற்காகவே தன் குடும்பத்தை விட்டுவிட்டு என்னோடு வந்து தங்கி, என்னை கண்ணும் கருத்துமாக கவனித்துக்கொண்டார்கள். இவ்வளவாக பாது காப்பும், ஆதரவும் இருந்தும், 1.4.1961 அன்று பிறந்த அந்த குழந்தையும் வயிற்றிலேயே மரித்து வெளியே வந்தது. தகப்பனைப் போன்றே காணப்பட்ட அழகிய ஆண் குழந்தையை மரித்த நிலையிலே கண்டு நாங்கள் யாவரும் அடைந்த துன்பத்திற்கு அளவேயில்லை. கண்ணீர் மல்க யாவரும் நாட்களைக் கடத்தினோம்.

என் உள்ளம் இந்த முறை சுக்குநூறாக உடைந்தது. என் கணவர் தன் வீட்டிற்கு ஒரே மகன். ஒருவேளை எங்களுக்கு இப்படி சந்ததியே இல்லாமல் ஆகிவிடுமோ? எல்லோருக் கும் நான் ஒரு இழிச்சொல்லாக மாறிவிடுவேனோ? இப்பொழுதே எத்தனை பரிகாசம்! கடும்சொற்கள்! அலட் சிய வார்த்தைகள்! என்று எண்ணி தனிமையில், மனதிற்குள் கண்ணீர் வடித்தேன். அப்பொழுது ஆவிக்குள்ளாக நான் தேவ சமூகத்தில் என் வாழ்வை ஆராய்ந்தேன். அதின்மூலம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய, பயபக்தியுடன் கர்த்தருடைய வழிகளை வேத வசனத்தின்படியே பின்பற்றி னேன். அதோடுகூட நானும் என் கணவரும் ஒருமனதோடும், விசுவாசத்தோடும் கர்த்தரை நோக்கி மன்றாடினோம்.

அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்த காரியத்தைக் குறித் தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத் தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்.

மத்தேயு 18:19

என்ற வாக்குத்தத்தத்தின்படியே, நாங்கள் இணைந்து ஜெபித்த இந்த காரியத்தை கர்த்தர் நினைத்தருளினார்.

எனக்கு அன்பான தம்பதியரே, விசேஷமாக சகோதரர்களே! நீங்களும் அவ்வாறே கணவனும், மனைவியுமாக எந்தவிதமான குறைவின் மத்தியிலும், விசேஷமாக குழந்தை பாக்கியத்திற்காக இணைந்து ஜெபியுங்கள். கர்த்தர் தமது வார்த்தையில் மாறாதவரானபடியால், "உங்கள் காரியங்கள் யாவும் வாய்க்கும்படி நிச்சயம் அருள்புரிவார். அதை செய்யாமல், உங்கள் மனைவியை தள்ளிவிடுவதும், இதை காரணமாகக் காட்டி வேறொரு பெண்ணை நாடி செல்வதும் எத்தனை பயங்கரமானதும் கர்த்தருக்கு பிரியமில்லாததுமான காரியம் என்பதை எண்ணிப்பாருங்கள். நீங்கள் இருவரும்தானே ஒருவருக்கொருவர் ஆறுதல்.

நாங்கள் கண்ணீரோடு வேண்டிக்கொண்டதோடு, எங்களுக்கு குழந்தைப்பேறு அருளும்படி அநேக ஊழியர்களும் உபவாசத்தோடு ஜெபித்த ஜெபத்தை கர்த்தர் கேட்டு, நான் மறுபடியும் கர்ப்பம் தரிக்க கிருபை செய்தார். எட்டு மாதம் முடியும் நிலைமை. எங்கு பிரசவம் வைத்துக்கொள்வது? யாவருக்கும் ஒரே பயம்! கலக்கம்! ஏனென்றால், முந்தைய முறை எவ்வளவு கவனமாக இருந்தும் எவ்வளவு பெரிய இழப்பு!

என் சகோதரியும், அவர்கள் கணவரும் எப்பொழுதுமே தியாக உணர்வோடு எங்களுக்கு எல்லா விஷயத்திலும் உதவியாக இருந்தார்கள். 1961 ஆம் வருடம் என் சகோதரிக்கு 5 ஆண்டு இடைவெளிக்குப்பின் அவர்கள் தங்கியிருந்த மேட்டுப்பாளையத்தில் (கோவை மாவட்டம்) Dr. மீனாட்சி என்ற ஒரு அருமையான மருத்துவர் உதவியோடு எந்தவித பிரச்னையுமில்லாமல் ஒரு அருமையான மகனை பெற்றிருந்தபடியால், என்னையும் பிரசவத்திற்கு அங்கு வரும்படி அன்புடன் அழைத்தார்கள். அந்த மகன் பெயர்தான் Ernest என்பதாகும். இவர் இன்றும் "இயேசு அழைக்கிறார்" ஊழியத்தின் காரியங்களிலும், என் அன்பு கணவரை

கவனித்ததிலும், இப்பொழுது என்னை கவனிப்பதிலும் மற்றும் பல விஷயங்களிலும் எங்களுக்கு பெரும் துணையாக என் சொந்த மகனாகவே இருந்துவருகிறார். இவரது மனைவி ஜாக்குலின் அவர்களும் அப்படியே தன் உலக வேலையை உதறித் தள்ளிவிட்டு, "இயேசு அழைக்கிறார்" ஊழியத்தின் சேவையையே பெரிதாக எண்ணி, இருவரும் கர்த்தருக்காக வாழ்ந்து வருகின்றனர்.

என் அன்பு சகோதரி மற்றும் அவர்களது கணவரின் விருப்பப்படியே, நானும் என் பெற்றோரும் மேட்டுப்பாளையம் சென்றோம். அந்த நேரம் பார்த்து, என் சகோதரியின் கணவருக்கு கீழக்கரை என்ற தூர ஊருக்கு மாற்றுதலாகவே, அவர்களது தியாக உள்ளத்தின்படியே அவர் மாத்திரம் தனியே போய் சேர்ந்தார். மூத்த மகன் சாமுவேல் ஜெயக்குமாருக்கு 5 வயது. அவனையும் பள்ளியில் சேர்த்து கவனிக்க வேண்டிய நிலை. அவர்கள் செய்த தியாகம் எங்களால் மறக்க முடியாத ஒன்று! நாட்கள் உருண்டோடின. குழந்தை பிறக்க வேண்டிய நாட்கள் மருத்துவரால் கூறப்பட்டது. என் தகப்பனார் தன் முதிர் வயதினிமித்தம் அந்த நேரத்தில் உதவிக்கு என் கணவரை விடுப்பு எடுத்து வரும்படி கூற, நானும் அதை அறிவிக்க, அவரும் மிகுந்த கஷ்டத்தில் விடுப்பு எடுத்து வந்து சேர்ந்துவிட்டார். மருத்துவர் குறிப்பிட்ட நாளும் கடந்து சென்றுவிட்டது. என் கணவருக்கு விடுப்பு முடிந்து, திரும்பி வேலைக்கு செல்ல வேண்டிய நாளும் வந்தது. ஆனால் பிரசவ வலியோ கொஞ்சமும் வரவேயில்லை. நான் என்ன செய்வேன்? எல்லாப் பக்கமும் வசைவாங்கிக் கொண்டேன். ஆனால், என் அன்பு சகோதரியும், என் தாயாருமோ அந்த நிலைமையிலும் விசுவாசத்தில் வழுவாமல், பொறுமையோடும், அன்போடும் என்னை கவனித்தார்கள்.

அன்று 1962ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ஆம் நாள், காலை 11 மணிக்கு என் கணவர் மனவேதனையோடு

புறப்பட்டு சென்றார். அன்றே மதியம் 3 மணிக்கு எனக்கு பிரசவ வலி லேசாக ஆரம்பிக்க, செப்டம்பர் 4ஆம் தேதி மதியம் 2 மணிக்கு மகன் பால் தினகரனை வெள்ளை வெளேரென்று அழகான குழந்தையாக சுகப்பிரசவத்தில் கர்த்தர் எங்கள் கரத்தில் அருளினார். பிரசவிக்கும் நேரம், குழந்தை பிறந்துவிட்டது என்று எனக்கு தெரிந்தது. மருத்துவர் மீனாட்சி அவர்களிடம் நான் உடனே கேட்ட கேள்வி, "டாக்டர்! குழந்தை உயிரோடிருக்கிறதா?" என்பது தான். ஏனென்றால் கடந்த இரண்டு முறை கடந்துசென்ற இழப்பின் வேதனை என்னை அவ்வாறு கேட்க வைத்தது. அதைக் கேட்ட டாக்டர் அம்மாள் "ஸ்டெல்லா! ஏன் அப்படி கேட்கிறாய்? உனக்கு எவ்வளவு அழகான ஆண் குழந்தை பிறந்திருக்கிறான் பார்" என்று தூக்கிக் காண்பித் தார்கள். என் மனம் அப்பொழுதுதான் மகிழ்ச்சியினால் நிறைந்தது. நான் மட்டுமல்ல! அறையின் வெளியே ஆவலோடு காத்திருந்த என் சகோதரியும், தாயாரும்கூட அப்பொழுதுதான் குழந்தை பால் தினகரனின் அழுகை சத்தம் கேட்டு, கவலை நீங்கி, ஆனந்தமடைந்தனர். என் தகப்பனாரும் பேரனைப் பார்க்க ஓடோடி வந்தார்.

துக்கம் சந்தோஷமாக மாறிய நன்மை!

எங்கள் குடும்பத்தில் யாவருடைய சந்தோஷம் எப்படி இருந்திருக்கும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். மேட்டுப் பாளையத்தில் இப்படியிருக்க, கடலூரில் செப்டம்பர் 4ஆம் தேதி காலையில், கவலையோடு அலுவலகம் சென்ற என் கணவரை அவரது சக ஊழியர்கள் யாவரும் அன்போடு வரவேற்று, ஆறுதல்படுத்தினார்கள். மதியம் 3 மணி அளவில் மேனேஜர் அறைக்கு டெலிபோன் செய்தி வந்தது. அவருக்கும் யாவும் தெரியுமாதலால் உற்சாகத்தோடு, "தினகரன்! இங்கே உடனே வாரும்" என்று அழைக்க தொலைபேசியில் வந்த செய்தி "உங்களுக்கு ஒரு அழகான

ஆண் குழந்தை பிறந்திருக்கிறான். தாயும், சேயும் நலமாக இருக்கிறார்கள்" என்பதுதான். அவ்வளவுதான்! அலுவலகத்தில் சகோதரர் தினகரனுக்கு மட்டுமல்ல! மேனேஜர் முதல் யாவருக்கும் எல்லையில்லாத சந்தோஷம். வீட்டிலோ கேட்கவே வேண்டாம். தாத்தா துரைசாமி அவர்கள் தன் குடையைத் தூக்கிக் கொண்டு வெற்றி நடைபோட்டார் மேட்டுப்பாளையம் நோக்கி! ஆம்! ரயிலில் ஏறி அடுத்த நாள் பேரனைப் பார்க்க வந்துவிட்டார். சந்ததியில்லாமல் போய்விடுமோ என்று எண்ணிய எனக்கு, தாத்தா பேரனைப் பார்த்து கொஞ்சி மகிழ்ந்த காட்சி மிகுந்த மன நிறைவைக் கொடுக்க, கர்த்தரை மனமார துதித்தேன். சில நாட்கள் கழித்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு கடலூர் திரும்பினோம். எப்பொழுதுமே ரயிலில் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்தால் போதும் என்று கணக்குபோடும் என் தந்தை, பேரனை முதல் வகுப்பில் அழைத்து சென்றாரென்றால் அவருக்கு எவ்வளவு சந்தோஷம் என்று எண்ணிப் பாருங்கள்.

ஆறுதலின் மகனால் பெற்ற பேரின்பம்

> இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். சங்கீதம் 127:4

என்ற வசனத்தின்படியே, கர்த்தர் மகன் பால் தினகரனோடு நிறுத்திவிடாமல், மற்றொரு குழந்தையையும் கொடுக்க சித்தம்கொண்டார். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு நான் மறுபடியும் கர்ப்பவதியானேன். குடும்பத்தார் யாவருக்கும் எல்லையில்லாத மகிழ்ச்சி. அப்பொழுது மேட்டூர் அணை வங்கிக் கிளைக்கு மேனேஜராக என் கணவர் மாற்றப்பட்டார். அப்பொழுதுதான் அவ்வூரில் ஊழியத்தின் ஆரம்பநிலை! அப்பொழுதுதான் அவ்வூரில் ... அதிகமான பேர் பழக்கமில்லாத நிலை. அங்கிருந்து 40 மைல் தூரத்திலுள்ள ஈரோடு சி.எஸ்.ஐ. மருத்துவமனையில் பிரசவத்திற்காக சேர்க்கப்பட்டேன்; நவம்பர் திங்கள் 3-ஆம்

தேதி இரவு 9 மணிக்கு லேசான பிரசவ வலி வர அந்த அறைக்குள் அழைத்து சென்றனர் சில இளம் தாதியர்! ஆனால் பிரசவத்திற்கான வலியோ சரியாக வரவேயில்லை.

விடியற்காலை 3 மணி அளவில் அருகில் யாருமேயில்லாத தனிமை நிலையில், கர்த்தரை நோக்கி, ஆவியில் நிறைந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். "ஆண்டவரே! உமக்கு சித்தமானால் இப்பொழுதே பிரசவ வலி வந்து, சுகமாக நான் பிரசவிக்கவும், காலை 5 மணிக்கெல்லாம் என் அறைக்குள் போய்விடவும் அருள்செய்யும்" என்று ஜெபித்தேன். அதேபோன்று தேவ பிரசன்னம் என்னை நிரப்ப, நான் பரிசுத்த ஆவியில் நிறைந்து பெலனடைந்தேன். அவ்வளவுதான்! 20 நிமிடத்திற்குள்ளாக மருத்துவரோ அல்லது தலைமை தாதியரோ அருகில் இல்லாத சமயத்தில் கர்த்தரே குழந்தையை வெளியே அனுப்பினார். அவள், அண்ணனைப்போல் அமைதியாக வராமல், அழுது கொண்டே வெளியே வந்தாள். தாதியர் சரியான சமயத்தில் வந்து உதவிசெய்து, நான் விரும்பிக் கேட்டதுபோல் சரியாக 5 மணிக்கு என் அறைக்குள் போய் சேர்ந்தேன். கர்த்தர் என்னோடிருந்து, என்னை எல்லாவிதமான தீங்கிற்கும் தப்புவித்து என்னை கனப்படுத்தினார். ஆம்! நவம்பர் திங்கள் 4 ஆம் நாளன்று 1968 ஆம் ஆண்டு கர்த்தர் ஆறுதலின் மகளாகக் கொடுத்த இரண்டாம் குழந்தைதான் அன்பு மகள் ஏஞ்சல்! அவளுக்கு சிவந்த மேனியும், அழகிய ரூபமும் அருளிய ஆண்டவர், அவள் மூலம் எங்களை அளவில்லாமல் ஆற்றித்தேற்றினார். "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய பெலன் உண்டு" என்பதுவும், பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பதுவும், எத்தனை மேன்மையானது என்பதையும் நான் அந்நாளில் அறிந்துகொண்டேன்.

அன்பானவர்களே! கர்த்தரையே சார்ந்து நிற்கிற உங்கள் வாழ்விலும்கூட இப்படிப்பட்ட கண்ணீரின் பாதை,

பெற்றுக்கொள்ளும் படி அவர்களை உற்சாகப்படுத்துவது நம் ஒவ்வொருவர் மேலும், விசேஷமாக பெற்றோர்கள் மீதும் விழுந்த கடமை என்பதை உணர்ந்து, பயபக்தியுடன் இதில் கவனமாயிருங்கள்.

அப்பொழுது இப்படிப்பட்ட நெருக்கங்கள், போராட்டங்கள், நஷ்டங்கள், தோல்விகள் வாழ்க்கையில் வரும்பொழுது சோர்ந்துபோய், வாழ்க்கையையே வெறுத்துவிடும் நிலை வராமல், இரட்சகராகிய இயேசுவின் துணையோடும், பரிசுத்த ஆவியானவரின் பலத்தோடும்கூட நான் பெற்றதுபோல், எந்த விதமான காரியத்திலும் ஜெயம் பெற்று விளங்குவது எளிதான காரியமாயிருக்குமல்லவா?

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்கு பெலனுண்டு.
பிலிப்பியர் 4:13

ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்கு துணைநில்லும்; ... **II நாளாகமம் 14:11**

நானோ, ... கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், ... நிரப்பப்பட்டிருக்கிறேன். **மீகா 3:8**

இதைத்தான், "வாலிபரின் அலங்காரம் அவர்கள் பராக்கிரமம்" (*நீதிமொழிகள் 20:29*) என்று வேதம் சொல்கிறது. உங்களுடைய வாலிபப் பிள்ளைகள் இவ்விதமான

சீரைப் பெற்றவர்களாக இருப்பது பெற்றோருக்கும், பெரியோராகிய உங்களுக்கும், ஏன் குடும்பத்திற்கே பெருமையல்லவா? எங்கள் குடும்பத்தில் என் மகன் வாலிப வயதிலேயே இந்த தெய்வீக அனுபவங்களை பெற்றிருக்க, என் பேரப் பிள்ளைகள் சாம், ஷேரன் இருவரும்,

சாம், ஷேரன் இருவரும் அபிஷேகம் பெறும் காட்சி

தங்களுடைய தகப்பனைக் காட்டிலும் முன்னதாகவே மிக இளம் வயதிலேயே பரிசுத்த ஆவியினால் நிறைந்து, தேவ ஊழியத்தில் பங்கெடுப்பதும் எத்தனை களிகூருதலை எங்களுக்கு கொடுத்திருக்கிறது. அதேபோல், பெற்றோர், பெரியோர், வாலிபர் யாவரும் இந்த தெய்வீக அனுபவங் களைக் குறித்து பரிகாசம் செய்து, உங்கள் வாழ்வை பாவத் திற்குட்படப் பண்ணாமல், ஆண்டவரை உண்மையாக நேசித்து, ஆசீர்வாதம், அற்புதம் பெற்ற லாசருவின் குடும்பம் போலவும், நீங்களும் உங்களது வாலிபப் பிள்ளைகளுமாக "மேலான பரிசுத்த வாழ்வை" வாஞ்சித்து, நாடி, சகலவித மான இக்கட்டு சமயங்களிலும் சோர்வடையாமல், தேவாதி தேவனின் திரு பிரசன்னத்தின் நிறைவினால் தெய்வீக ஆசீர் வாதம் பெற்று மகிழுங்கள்.

பாடுகளில் பெற்றுக்கொண்ட நன்மைகளும், கற்ற உண்மைகளும்!

அன்பு மகன் பால் தினகரனுடைய வளர்ப்பில் நான் செலுத்திய கவனம் அதிகமாயிருந்தது. ஆனால் மகள் ஏஞ்சல் பிறந்தபொழுதோ, அப்பொழுதிலிருந்தே ஊழியத்தின் காரியங்களில் நான் அதிகம் ஈடுபாடு செலுத்த வேண்டியதாயிற்று. அந்த நாட்களில் ஏராளம் ஊழியர்களும் மற்றும் சகோதரரிடம் நேரடியாக ஜெபித்து செல்ல விரும்பும் மக்களும் எங்கள் வீட்டில் வந்து தங்குவார்கள். ஏனெனில், சகோதரருக்கு அப்பொழுது அலுவலக வேலை நாள் முழுவதும் மிகவும் அதிகமாக இருக்கும். இரவு 10 மணிக்கு மேல் தான் அவர்களோடு பேசி, ஆலோசனைகள் கூறி, ஜெபிக்க நேரம் இருக்கும். ஆகவே, எனக்கு எப்பொழுதும் சமையல் வேலை இருந்துகொண்டேயிருக்கும். மகளைப் பெற்றெடுத்து வீட்டிற்கு வந்தவுடனேயே வேலை ஆரம்பித்து விட்டது.

ஒருமுறை அதிக களைப்பினிமித்தம் சற்று சோர்வுடன் சகோதரரிடம் கூறினேன். அவர்களோ "இது உனக்கு ஆண்டவர் கொடுத்த அருட்பணி. நீ அதை சந்தோஷமாக செய்ய வேண்டும். கர்த்தர் உன்னை பெலப்படுத்துவார்" என்றார்கள். எந்தவிதமான உதவியுமின்றி, நானே சகலத்தையும் செய்யவேண்டியது சற்று கடினமாக இருந்தபொழுதிலுங்கூட, சகோதரர் சொன்ன வார்த்தையினிமித்தம், அதன் பிறகு, ஜெபம் செய்து தேவபெலனோடு, ஸ்தோத்திரம் செய்து, ஸ்தோத்திரப் பாடல்களை பாடிக்கொண்டே கர்த்தர் எனக்கு கொடுத்த பணியை தொடர்ந்து செயல்படுத்தினேன். பிறகு என்ன நடந்தது தெரியுமா? அந்த ஊரில் உள்ள பெரியோர் சிலர் என்னிடம் வந்து, "சகோதரியே! நீங்கள் இத்தனை நாட்கள் பொறுமையோடும், தனித்து நின்றும் செய்த இந்த நற்பணியினை நாங்கள் எல்லோரும் கவனித்துக் கொண்டுதானிருந்தோம். இனி நாங்கள் வந்து உங்களுக்கு

உதவிசெய்வோம்" என்று சொல்லி, என்னை வேலை செய்யவிடாமல், முதலில் உட்கார்ந்து சாப்பிட வைப்பார்கள். ஆம்! கர்த்தர் நம் உண்மையான தியாகங்களைப் பார்த்து, எவ்வளவாய் நம்மை உயர்த்துகிறார் என்பதை நான் அறிந்து கர்த்தரை மனதார ஸ்தோத்தரித்தேன்.

சில நாட்களில், சகோதரர் அவர்கள் அலுவலகத்திலிருந்து இரவு வெகுநேரம் தாமதித்துதான் வருவார் என்று அறிந்து சிலர் இரவில் 9 மணிக்குக்கூட வெளியூர்களிலிருந்து புறப்பட்டு வருவார்கள். அந்த நாட்களில், அந்த ஊரில் இரவு 8½ மணிக்கெல்லாம் சிற்றுண்டிசாலைகளையெல்லாம் அடைத்துவிடுவார்கள். எனவே, இரவில் எத்தனை மணிக்கு ஜனங்கள் வந்தாலும், சமையல் செய்து அவர்களை போஷிக்கவேண்டிய பல நாட்களை நான் சந்தித்திருக்கிறேன். அந்த ஊரில் புதன்கிழமை தோறும் சகோதரர் அவர்கள் செய்தி கொடுக்கும்படி ஒரு ஊழியர் தன் சபையில் ஒழுங்கு செய்து கொடுத்தார். அந்நாட்களில் அநேகர் அக்கூட்டங்களில் தேவனுடைய அளவற்ற ஆழமான அனுபவங்களை பெற்று மகிழ்ந்தனர். அக்கூட்டங்களில் பங்கெடுக்க அநேக மக்கள் அருகிலிருந்த பல ஊர்களிலிருந்தும் வருவார்கள். திரும்பிப் போக காலம் கடந்துவிடும். வாகன வசதி இராது. எங்கள் வீட்டில்தான் வந்து தங்குவார்கள். எத்தனை பேர் வருவார்களென்று தெரியாது. கூட்டம் முடியுமுன் நான் வீட்டிற்கு வந்து, சமையல் செய்து, அவர்கள் வந்தவுடன் அவர்களையெல்லாம் சாப்பிட வைத்து முடிப்பதற்கும், அதன்பிறகு அவர்கள் சகோதரர் தினகரனோடு அமர்ந்து, பல காரியங்களை வினவவும், ஜெபிக்கவும் நேரம் சரியாக இருக்கும். அப்படி இப்படி என்று வெகுநேரம் தாமதித்துத் தான் படுக்க செல்வோம்.

பின்னர் அதிகாலை 4 மணிக்கெல்லாம் அவர்கள் ஊர் திரும்புவார்கள். நானும் இரவில் எவ்வளவு நேரம் தாமதித்து படுக்கைக்கு சென்றாலும், அதிகாலையில் எழுந்து அவர்களை

கவனித்து அனுப்புவேன். களைப்புடன் உறங்கிக்கொண்டிருக்கும் என் கணவரை தொந்தரவு செய்யமாட்டேன். இந்த விதமாக அந்நாட்களில் கர்த்தர் அருளிய பொறுமையுடனும், "இது கர்த்தருடைய சேவை" என்று எண்ணி செயல்பட்டதாலும், இன்று என் கணவர் என்னைவிட்டு கடந்து சென்ற பொழுதிலும், என்னை "அம்மா, அம்மா" என்று கவனித்துக் கொள்ள ஏராளம் பிள்ளைகளை ஆண்டவர் கொடுத்திருக்கிறார். எனக்கு சாப்பாடு செய்து கொடுத்து, அன்போடு போஷிக்க எத்தனையெத்தனையாக குடும்பங்களை, அன்பு மகள்மாரைக் கொடுத்து ஆண்டவர் ஆசீர்வதித்திருக்கிறார்.

அன்பான சகோதரிகளே! கர்த்தர் உங்களை இவ்விதமாக பல்வேறு விதங்களில் ஊழியங்களுக்கு அழைப்பு கொடுக்கும்பொழுது முறுமுறுக்காமல் அந்த ஊழியங்களை செய்ய உங்களை ஒப்புக்கொடுங்கள். கர்த்தர் அவைகளையெல்லாம் கவனிப்பார். ஏனெனில், அவர் உங்களுடைய உள்ளத்தின் ஆழங்களை நன்கு அறிபவர் (சங்கீதம் 139:23, வெளி 2:23). அதினிமித்தமாக, நீங்கள் உங்களை தாழ்த்தும்பொழுது, ஏற்ற சமயம் நீங்கள் நினையாத அளவுக்கு உங்களை உயர்த்தி கனப்படுத்துவார். உங்களையும் தமது ஊழியத்தில் உபயோகப்படுத்துவார்.

சில நேரங்களில் சாப்பிட வருபவர்களின் எண்ணிக்கை 5 பேர் என்பார்கள். ஆனால், வருபவர்களோ 12 பேராக இருப்பார்கள். அப்படிப்பட்ட பல சந்தர்ப்பங்களில் 5 அப்பம் 2 மீனைக் கொண்டு 5000 பேருக்கு மேலாக மக்களை திருப்தியாக போஷித்த ஆண்டவர், வந்த அத்தனை பேரையும் அதிசயமாக திருப்தியாக போஷித்து அனுப்பும் விந்தையையும் நான் கண்டிருக்கிறேன். கர்த்தருடைய செயல்தான் எத்தனை அதிசயமானது! அற்புதமானது! என்பதையெல்லாம் கிறிஸ்துவுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்த நான் கற்றுக்கொள்ள தேவன் என்னை வழிநடத்தினார். மற்றொரு சமயம், எல்லோரும் திருப்தியாக உணவு அருந்தி

சென்றுவிட்டபின், எனக்கு உண்பதற்கு ஒன்றுமே மீதிப் படாத வெறுமையான சூழ்நிலை. அந்த நிலையிலும் வெறும் பாத்திரத்தை நான் ஆண்டவருக்கு நேராக உயர்த்தி, "ஆண்டவரே! இன்று முழுவதும் கஷ்டப்பட்டு உழைத்த எனக்கு இப்பொழுது சாப்பிடுவதற்கு ஒன்றுமேயில்லை. இந்த தியாகத்தை செய்ய நீர் கொடுத்த தருணத்திற்காக உமக்கு நான் நன்றி செலுத்துகிறேன். உமது ஞாபகப் புத்தகத்தில் இதை நீர் எழுதிவைத்துக்கொண்டு, என்னை ஆசீர்வதிக்க வேண்டும்" என்று சிறுபிள்ளைபோல் ஜெபித் தேன். ஆனால் அந்த எளிய ஜெபத்தையும் கர்த்தர் கேட்டு, அதன்பிறகு ஒருநாளும் அப்படி நேரிடாமல், "என் பாத்திரம் நிரம்பி வழியும்படியாக" இன்று வரை வழிநடத்தி வந்திருக் கிறார். நான் இதை ஏன் எழுதுகிறேன் என்றால், இன்று ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்ட அநேகர், இவ்வித குறைபாடுகளின் மத்தியில் கடந்துசெல்லும்பொழுது, முறுமுறுக்காமல், கர்த்தர் செய்யும் அதிசயங்களை கண்டு, அவருடைய சித்தத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே. அதினிமித்தம் கர்த்தர் எத்தனையோ மடங்காக ஆசீர்வாதங்களை உங்கள் வாழ் விலும் அருளிச் செய்வார்.

இவ்விதமாக மகள் எஞ்சல் பிறந்த நாளிலிருந்தே ஆண்டவரின் பணி என் வாழ்வில் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து விட்டது. அதன்பிறகு சகோதரருக்கு கடிதங்கள் அதிகமாக வரவே, அந்த பணியிலும் நான் தொடர்ந்து செயல்பட ஆரம்பித்ததால், மகள் பால் நிலைமையை கருத் தாக கவனித்துபோன்று, மகளோடு அதிக நேரம் செல வழிக்க இயலவில்லை. எனினும் அவள் எங்களுக்கு "ஆறுதலின் மகளாக" இருந்த சந்தோஷத்தைக் கொடுத்து எங்களை உற்சாகப்படுத்தும்படி கர்த்தர் கிருபை புரிந்தார். விசேஷமாக, சகோதரர் அவர்கள் வியாதியினிமித்தம் அதிக மாய் பெலவீனப்பட்ட போது, அவளுடைய குழந்தை முகம்,

அவளுடைய செய்கைகள், எங்களை கண்ணீரின் மத்தியில் வெகுவாய் ஆறுதல்படுத்தியது.

அதன்பிறகு ஊழியத்தினிமித்தம் சகோதரர் தினகரனுக்கு உதவியாயிருக்கும்படி நான் எல்லா இடங்களுக்கும் அவருடன் சென்றபொழுது, படிப்பினிமித்தம் பிள்ளைகளை சிறு வயதிலேயே தனியே விட்டுவிட்டு செல்லவேண்டிய நாட்களில், "அம்மா! அப்பாதான் போகிறார்கள். நீங்கள் என்னோடு இருக்கக்கூடாதா?" என்று கவலைப்படுவாள். நாங்கள் புறப்படும் சமயம் தலைவலி, ஜுரம் எல்லாம் அவளுக்கு உடனே வந்துவிடும். என் உள்ளம் அப்படியே சுக்குநூறாக உடைந்து விடும். ஆனால், ஆண்டவருடைய ஊழியத்தின் முக்கியத்துவத்தை அடுத்த கணம் நினைப்பேன். மகளிடம், "அம்மா! ஆண்டவருக்காகத் தான் அம்மாவும், அப்பாவுடன் சேர்ந்து போக வேண்டியதாயிருக்கிறது. நீ இந்த தியாகத்தை இந்த இளம் வயதில் செய்கிறபடியால், கர்த்தர் உன்னை பிற்காலத்தில் அதிகம் ஆசீர்வதிப்பார்" என்பேன். பின்பு பேசாமலிருந்துவிடுவாள்.

அந்த சிறு பிராயத்தில் என் சகோதரியும், என் இளைய சகோதரன் வீட்டாரும்தான் அவளிடம் அதிக பாசம் காண்பித்து கவனித்துக் கொள்வார்கள். ஆனால் வாலிப வயதிலேயோ வீட்டிலேயே இருக்க விரும்புவாள். பாவம்! அந்நாட்களில் தனிமை அதிகமாக அவள் உள்ளத்தை வாட்டியது. நாங்கள் ஊரிலிருந்து திரும்பி வந்ததும், ஓடோடி வந்து மிகுந்த மகிழ்ச்சியுடன் எங்களை கட்டிப்பிடித்து மகிழுவாள். ஊழியத்தின் பொறுப்புகள் எனக்கு அதிகமாக ஆரம்பித்ததால், அவள் பள்ளியிலிருந்து வந்தபிறகும்கூட, ஊழியத்தின் காரியங்களிலேயே நான் முழுமனதுடன் ஈடு பட்டதால், அவளோடு செலவழிக்க எனக்கு நேரமேயிருக் காது. இரவில் சாப்பிடும்பொழுதுதான் யாவரும் ஒன்று சேர்ந்து சந்தோஷமாக சாப்பிடுவோம். அந்த நேரமெல்லாம் அவள் ஒவ்வொருவரிடமும் குறும்பு செய்து, கொஞ்சி

மகிழுவாள். அந்த நேரம்தான் எங்கள் அனைவருக்கும் இன்பமான நேரமாயிருந்தது.

இந்த நிலையில் அவள் 12 ஆம் வகுப்பு பரீட்சை எழுதும் நேரம்! பல அன்பான சகோதரிகள் அவள் பாடவிஷயத்தில் உதவிசெய்து அவளை கவனிக்க முன்வந்தனர். அவள் அரசாங்க பரீட்சை எழுதும் அந்த சமயத்திலும்கூட மலேசியாவிற்கு ஊழியம் செய்ய நானும், சகோதரரும், மகனும் சென்றுவிட்டோம். மார்ச் மாதக் கடைசியில் பரிட்சையை முடித்துவிட்டாள். அவளை மலேசியாவிற்கு எங்களிடம் வரவழைக்க, பெற்றோராகிய எங்களுக்கு மிகுந்த ஆவல்! மகன் பால் தினகரனோ "இன்னும் 4 நாட்கள் தான்! வீடு திரும்பப் போகிறோம். எதற்காக வீண் செலவு" என்று கூறியதால், அதுவும் சரிதானே என்று நாங்களும் பேசாமல் விட்டுவிட்டோம். அந்த சமயத்தில் ஒருநாள் காலைக்கூட்டம் முடிந்து, தனிமையில் நான் நின்று கொண்டிருந்தபொழுது, ஒரு பெரியவர் என்னிடம் வந்து, "அம்மா! உங்கள் மகள் ஏஞ்சல் எங்கே? அவளும் வந்து, இங்கு கர்த்தர் செய்கிற அதிசயங்களையெல்லாம் பார்க்க வேண்டுமே" என்று சொல்லி சென்றுவிட்டார். இது எனக்கு ஆண்டவரே வந்து கூறியதுபோல் இருந்தது. உடனே சகோதரர் அவர்கள் அங்குமிங்குமாகப் பேசி, அன்று இரவே அவள் புறப்பட்டு வருவதற்கு ஏற்பாடு செய்தார்.

அங்கு வந்த அவள், ஊழியத்தின் மகத்துவத்தை யெல்லாம் தன் சொந்த கண்களால் நேரில் கண்டபொழுது, தன் வாழ்வையும் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று அர்ப்பணிக்கும்படி கர்த்தர் அருள்புரிந்தார்.

மலேசியாவில் ஒரு கூட்டத்தில் சகோதரர் தினகரன் அவர்கள் செய்தி கொடுத்து முடித்து ஜெபிக்கும் வேளையில், அவர்கள் ஆவியினால் நிறைந்து இவ்விதமாய் கூறினார்கள்: " 'ஜெசி' என்னும் ஒரு பெண் தன்னுடைய பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டு மனம்கசந்து அழுதுகொண்டிருக்கிறாள்.

கர்த்தர் அவளை மன்னித்து தன் மகளாக ஏற்றுக்கொள்கிறார்" என்றார். கூட்டத்தின் முடிவில், மக்கள் சாட்சி பகரும் நேரத்தில் ஆறு பெண்கள், 'நான் தான் அந்த ஜெசி' என்று மேடையில் வந்து கூறினார்கள். இச்சமயம் மகள் ஏஞ்சல் எல்லோரையும்போல கூட்டத்தினருடன் அமர்ந்திருந்தாள். அவள் அருகில் அவளைப் போன்றே ஒரு வாலிபப் பெண், முகத்தை கைகளால் மூடி அழுதுகொண்டேயிருந்தாள். திரும்பவுமாக சகோதரர் அவர்கள் மைக்கிற்கு வந்து, "'ஜெசி' என்ற பெயர் கொண்ட ஆறு சகோதரிகள் சாட்சி சொன்னாலும், ஆவியானவர் குறிப்பிட்டது ஒரு வாலிபப்

மகள் ஏஞ்சல், கூட்டத்தில் அமர்ந்திருக்கும் காட்சி – மலேசியா

பெண் தான்" என்றார்கள். அவ்வளவுதான், மகள் ஏஞ்சல் தன் அருகில் அழுதுகொண்டிருந்த "ஜெசி" என்ற அந்த வாலிபப் பெண்ணை எழுப்பி, மேடைக்கு சென்று, தேவனை மகிமைப்படுத்தும்படி கூறினாள். அந்த பெண்ணும் அவ்வாறே மேடைக்கு போய், தன்னோடு தேவன் பேசியதை சாட்சியாகக் கூறினாள். சகோதரரும் ஆவியில் நிறைந்து, அந்த பெண் தான் 'தேவன் அழைத்த பெண்' என்று கூறி

அவனுக்காக ஜெபித்தார். அவன் செய்த இந்த சிறிய ஊழியமானது அவனுக்கே ஆசீர்வாதமாக அமைந்து, அவனுடைய வாழ்க்கையையே தலைகீழாய் மாற்றிவிட்டது. மிகுந்த மகிழ்ச்சியோடு மே 6ஆம் தேதி ஊர் திரும்பினோம்.

தொடர்ந்து மே 11ஆம் தேதியன்று நடந்த "இயேசு அழைக்கிறார்" ஸ்தோத்திர ஜெபக் கூட்டத்தில் மலேசியா கூட்டங்களைக் குறித்து அழகாக சாட்சி கொடுத்து, தேவனை மகிமைப்படுத்தினான். பின்பு 18ஆம் தேதி ஞாயிறன்று பேரின்பப் பெருவிழாவின் கடைசி நாள் கூட்டத்தில் அன்பு சகோதரர் ரிச்சர்ட் டேவிட் அவர்களின் அன்புக் கட்டளைக்கு இணங்கி, சுமார் இரண்டு லட்சம் மக்கள் திரள்முன் மேடையில் அருமையாகப் பாடினான். அப்பொழுதுதான் மலேசியாவிலும், சென்னையிலும் அவன் விருப்பத்திற்கிணங்க ஏராளம் புதிய உடைகளை வாங்கிக் கொடுத்தேன். என்னோடு எப்போதும் நெருக்கமாக ஒட்டிக் கொள்வான். பக்கத்தில் வந்து ஆசையோடு அமர்ந்துகொள்வான். நாங்கள் இருவரும் ஒரே நிறமுள்ள ஆடை அணிய என்னை உற்சாகப்படுத்துவான். ஜோடிகளைப் போல் இருவரும் ஒருமித்து அகமகிழ்ந்து கொண்டிருந்த நாட்கள் அது.

கொடிய இழப்பு

அடுத்து வந்த கண்ணீரின் பாதையும், இவைகளைக் காட்டிலும் மேலும் பயங்கரமான பாடுகள் நிறைந்ததாகவே இருந்தது. சகோதரர் தினகரனிடம் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றினைக் கட்டி எழுப்பும்படி 1981ஆம் ஆண்டிலும், மறுபடியும் 1984ஆம் ஆண்டிலும் கர்த்தர் தொடர்ந்து பேசினார். சகோதரர் வங்கியில் பணிபுரிந்து வந்ததால், கல்லூரியின் காரியங்கள் யாவும் அவருக்கு புதிதானபடியால், கல்லூரி காரியங்களில் சம்பந்தப்பட்ட (Educational Field) பல நண்பர்களை அழைத்து அதைக் குறித்து

விசாரித்தார். அவர்கள் அத்தனைபேரும் கர்த்தர் வெளிப் படுத்திய இந்த நல்ல காரியத்திற்காக மிகவும் சந்தோஷம டைந்தார்கள். ஆனால் அதே நேரத்தில், அதில் பற்பல பாடுகள் இருக்குமே என்று எண்ணி, அவர்களில் அநேகர் "சகோதரரே! இது மிகவும் கடினமான காரியம். தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிப்பதென்றால் ஏறக்குறைய 12 கோடிக்குமேல் பணம் தேவைப்படும். அதுமட்டுமின்றி உங்களிடம் பணமே இல்லாத சூழ்நிலை வேறு! மற்றும் பல ஏராளமான பிரச்னைகள் இதில் உண்டு. எனினும் கர்த்தர் உங்களை நடத்துகிறபடி செய்யுங்கள்" என்று கூறி விட்டனர். ஆனால் அடுத்த பக்கம் கர்த்தர் தம் கட்டளையை விரைவில் நிறைவேற்றும்படி கூறியதை செயல்படுத்தாமல் விருதே இருக்கவும் சகோதரரால் முடியவில்லை. சரி! பணம் இல்லாமல் அடுத்து என்ன செய்வது? வங்கிகள் எல்லாம் "நீங்களே வங்கியில் பணிபுரிபவர் தானே! உங்க ளுக்கு தெரியாததென்ன?" என்று கூறி வங்கிக் கடனுதவி செய்ய மறுத்துவிட்டனர். என் அன்பு கணவர் எப்பொழுதும் போல் உபவாசத்துடனும், ஜெபத்துடனும், கர்த்தர் தமது தெய்வீக வழியைத் திறக்க இரவும் பகலும் ஜெபித்துக் கொண்டேயிருந்தார். முடிவில் தேவ கிருபையினால் எப்படியோ ஒரு வங்கி மட்டும் நேரே வந்து பார்க்கும்படி கூற, அதன் தலைமைஸ்தலம் இருக்கிற மங்களூர் பட்டணத்திற்கு செல்ல புறப்பட்டோம்.

அதற்கு முந்தைய இரவு ஏறக்குறைய 10½ மணி இருக்கும். "நான்தான் படித்து முடித்துவிட்டேனே! இன்னும் ஏன் என்னை தனிமையாக விட்டு செல்கிறீர்கள்? நானும் கூட வருவேன்" என்று குழந்தையைப் போல ஒரே பிடிவாதம் பிடித்தாள். அவ்வளவுதான், சகோதரருக்கு மனம் கேட்கவில்லை. எப்படியோ ஒழுங்குசெய்து, எங்களோடு அவளையும் அழைத்து செல்ல ஏற்பாடு செய்தோம். தன்னுடைய எல்லாப் புது துணிகளையும்,

பொருட்களையும் எடுத்து வைத்துக்கொண்டு மிகுந்த சந்தோஷமாக கிளம்பினாள்.

காலை 6.15க்கு மணிக்கு விமானம் புறப்படும் நேரம். விமான நிலையத்திற்கு நானும், சகோதரரும், மகளும், என் சகோதரியின் மகன் Ernest-ம் காரில் புறப்பட்டோம். விமான நிலையம் அடைய சற்று முன்புதான் அந்த பயங்கர விபத்து கண்மூடி கண் திறப்பதற்குள் நடந்துவிட்டது. மிகுந்த சந்தோஷத்தோடு எங்களோடு புறப்பட்டு வந்த 17½ வயது நிரம்பிய அன்பு மகள் அதிகமாய் பாதிக்கப்பட்டு உடனே மயக்க நிலையிலானாள். அருகிலிருந்த ஒரு சிறிய மருத்துவமனையில் சேர்க்கத்தான் நேரமிருந்தது. மகளுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருந்ததால், ஆண்டவரை நோக்கி நான் கத்திக் கதறினேன். "ஏன்" என்ற கேள்விக்கு பதிலே இல்லாமல், என் அன்பு மகள் எங்களைவிட்டு நிரந்தரமாய் பிரியும் நிலையில் இருந்தாள். மனம் நொறுங்குண்டது.

சகோதரருக்கு வலது தோளில் அவளுடைய தலை
வேகமாக அடிபட்டு, பயங்கர வேதனை. எனக்கு நெற்றியில்
அடி! இரத்தம் கொட்டியது. மகன் Ernestக்கு பல்லெல்லாம்
உடைந்து, முதுகில் வேறு பலத்த அடி. எனவே குற்றுயிராய்
கிடந்த மகளை, மகன் பொறுப்பில் விட்டுவிட்டு, எங்களை
வேறு மருத்துவமனையில் கட்டாயப்படுத்தி சேர்த்துவிட்ட
னர். மகள் உயிர்போகும் நிலையில் நான் பார்த்தபொழுதி
லும், "கர்த்தர் அப்படி இடம் கொடுக்கமாட்டார். நிச்சயம்
அவள் உயிரோடு எழுந்திருப்பாள்" என்ற முழு நிச்சயத்
துடன், நானும், சகோதரரும் மருத்துவமனையில் விசுவா
சத்துடன் இணைந்து ஜெபித்துக்கொண்டேயிருந்தோம்.
ஒவ்வொருநாளும் மகனிடம் கேட்போம். பாவம்! தன்
தங்கையின் காரியங்களை மறைத்து, முகத்தில் ஒன்றையும்
காண்பிக்காமல், "அவள் அங்கிருக்கிறாள், இங்கிருக்கிறாள்"
என்று சமாளிப்பான். ஆனால் அங்கு நடந்ததென்ன?
நாங்கள் அடுத்த மருத்துவமனைக்கு வந்துவிட்டபின்,

அவள் ஆண்டவரண்டையில் சென்றுவிடவே, செய்வதறியாது, முதலில் எங்கள் சொந்த வீட்டில் கொஞ்ச நேரமும், பின்பு சவக்கிடங்கில் (Mortuary) அவளை அனுமதித்துவிட்டு, பின்பு அனுதினமும் அங்கு சென்று பற்பல ஊழியர்களுடன் அவள் உயிர்பெற மாட்டாளா? என்று விசுவாசத்தோடு போராடி ஜெபித்து வந்தான்.

கடைசியில் பல முதிர்ந்த போதகர்களின் ஆலோசனையின்படி, வீட்டுக்கு கொண்டுவந்துவிட்டு, எங்களுக்கு அவளுடைய மரண செய்தியை சொல்லிவிடும்படி, பல போதகர்களோடு வந்தான். செய்தியைக் கேட்ட எங்கள் உள்ளம் சுக்குநூறாக உடைந்தது. கண்ணீரோடு வீட்டுக்கு உடனடியாக புறப்பட்டு சென்றோம். மகளின் உயிரற்ற சடலத்தைப் பார்த்து, அப்பொழுதும், ஆண்டவர் யவீருவுக்கு, நாயீன் ஊர் விதவைக்கு வேதாகம நாட்களில் மனம் இரங்கி பிள்ளைகளுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தது போல, என் மகளுக்கும் கொடுக்கமாட்டாரா? என்று கதறிக் கதறி கர்த்தரை நோக்கிக் கூக்குரலிட்டேன். ஆனால், கர்த்தருடைய சித்தம் வேறாயிருக்க, காலை விடிந்துவிடவே, அடுத்து செய்ய வேண்டியவைகளை கவனிக்கும்வரை மறுபடியும் சவக்கிடங்குக்கே கொண்டு சென்றுவிட்டனர். இதை எழுதுகிற இந்த நாளில் ஏறக்குறைய 24 ஆண்டுகள் கடந்துவிட்ட பொழுதிலும், இன்றும் என் நெஞ்சே வெடித்துவிடும் போல் தாங்க முடியாத வேதனை என்னை வாட்டுகிறது.

அதன்பிறகு அடக்க ஆராதனைக்கு ஏற்பாடு செய்தனர். ஏராளம் மக்கள் கண்ணீருடன் கூட்டம் கூட்டமாக வந்து கலந்து கொண்டனர். அந்த ஆராதனையில் மதிப்பிற்குரிய போதகர் சுந்தரம் அவர்கள் செய்தியளித்தபொழுது, "மகள் ஆண்டவரிடம் இருக்கிறாள். ஆகவே நாம் கவலைப்பட்டு அழுது கலங்க வேண்டாம். யார் யார் அதை விசுவாசிக்கிறீர்களோ, உங்கள் கைகளை தேவனுக்கு நேராக உயர்த்தி கர்த்தருக்கு அல்லேலூயா என்று சொல்லி, அவரை மகிமைப்

படுத்துங்கள்" என்று கூறிய பொழுது, என்னையுமறியாமல், கரம் உயர்த்தி கர்த்தரை நானும் மகிமைப்படுத்துமளவிற்கு, பரிசுத்த ஆவியானவரின் பெலன் என்னை அவ்வளவாய் அந்த நிலைமையிலும் தாங்கியது.

அன்பானவர்களே! விசேஷமாக என் சகோதரிகளே! நீங்களும் இந்தவிதமான கடின சூழ்நிலைகளின் வழியே கடந்து செல்லும்பொழுது பரிசுத்த ஆவியானவர் அருளும் தெய்வீக பெலனால் நிரம்பி ஆறுதல் பெறுங்கள். அதோடு கூட, இந்தவிதமான தாங்க முடியாத கண்ணீரினூடேயும் தெய்வ சமாதானம் நிறைந்த வாழ்வை அன்று ஆண்டவர் அருளினார். அதினிமித்தம் இன்று, எங்களைப் போல் தங்கள் அன்பானவர்களை மக்கள் இழந்து தவிக்கும் வேளையில், என்னிடம் ஆறுதலுக்காக ஓடி வருகின்றனர். இதைத்தான்,

> தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே,
> எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு
> நாங்கள் ஆறுதல்செய்ய திராணியுள்ளவர்களாகும்படி,
> எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே
> எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர். II கொரிந்தியர் 1:4

என்று வேதமும் விளக்குகிறது.

சகலவிதமான ஆறுதலின் தேவன்!

ஆம்! கிறிஸ்துவினுடைய பாடுகள் பெருகும்பொழுது, கிறிஸ்துவினாலே ஆறுதலும் பெருகுகிறது. எங்களைப் போன்று இழப்பின்மூலம் பாடுபடும் அருமையானவர்களே, நீங்களும் இவ்வண்ணமே பரிசுத்த ஆவியின் பெலத்தினால் உங்களை தேற்றிக்கொள்ளும்பொழுது, கர்த்தர் உங்களையும் அநேகருக்கு ஆறுதலின் பாத்திரமாக எடுத்து பயன்படுத்துவார். இதைத்தான் ஆண்டவரும்,

> என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; ஏசாயா 40:1

என்று கூறுகிறார்.

இன்று அநேக பெண்கள், "அம்மா! அம்மா!" என்று என்னை உரிமையோடு அழைப்பதோடல்லாமல், அதிக பாசத்தோடு அன்புகூரும்படி கர்த்தர் அழகாய் நடத்திவருவதாலும், மற்றும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரின் தெய்வீக பலத்தினாலும் வெகுவாய் ஆறுதல், தேறுதல் பெற்று, தேவ சேவையை தொடர்ந்து செய்து வருகிறேன். இந்தவிதமான இழப்பின் மத்தியில் கடந்துசெல்லும் என் அன்பானவர்களே! கர்த்தர் தாமே என்னை தேற்றிவருவது போல், உங்களையும் சகலவிதமான ஆறுதல்களினாலும் ஆற்றித்தேற்றுவாராக!

அன்பு மகன் பால் தினகரனுக்கு வாழ்க்கைத் துணையாக பெண் பார்க்க நாங்கள் முயன்று கொண்டிருந்தபொழுது, ஆண்டவர்! "நான் உங்கள் மகள் ஏஞ்சலை திரும்பத் தருவேன்" என்று பலமுறை பேசினார். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒருவேளை "மகளை திரும்பவும் உயிர்ப்பிப்பாரோ ?" என்று எண்ணினோம்.

ஒருநாள் ஒரு போதகர் மூலம், மற்றொரு போதகர் திருநெல்வேலியில் ஊழியத்திற்கு சென்றபொழுது, ஒரு வீட்டில் தங்கியதாகவும், அந்த வீட்டார் மிகவும் பக்தியுடனும், அன்புடனும் தங்களை கவனித்துக் கொண்டதாகவும், அந்த வீட்டில் ஒரு மகள் உயரமாக இருப்பதாகவும், ஒருவேளை அது சரிப்பட்டால், மகன் பால் தினகரனுக்கு ஒழுங்கு செய்யும்படியும் சொல்லி அனுப்பினார். சகோதரர் உடனடியாக விசாரித்தபொழுது, அவளுக்கு ஒரு மூத்த சகோதரி இருப்பதையும், போதகர் குறிப்பிட்ட இளைய பெண் மட்டுமே நல்ல உயரம் மற்றும் அவள் B.Com. படித்துக்கொண்டிருக்கிறாள் என்பதையும் அறிந்தோம். எனவே மூத்த மகளுக்கும் நாமே வரன் பார்த்து, அதை முடித்த பின்பே இளைய மகளை நம் மகனுக்கு மணமுடிக்கலாம் என்று சகோதரர் சொல்ல, அவர்கள் வீட்டாரும் அதற்கு ஒத்துக்கொண்டனர். கடைசியில் கர்த்தருடைய

ஆசீர்வாதத்தால், அப்படியே யாவும் சமாதானமாக, சந்தோஷமாக இரண்டு பிள்ளைகளுக்கும் திருமணம் முடிக்க தேவன் வழிநடத்தினார்.

என்ன ஆச்சரியம் பாருங்கள்! எங்கள் குடும்பத்திற்கு மகளாக வந்த அவளுடைய பெயர் 'விஜயா' என்பதாகும். ஆனால், அவள் கிறிஸ்து இயேசுவை தன் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டபொழுது, தனக்கு "இவாஞ்சலின்" என்று பெயர் வைத்துக் கொண்டாளாம். மேலும் என் மகள் ஏஞ்சல்கூட பள்ளிப் படிப்பிற்குப்பின், தொடர்ந்து B.Com., படிப்பை படிக்க வேண்டும் என்று முயற்சித்துக்கொண்டிருந்தாள். இரண்டு பேரும் பிறந்த வருடமும் 1968 தான். இப்படி பலவிதங்களில் ஒன்றுபட்டிருந்ததால் தானோ என்னவோ ஆண்டவர் "நான் உங்கள் மகள் ஏஞ்சலை திரும்பத் தருவேன்" என்று கூறினார் போலும்.

மகள் ஏஞ்சலைத் திரும்பத் தந்தார்!

மேலும் திருமணத்திற்கு முன்பே, எங்கள் வீட்டிற்கு மகளாக வரப் போகும் இவாஞ்சலினிடம், அவளுடைய பெரியம்மா ஒருவர், "மகளே! தன் மகளை இழந்து உள்ளம் உடைந்த நிலையிலிருக்கிற அந்த தேவ ஊழியர்களுக்கு ஆறுதலின் மகளாக உன்னை ஆண்டவர் அனுப்புகிறார். எனவே, நீ சகோதரர் தினகரனையும், சகோதரியையும், "அத்தை, மாமா" என்று அழைக்காமல்

நானும் மகள் இவாஞ்சலினும்

"அம்மா, அப்பா" என்றே அழைக்க வேண்டும் என்று கூறிய ஆலோசனையைக் கேட்டு, அதேபோல் எங்கள் இருவரையும் எங்கள் வீட்டுக்கு அவள் வந்தவுடன் "அப்பா, அம்மா" என்று அழைத்தபொழுது எங்களுடைய உடைந்த, நொறுங்குண்ட, ஆறுதலுக்காக ஏங்கிய உள்ளம் மிகுந்த ஆறுதல் பெற்றது.

எனக்கு அருமையான திருமணமாகப் போகும் என் அன்பான பிள்ளைகளே! நீங்களும் திருமணமாகி உங்கள் மாமனார் வீடு சென்றவுடன் அவர்களை உங்கள் சொந்தப் பெற்றோராக எண்ணி, அவர்கள் மீது உங்கள் பெற்றோரிடம் காண்பிக்கும் அன்பை, உண்மை மனதுடன் காண்பியுங்கள். கர்த்தர் அதற்கேற்ற பலனை உங்கள் வாழ்விலும் அருளிச் செய்வார். இன்று அதினிமித்தம் பாருங்கள்! ஆவிக்குரிய வாழ்வில் சாதாரண நிலையிலிருந்த மகள் இவாஞ்சலின் பால் தினகரனை, கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியினால் பெலப்படுத்தி, எவ்வளவு மகிமையாக தேவனுடைய ஊழியத்தில் உயர்த்தி வைத்திருக்கிறார். மாத்திரமல்ல! பக்தி நிறைந்த, தாலந்துகள் கொண்ட மூன்று அருமையான குழந்தைகளையும் அவர் ஈந்து, இந்த குடும்பத்தை தெய்வ பக்தியுள்ள சந்ததியாக மாற்றி அமைத்திருக்கிறார் (ஏசாயா 59:21).

அன்பானவர்களே! இவ்விதமாக குடும்ப வாழ்வில், ஊழியம் ஒருபுறம் பெருகப் பெருக, பாடுகளும், கண்ணீரும் தொடர்ந்து பிடித்து நெருக்கியபொழுதிலும்,

> கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. சங்கீதம் 16:8

என்று தாவீது கூறியதுபோன்று, நாங்கள் கர்த்தரை எங்கள் முன்பாக வைப்பதில் மிகவும் கவனமாயிருந்தபடியால், அவர் எங்கள் வலது பாரிசத்தில் எப்பொழுதும் தங்கி

யிருந்து, நாங்கள் எந்தவிதமான கவலை, பாரம், சோதனை, இழப்பு போன்ற பிசாசின் தந்திரங்களால் அசைக்கப்படாத படிக்கு, தனது பரிசுத்த பிரசன்னத்தினாலும், பரிசுத்த ஆவியானவரின் நிறைவின் பெலனாலும் மிகவும் அருமையாக பாதுகாத்து வழிநடத்தி வருகிறார். இதேபோன்று நீங்களும் ஜாக்கிரதையுடன் தெய்வ பயத்துடன் வாழ்வீர்களானால், இதேவண்ணமாக உங்களையும் கரம்பிடித்து நடத்துவார்.

*****

நேரடி ஜெபத்தின் மூலம் நற்சாட்சி!

கிறிஸ்துவுக்குள் அன்பான ஸ்டெல்லா அம்மா அவர்களுக்கு,

1993 ஆம் ஆண்டு என் கணவர் இறந்துவிட்டார். அப்போது நான் சென்னைக்கு புதிது. என் இரண்டு குழந்தைகளையும் வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தேன். ஒருபக்கம் குடும்பத்தை நடத்தவேண்டும், கடனை அடைக்கவேண்டும் என்ற கவலை. மறுபக்கம் உறவினர்களின் பரிகாசம். இந்த நிலையில் 1994 ஆம் ஆண்டு ஸ்டெல்லா அம்மாவை நேரில் சந்தித்தேன். அப்போது அவர்கள் எனக்காக ஜெபித்து, "உங்கள் கணவருடைய வேலையை நீங்கள் பெற்று சென்னையில் இருங்கள். கர்த்தர் உங்களை உயர்த்தப்போகிறார். உங்கள் கடன் பிரச்னைகளை மாற்றுவார். உங்கள் உறவினர்கள் உங்களைத் தேடிவருவார்கள்" என்று சொல்லி ஜெபித்து அனுப்பினார்கள். உண்மையில் அந்த வார்த்தை என்னை அதிகமாக உற்சாகப்படுத்தியது. அதன்படியே, கர்த்தர் என் கணவருடைய வேலையை நான் பெறவும், சென்னையிலேயே வாழவும் அற்புதம் செய்தார். எல்லாக் கடன்களையும் அடைத்துவிட்டோம். மேலும், என் மகன் நன்றாகப் படித்து, தற்போது சிங்கப்பூரில் வேலை பார்க்கிறான். மட்டுமல்ல, நாங்கள் சொந்தமாக ஒரு வீடும், காரும் வாங்கியுள்ளோம். தேவனுக்கே மகிமை!

திருமதி. காந்திமதி சுகுமாரன்,
சென்னை – 71.

ஜூன் 12, 2010.

4. வாழ்க்கையில் பாடுகளும், வல்லவர் இயேசுவின் வழிநடத்துதலும்!

ஆண்டவராகிய இயேசு வாழ்ந்து காண்பித்த பாதை தான் அவருடைய அடியார்களாகிய நாமும்கூட பின்பற்ற வேண்டிய கடினமான பாதை!

> இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார். I பேதுரு 2:21

பாடுகளின் பாதை

ஏசாயா 53:10ன்படி, தேவன் தமது சொந்த குமாரனான இயேசுகிறிஸ்துவை பாடுகளுக்குட்படுத்தினார். அதுவே அவருடைய சித்தமாயிருந்தது. அந்தப்படியே அவர் தேவனுடைய தற்சொரூபமாயிருந்தும், நமக்கு மாதிரியாக விளங்கும்படி,

> அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து தமக்கு உண்டான பய பக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலை கற்றுக் கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணராகி, எபிரெயர் 5:7-9

"சிலுவை"யின் அனுபவத்தையும் கடந்து சென்றார்.

என்ற பாடுகளின் உச்சக்கட்டமான

அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிற நமக்கும் அதுவேதான் வழி! இதைத்தான், மத்தேயு 7:14ல் "ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று வாசிக்கிறோம்.

> இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். I பேதுரு 1:6,7

என்ற தேவனுடைய வார்த்தை எங்கள் வாழ்க்கையிலேயும் அப்படியே நிறைவேறியது.

இந்த பாடுகளின் பாதை ஒருபுறம் மனதிற்கு மிகுந்த சஞ்சலத்தை உண்டுபண்ணினாலும், மற்றொருபுறம் கர்த்தருக்குள் விசுவாசத்தில் ஸ்திரப்படவும், நிலைநிற்கவும் செய்தது. சாலைகளை செப்பனிடும்பொழுது, அவைகளை உடைத்து மறுபடியும் புதுப்பிக்கும் வேளையில் அது உறுதிப்பட்டதாக மாற, பழைய காலத்தில், தும்சுக்கட்டை என்ற ஒன்றை வைத்து பலமாய் நசுக்குவார்கள். அப்பொழுது அது உறுதிப்படும். அந்தவிதமான பணி இன்றைய நாட்களில் தெருக்களில் என்ஜின் மூலம் சுலபமாக நிறைவேற்றப்படுகிறது. அது பலமாக அமுக்கப்படும்பொழுது, சாலை நன்கு உறுதிப்படுகிறது. இதைத்தான் I பேதுரு 5:10ல் கீழ்க்கண்டவாறு வாசிக்கிறோம்.

> கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநு

பவிக்கிற உங்களை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப் படுத்தி, நிலைநிறுத்துவாராக;

என் வாழ்வும்கூட பலவிதமான பாடுகளின் அனுபவத் திற்குப்பின் கர்த்தருக்குள் ஸ்திரப்படுத்தப்பட்டதாகவும், பலப்படுத்தப்பட்டதாகவும் மாறியது. அவைகளையெல்லாம் பொறுமையோடு சகிக்கவும், விசுவாசத்தில் நிலைத் திருக்கவும், கர்த்தருக்குள் வைராக்கியமாய் வாழவும் வழி யுண்டாக்கியது.

தனிமைப்படுத்தப்பட்ட பரிதாப நிலை

தேவகிருபையால் எல்லாவிதமான நெருக்கமான நிலைமைகளிலும் நாங்கள் இருவரும் கர்த்தருடைய காரியங்களில் ஒருமனப்பட்டு, அவருக்காகவே வாழ எங்களை முற்றிலுமாக அர்ப்பணித்து வாழ்ந்து வந்தோம். ஆனால், அதுவரை அன்புடனும், ஐக்கியத்துடனும் இணைந்து வாழ்ந்து வந்த எங்கள் குடும்பத்தினர் சிலரோ, எங்களது பக்திவைராக்கியத்தைக் குறித்து, அதன் மேன்மையை அறியாத நிலையில் எங்கள் செயல்களைக் குறித்து பரிகாசம் செய்து, எள்ளி நகையாடினர். இதினிமித்தம் தனிமையில் ஒதுக்கப்பட்டது போன்ற நிலையும் எங்களுக்கு ஏற்பட்டது. அந்த நிலையிலும் கர்த்தரையே எங்கள் கண்கள் ஒத்தாசையாக நோக்கிப் பார்க்கவும், அதினிமித்தம் கர்த்தர் எங்களை பெலப்படுத்தி, கர்த்தருக்குள் தைரியமாக இருக்க வும், பொறுமையாக யாவையும் சகிக்கவும் பெலன் தந்தார். மேலும், அந்த தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் கர்த்தருடைய ஆவியானவர் என்னை ஆவியினாலே அளவில்லாமல் நிரப்பி, தமது தெய்வீக அன்பினால் என் உள்ளத்தை பொங்கியெழச் செய்தார். அந்த கசப்பான நிலை மாறவும், தேவ சமாதானம் எனக்குள் நிலைபெறவும் கருத்தாய் ஜெபித்து வந்தேன்.

ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான். I தீமோத்தேயு 5:8

ஒருநாள் ஆண்டவர் என்னோடு பேசினார். "உன் உறவினர்களுடைய செய்கைகளையெல்லாம் மறந்துவிட்டு, ஒன்றுமே நடவாததுபோல் அவர்கள் வீட்டுக்கு செல். நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளை செவ்வையாக்குவேன் (ஏசாயா 45:2) என்றார். கர்த்தர் துணையோடு, தெய்வீக அன்பினால் நிறைந்தவளாய் நான் அப்படியே செய்தேன். குறைவுபட்டிருந்த தேவ சமாதானமானது, அதிசயமாக குடும்பத்திற்குள் திரும்பி வந்தது. மட்டுமல்லாமல், அதோடுகூட ஆண்டவர் அருளிய இரட்சிப்பு, அபிஷேகம் யாவும் குடும்பத்தின் மக்களிடையே அற்புதமான ரீதியில் இறங்கியது. அதன்பிறகு கர்த்தர் என்னை தமது அளவற்ற கிருபையினால் "ஓர் கனத்திற்குரிய பாத்திரமாக" மாற்றினார்.

சமாதானத்தை குலைக்கும் கசப்பான வேர்

எனக்கு அன்பானவர்களே! கர்த்தர் "யாவரோடும் சமாதானமாயிருங்கள்" என்றே நமக்கு போதிக்கிறார் (ரோமர் 12:18; எபி. 12:14).

ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பி கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும். எபிரெயர் 12:15

என்ற வசனத்தின்படி, 'கசப்பு' என்னும் வேர் எழும்பி, உங்கள் குடும்பத்தின் மக்களிடையே விரோதம், வைராக்கியம், பிரிவினை இவைகளை உண்டாக்காதபடி (யாக்கோபு 3:14 -18), சமாதானத்தின் தேவனையே நோக்கிப் பார்த்து,

எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தால் நிரம்பிக்கொள்ளுங்கள் (பிலிப்பியர் 4:7). சமாதானம் இல்லாத சூழ்நிலைகள் தம்பதியர் நடுவிலேயோ, குடும்பத்தினரிடையேயோ அல்லது மற்ற எவரிடத்திலேயோ முளைக்கும்பொழுதே, "சமாதானத்தின் தேவனிடம்" அந்த நிலையை மாற்றும்படி ஆரம்பத்திலேயே கெஞ்சுங்கள். வீணான வைராக்கியமும், பெருமையும் பிரிவினையை அதிகமாக்கும். கர்த்தர் அதை விரும்பவேமாட்டார். இன்றைய நாட்களில் எத்தனை குடும்பங்கள் சமாதானமின்றி பிரிந்து கிடக்கின்றன. பிசாசு அதை கவனித்து மகிழுவான். ஆண்டவரோ உங்களைக் குறித்து வேதனைப்பட்டு, உங்களுக்காக பரிதாபப்படுவார்.

பிரிந்து வாழ்கிற தம்பதியரே! உங்கள் வாழ்வு ஆண்டவருக்கு முன்பாக பிரியமானது அல்லவே அல்ல! வீண் பெருமையினால், அகந்தை, மேட்டிமை இவைகளுக்கு அதாவது பிசாசின் கிரியைகளுக்கு இடம் கொடாதிருங்கள். உடன்தானே, உங்களைத் தாழ்த்தி, தேவ ஒத்தாசையுடன் எல்லாவிதமான குறைவுகளையும் மறந்து ஒருவரோடொருவர் ஒப்புரவாகுங்கள். உங்கள் விவாதங்கள் உங்கள் பார்வையில் ஒருவேளை சரியானவைகளாகக் காணப்பட்டாலும், கர்த்தருக்கு முன்பாக அவைகள் அருவருப்பானவையாயிருக்கலாம் என்பதை மறந்து போகாமல், "நான் கர்த்தருக்கு முன்பாக என்னை தரைமட்டும் தாழ்த்தட்டும், அவருக்கு பிரியமாய் மட்டும் வாழ்வதே, எனக்கும் விருப்பம்" என்று உடனடியாக கசப்பையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு ஒருவரோடொருவர் ஒப்புரவாகுங்கள். அதினிமித்தம் கர்த்தர் உங்கள் மீது இரங்கி, உங்களை ஆசீர்வதிப்பார். உலகம் தரக்கூடாத தேவ சமாதானம் உங்களை நிரப்பும்படி செய்வார்.

நானும்கூட அதேவண்ணமாக கர்த்தருக்கு முன்பாக என்னை தரைமட்டும் தாழ்த்தி, கர்த்தருடைய தெய்வீக அன்பினால் நிறைந்து செயல்பட்டதினிமித்தம்தான் என்

குடும்பத்திலும் குலைந்துபோயிருந்த தேவ சமாதானம் அற்புதமாய் தேவனுடைய வல்லமையால் திரும்பி வந்தது. பிசாசினால் வந்த மன வேதனைகள் யாவும் மறைந்து, கர்த்தரால் வந்த மகிழ்ச்சி, ஒருமனம் எங்களை நிறைத்தது. நாங்கள் யாவரும் ஒருவருக்காக ஒருவர் கரிசனையோடும், பாரத்தோடும் ஜெபிக்கும் உன்னத அன்பையும் கர்த்தர் எங்கள் அனைவருக்குள்ளும் நிறைவாய் அருளிச் செய்திருக் கிறார். கர்த்தருடைய மகிமை நிறைந்த நாமத்திற்கே சகல துதியும், கனமும் உண்டாவதாக.

எனக்கு அன்பானவர்களே! இதை வாசிக்கிற நீங்களும் ஆண்டவர் அருளும் இரட்சிப்பினால் நிறைந்தவர்களாய், அதற்கும் மேலான தெய்வீக அனுபவமாகிய அன்பினால் நிரப்பப்பட்டவர்களாக மாறவேண்டியது மிக மிக அவசியம். இந்த தெய்வீக அன்பு கர்த்தரால் அருளப்படுகிற பரிசுத்த ஆவியினால் நிறையும் அனுபவத்தின் மூலம் மட்டுமே அருளப்படுகிறது.

> மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டி ருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப் படுத்தாது.
> ரோமர் 5:5

பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்றதோடல்லாமல், எபேசியர் 4:11-15-ல் வாசிக்கிறபடியே ஒவ்வொருநாளும் பக்திவிருத்தி அடையவும், ஜெப வேளையில் உதடுகளின் கனியாகிய "ஸ்தோத்திர பலியை" நம்முடைய வாய்களைத் திறந்து (எபிரெயர் 13:15) ஏறெடுப்பதின் மூலமாகவும், இந்த தெய்வீக அன்பு நமக்குள் பாய்ந்து வந்து நம்மை நிரப்பும். இந்த அனுபவம் ஒவ்வொரு உண்மையான தேவனு டைய பிள்ளைக்கும் தேவை. இதை ஏற்றுக்கொள்ளாமல், ஆவியானவரால் நிறையப்பெறும் அனுபவத்தை அலட்சிய மாய் எண்ணுவது, ஆவிக்குரிய வாழ்வில் குறைவையே உண்டுபண்ணும். எனவே இதை பயபக்தியுடன் ஏற்று கர்த்

தருக்குள் வளருவதும், அல்லது ஏனோதானோவென்று வாழ்வதும் உங்கள் கைகளில் தான் இருக்கிறது. இந்தவித மான தெய்வீக அன்பை பரிசுத்த ஆவியின் நிறைவின் மூலம் பெற்றாலொழிய, வேறு எந்தவிதத்திலும் நம் வாழ்வை நிரப்ப வழியேயில்லை.

இத்தகைய தெய்வீக அன்பு நம்மை நிரப்பியிருக்கும் பொழுது மாத்திரமே, நம்மால் பிறர் குற்றங்களை மன்னிக் கவும், மறக்கவும்தக்கதான சுபாவம் நமக்குள் வரும். கிறிஸ்துவின் அன்பைப் பாருங்கள். பாவிகளில் பிரதான பாவியாயிருக்கிறவர்களையும்கூட சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால் கழுவி தூய்மைப்படுத்துகிறார். இந்த விதமான தெய்வீகம் நிறைந்த அன்பைத்தான் தமது தூய ஆவியானவரின் வல்லமையினால் நமக்குள்ளும் தேவன் ஊற்றுகிறார். அப்பொழுதுதான் நமக்குள்ளும் மற்றவர் களின் குறைவுகளை பெரிதுபடுத்தாமல், மன்னித்து மறக்கும் தெய்வீக அன்பு பாய்ந்து சென்று, குடும்பத்தில் சமாதா னத்தை நிலைபெறச்செய்ய துணை செய்கிறது.

சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்;
அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.
மத்தேயு 5:9

நம் மூலம் குடும்பத்தில் பாக்கியமான நிலை ஏற்படுவ தோடு, நாம் தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாக மாறவும் ஏதுவுண்டாகும். இன்றைக்கு உங்கள் இல்லற வாழ்வில் சமாதானம் இல்லாமல் பிரிவினை, கசப்பு, வைராக்கியம் இவைகள் காணப்படுமானால், இதை வாசிக்கிற சகோதரனே, சகோதரியே நீயே உன்னை முதலில் தாழ்த்தி, முழங்கா லிட்டு, சமாதானத்தின் தேவனை உன் வாழ்விற்குள் இரட்ச கராக ஏற்றுக்கொள். உன் குறைவுகளையெல்லாம், பாவங் களையெல்லாம் முதலில் கர்த்தரிடம் அறிக்கையிடு. அவர் செய்த நன்மைகளையெல்லாம் எண்ணி எண்ணி, மனதார

அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினாலும், அதன்மூலம் தெய்வீக அன்பினாலும் நிறைந்துகொள். அப்பொழுது சமாதானத்தின் தேவன் உன்மூலம் குடும்பத்தில் தெய்வீக சமாதானம், சந்தோஷம் யாவும் நிறைவாகத் தருவார்.

> பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்த முள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமு முள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்த தாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக் கிறது.
>
> நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர் களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.
>
> யாக்கோபு 3:17,18

பணப் பற்றாக்குறையெனும் நெருக்கம்

அடுத்து எங்களை வாட்டி வதைத்த மற்றொரு பாடு என்னவென்றால் தேவையான அளவு பணம் இல்லாத பரிதாப நிலை! கர்த்தர் அந்த வழியிலும் நாங்கள் நடந்து அதன் வேதனையை அறியும்படி வழிநடத்தினார். என் கணவர் உண்மையாகவும், கடினமாகவும் வேலையில் உழைத்தவர். ஆகவே குமாஸ்தா பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்று, "அதிகாரி" யாகும் பாக்கியமும் பெற்றார். அது வங்கியில் பயிற்சி பெறும் காலம் (Training Period). அடிக்கடி பல ஊர்களுக்கும் மாற்றுவார்கள். இதினிமித்தம் பணச் செலவு ஏராளமாக இருக்கும். அதோடுகூட என் கணவர் மிகுந்த இரக்க குணம் கொண்டவர். கஷ்டத்திலி ருக்கிற மற்றவர்களுக்கு தாராளமாக உதவி செய்வது அவருக்கு மிகவும் பிரியம். இவ்வாறான சூழ்நிலைகளில், வங்கி அதிகாரியாக உயர் நிலையிலிருந்தாலும், வருவாயில் மிகுந்த பற்றாக்குறை ஏற்பட்டது. பல ஒட்டுக்குடித்தனங் களோடு நாங்களும் பற்பல குறைவுகள் மத்தியில் பரிதாப

மான நிலையில் வாழ்ந்து வந்தோம். நானும் மிகவும் சிக்கன மாக வாழ்க்கை நடத்தினாலும், மாதம் முழுவதையும் சமாளிக்க முடியாத பரிதாப நிலை! கடையில் செருப்பு வாங்கினால் பணம் அதிகம் செலவாகுமே என்று செருப்பு தைப்பவனிடம் குறைந்த விலைக்கு செருப்பு வாங்கி சமாளிப்பேன். சாலைஓரக் கடைகளிலேயே என் மகனுக்கு மட்டும் அவசியம் ஏற்படும்பொழுது உடை வாங்குவேன். அன்று செப்டம்பர் 4. அவனுக்கு 4 ஆவது வயது பிறந்தநாள். மாதத் துவக்கம் தான். எனினும், அவனுக்கு ஒரு புதிய உடை வாங்கக்கூட கையில் பணம் இல்லை. மிகுந்த கவலையாயிருந்தது.

அன்று காலை 10 மணிக்கு தபால் மூலம் என் மாமனார் அவர்களும், என் அன்பு சகோதரியும் அவனுக்கு வெகுமதி யாக அனுப்பிய மொத்தம் 25 ரூபாயை சேர்த்து, அன்று மாலையில் கடைக்குப் போய் மகனுக்கு புது உடை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தோம். கர்த்தருடைய ஊழியர்கள் சிலர் எதிர்பாராத முறையில் வர, அன்று மனமார கர்த்தரை ஸ்தோத்தரித்து அந்த நாளைக் கொண்டா டினோம். எங்களுடைய தேவைகள் நிறைந்த வாழ்வைக் கண்ட ஒரு சிலரும், ஏன் ஊழியர்கள் சிலரும்கூட எங்களை பரிகசிக்கும் நிலைக்கு ஆளானோம். அந்நாட்களில் என் கணவர் வெள்ளை உடை தான் தரித்து அலுவலகம் செல்ல வேண்டிய நிலையிருந்தது. தினமும் குடும்பத்தின் சகல வேலைகளையும் நானே கவனித்து, துணிகளையெல்லாம் நானே துவைப்பேன். கிழிந்த துணிகளையெல்லாம் நானே தைப்பேன். வெறும் மூன்றே மூன்று புடவைகளை வைத்து சமாளிக்க வேண்டிய நிலையிலும், மனதில் திருப்தியோடு கர்த்தருக்குள் சந்தோஷமாக நாட்களைக் கடத்தும் கிருபையை ஆண்டவர் கொடுத்தார்.

இத்தனையாக நாங்கள் அனுபவித்த குறைவின் நாட் களில் ஒருநாள், என் கணவர் சம்பளம் வாங்கி வந்ததும்,

நானும் அவரும் என் குட்டி மகனுமாக ஒன்று சேர்ந்து முழங்காற்படியிட்டு, "ஆண்டவரே! நீர் கொடுத்த இந்த பணத்தை உம் கையில் கொடுக்கிறோம். நீரே அதை பொறுப்பெடுத்து, ஆசீர்வதித்து மாதம் முழுவதும் வழி நடத்தும்" என்று அவரிடம் அர்ப்பணித்து ஜெபித்தோம். அப்பொழுது ஜெபவேளையில் கர்த்தர் தீர்க்கதரிசனமாக சகோதரர் தினகரன் மூலம் எங்களோடு பேசினார். "என் அருமை பிள்ளைகளே! உங்கள் அன்பின் உண்மையை சோதிக்கும்பொருட்டு (II கொரி. 8:8) இத்தகைய குறைவின் நிலைமையை உங்கள் வாழ்வில் அனுமதித்தேன். நீங்களோ அந்த நிலையிலும் கொஞ்சமும் முறுமுறுக்காமல், அந்த கஷ்டத்தினூடேயும்கூட என் பணியையும் உண்மையான மனமகிழ்ச்சியோடு செய்து வந்தீர்கள். அதினிமித்தம் இனி மேல் நான் உங்கள் பாடுகளின் நிலைமையை முற்றிலுமாய் மாற்றி, உங்களை உயர்த்தி கனப்படுத்துவேன். உங்கள் பணக்கஷ்டம் யாவும் தீரவும், என் ஆசீர்வாதம் உங்களை நிரப்பவும் கிருபை புரிவேன்" என்று கூறி எங்களை ஆற்றித் தேற்றினார்.

கர்த்தர் சொன்னபடியே ஆசீர்வாதத்தின் மதகுகளைத் திறந்தார். என் கணவருக்கு அவரது வங்கிப் பணியில் உயர்வின்மேல் உயர்வு வந்தது. மிகவும் அதிசயமான முறையில் அலுவலக உதவியோடு சென்னையில் அழகான வீட்டைக் கட்டும் பாக்கியம் கிடைத்தது. எங்கள் குறைவான நிலையையே அதுவரை பார்த்து அலட்சியமாக எண்ணிய வர்கள் யாவரும், ஆண்டவர் அருளிய அத்தகைய மேலான ஆசீர்வாதத்தை தங்கள் கண்களால் வெளியரங்கமாகப் பார்த்து அதிசயித்தனர். தொடர்ந்து அலுவலகம் மூலமே கார் வாங்கும் பாக்கியத்தையும் கர்த்தர் அருளினார். அது வரை தன் ஒரே மகனால் எந்த சௌகரியத்தையும் அனுப வித்திராத என் கணவரின் பெற்றோர் மிகுந்த மகிழ்ச்சி யோடு எங்களோடுகூட எங்கள் வீட்டில் வந்து தங்கினர்.

எனக்காக எவ்வளவோ தியாகங்கள் செய்த என் அன்புத் தாயையும், சகோதரியையும்கூட ஏதோ ஓர் அளவில் என்னால் சந்தோஷப்படுத்த ஆண்டவர் எனக்கு கிருபை கொடுத்தார். இப்படியே வங்கி ஊழியத்திலும், கர்த்தருடைய ஊழியத்திலும் கர்த்தர் பற்பல ஆசீர்வாதங்களை கட்டளை யிட்டார். கர்த்தர் அருளிய சொந்த வீட்டிலேயே "இயேசு அழைக்கிறார் அலுவலகம்" தனி அறையில் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்க ஆண்டவர் கிருபை அளித்தார்.

குழந்தை வளர்ப்பில் பாடுகளும், நன்மையும்!

பிள்ளைகளை பெற்றெடுக்கும்பொழுது எத்தனை மகிழ்ச்சி, பேரானந்தம்! ஆனால் அதன்பின்பு ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது, அவர்களை கர்த்தருக்கு பிரியமான வழிகளில் வளர்ப்பதுதான். அநேகம் பெற்றோர் பிள்ளை களை கொஞ்சி மகிழ்வதில் ஆர்வம் செலுத்துவார்கள். ஆனால் குழந்தைகளை கர்த்தருடைய வழியில் வளர்ப்பதை மறந்தும், அதை பெரிதாக எண்ணாமல் அலட்சியப்படுத்தி யும் வாழ்கிறார்கள். அதன் பிறகு கர்த்தருடைய ஆசீர்வாதம் இல்லாமல் பற்பல பிரச்னைகள் பிள்ளைகளை சூழ்ந்து கொள்ளும்பொழுது செய்வதறியாது திகைக்கிறார்கள். கண்ணீர் விடுகிறார்கள்.

பற்பல பாடுகளுக்குப் பின்னர் கர்த்தர் எனக்கு கொடுத்த அன்பு மகன் பால் தினகரனை நான் பெற்றபொழுது, என் மனதினுள் எழுந்த எண்ணம், "அவன் தன் தகப்பனைக் காட்டிலும், பக்தியில் சிறந்து, ஆண்டவரின் ஊழியத்தில் வைராக்கிய வாஞ்சைகொண்டு, வரங்கள், வல்லமையினால் நிறைந்து, கர்த்தருக்கென்று எழும்பிப் பிரகாசிக்க வேண்டும்" என்பதுதான் அது! எனவே குழந்தைப் பருவத்திலிருந்தே அவனைக் கையிலேந்தி, கர்த்தரை நோக்கி அதிகம் ஜெபிப் பேன். கர்த்தருடைய கரத்தில் அவனை ஒப்புவித்தேன். அறிவு தெரியத்தெரிய வேத வசனங்கள் மற்றும் வேதாகம

சரித்திரங்கள், சம்பவங்கள் யாவையும் கற்றுக்கொடுப் பதிலும், கர்த்தருடைய தியாக அன்பை விளக்குவதிலும் கவனமாயிருந்தேன். ஒருமுறை ஆண்டவர் சிலுவையில் அவனுக்காக செய்த தியாகத்தை அவனோடு பகிர்ந்து கொண்டேன். அப்பொழுது அவனுக்கு ஏறக்குறைய ஆறு வயதுதானிருக்கும். அந்த வார்த்தைகள் அவன் உள்ளத்தைத் தொட, அந்த இளம் பாலகனின் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வந்ததைக் கண்ட நானும் கண்ணீர் வடித்தேன்.

அன்பான பெற்றோரே! பிள்ளைகளுக்கு எத்தனையோ விதமான அறிவிலும், ஆற்றலிலும் சிறந்த விஷயங்களை சிறு வயதிலேயே இந்நாட்களில் கற்றுக்கொடுத்து, அவர்களை எத்தனையாய் பேரும்புகழும் விளங்க வளர்க்கிறீர்கள். கிறிஸ்துவின் தியாக அன்பை, அவரது சிலுவைப் பாடு களை, தியாகத்தை அவர்கள் இளம் வயதிலேயே அறியவும் அதன்மூலம் அவர்கள் வளரவளர கிறிஸ்துவின் அரவணைப் பிற்குள், உன்னதமானவரின் நிழலுக்குள், செட்டைகளுக்குள் மறைக்கப்பட்டு, ஏற்ற நேரத்தில் அவரை மகிமைப்படுத்து கிறவர்களாக அவர்கள் பக்தி வழிகளில் விளங்க, நாம் பய பக்தியுடனும், வைராக்கியத்துடனும் வாழ்வதும், அவர் களையும் எழும்பிப் பிரகாசிக்க செய்வதும் எத்தனை அவசியம் என்பதை எண்ணி உடனடியாக செயல்படுங்கள்! கர்த்தர் உங்களுக்கு நிச்சயம் உதவிசெய்வார்.

இவ்வளவு அருமையாக வளர்க்கப்பட்ட சிறுவன் பால் திவகரனின் வாழ்வில், 'திருடனாகிய பிசாசு திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான்' (யோவான் 10:10) என்ற வசனத்தின்படி பிசாசு பிரச்னைகளை எழுப்ப முயற்சி செய்தான். இளம் வயதிலேயே எத்தனை எத்தனையோ பயங்கரமான வியாதிகள் அவனை வந்து வேதனைப் படுத்தின. தந்தைக்கு அவனை கவனிக்கக்கூட நேரமிராதபடி அத்தனையாய் ஆண்டவருடைய பணியும், அலுவலகப்

பணியும் நிறைவாயிருக்கும். நான்தான் அத்தகைய சந்தர்ப் பங்களில் கர்த்தரையே சார்ந்து, எண்ணெய் பூசி ஜெபம் பண்ணுவேன். கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு, பலத்த அற்புதம் செய்து அவனை குணமாக்குவார். நாங்கள் அப் பொழுதெல்லாம் தனி வீட்டில் தங்க பணவசதியில்லா ததால், பல குடித்தனங்களோடு சேர்ந்து வாழவேண்டிய சூழ்நிலை இருந்தது. கூடவே வசித்த பலரும் இயேசுவை அறியாத குடும்பங்களாயிருப்பார்கள். எனினும் அவர்கள் என் குழந்தைக்கு வந்திருக்கும் வியாதி வெகுவிரைவில் அதிசயமாக குணமடைவதைக் கண்டு, மிகுந்த வியப்படை வர். அப்பொழுது அவர்களிடம் ஆண்டவரின் அன்பையும், அவருடைய வல்லமையையும் பற்றி சாட்சி சொல்ல எனக்கு ஒரு நல்ல தருணம் ஏற்படும்.

செவ்வாய்கிழமை உபவாச ஜெபத்தின் ஆரம்ப அனுபவம்

இப்படியாக வளர்ந்த பாலகன், படிப்பில் மிகவும் ஞானம் கொண்டவனாக விளங்கினான். நான்தான் வீட்டில் அவனுக்கு ஆசிரியை! விளையாட்டுத் தோழி! எல்லாமே! அதே நேரம் "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து (நீதிமொழிகள் 22:6), "பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதை தண்டனையின் பிரம்பு அவனைவிட்டு அகற்றும்" (நீதிமொழிகள் 22:15) என்ற வார்த்தைகளின்படியே, கண்டிக்கவேண்டிய நேரம் கண்டித்து, அன்பைப் பொழிய வேண்டிய நேரத்தில், அன்பைப் பொழிந்து வளர்த்தேன். இவ்விதமாக பக்திக் குரிய நிலையில் பயபக்தியோடு வளர்க்கப்பட்ட மகன் வாழ்வில் ஒரு பெரிய சோதனை வந்தது.

ஆறாவது வகுப்புவரை மிகத் திறமையோடு முதன்மை நிலையில் படித்து வந்த அவன், 7ஆம் வகுப்பிலிருந்து ஏறக் குறைய ஏழு ஆண்டுகள் நண்பர்கள் பலரின் ஈடுபாட்டினால், படிப்பில் மிகவும் குறைவுபட்டான். எங்களுக்கு இது ஓர்

பெரியதாக மாறியது. நாங்கள் இருவரும் மனம் உடைந்தோம். கண்ணீர் மல்க கர்த்தரை நோக்கிக் கதறினோம். சகோதரருடைய சரீரத்தில் மனபாரம் அதிகமானதால் இரத்தக் கொதிப்பு அதிகமாகி கண்கள் இரண்டும் சிவந்து போய் மிகவும் பாடுபட்டார். கர்த்தர் எங்களுக்கு மனமிரங்கி அவரை குணமாக்கினார். அந்த அளவுக்கு வாழ்க்கையில் வேதனை! என்ன செய்வதென்றறியாது திகைத்துக் கொண்டிருந்தோம்.

அப்பொழுதுதான், "எல்லாம் செய்து பார்த்து விட்டோம். இனி அவனுக்காக உபவாசத்தோடு நாள் முழுவதும் கண்ணீருடன் கர்த்தரை பற்றிப்பிடிப்பதைத் தவிர வேறு வழியேயில்லை" என்று உணர்ந்த நான், செவ்வாய்க்கிழமைதோறும் உபவாசித்து ஜெபிக்கும்படி, காலையில் விரைவாக வீட்டுக் காரியங்களையெல்லாம் முடித்துவிட்டு காலை 9.30 மணிக்கு தனியறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டு, கர்த்தரோடு தனித்திருந்து, கருத்தாக வேதம் வாசிப்பேன். வாசித்த பகுதியிலுள்ள வாக்குத்தத்த வசனங்களையெல்லாம் பிடித்துக்கொள்வேன். பிறகு அவைகளை உபயோகித்து கண்ணீரோடு கர்த்தரை நோக்கி மன்றாடுவேன். "ஆண்டவரே! உம்மையன்றி யாராலும் இந்த கடினமான சூழ்நிலையை மாற்றவே முடியாது. மற்றவர்களுக்கு பிரசங்கம் செய்கிற எங்கள் வாழ்வுதானே ஆகாத நிலை அடையாதபடிக்கு, எங்கள் மகனைத் தொட்டு அவனை இரட்சியும், சகலவித பொல்லாங்குகளினின்றும் விடுதலையாக்கும். உமக்கு பிரியமான மகனாக அவனை மாற்றும்" என்று கண்ணீருடன் கெஞ்சி மன்றாடுவேன். கடைசியில் "கர்த்தாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு, சகலத்தையும் பொறுப்பெடுத்துக் கொண்டீர் என்ற விசுவாசத்துடன், உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்" என்று மனமார கர்த்தரை கொஞ்ச நேரம் துதிப்பேன்.

இவ்விதமாக ஒருசில வாரங்கள் கடந்தோடின. என் மகனிடத்தில் யாதொரு மாற்றமும் காணப்படவில்லை.

என்னிடம் பயங்கரமாக வாதாடுவான். அதே நேரத்தில், கர்த்தரால் ஏவப்பட்டு, நற்செய்தியாளர்களை பயிற்றுவிக்க, தெரிந்துகொள்ளப்பட்ட சில மக்களுக்கென்று ஓர் விசேஷித்த "வல்லமை பயிற்சி முகாம்" நடத்த நாங்கள் ஒழுங்கு செய்திருந்தோம். மாலை நேரம் மட்டுமே இந்த பயிற்சி நடத்தப்பட்டது. அதுவும் ஊழியத்தில் எங்களோடு இணைந்து செயல்பட்டவர்களும், கர்த்தருடைய இரட்சிப்பின் இன்பத்தை அனுபவித்தவர்களுமாகிய ஒரு சிலர் மட்டுமே இதில் கலந்துகொள்ள தெரிந்துகொள்ளப்பட்டனர். நானும் என் கணவருமாக, "இரட்சிக்கப்படாத நிலையிலிருந்த" என் மகனையும் இதில் சேர வைத்தோம். அந்த கூட்டத்தில் தான், தன் சொந்த தகப்பனாருடைய இறை செய்தியின் மூலமாகவே ஆவியானவரால் தொடப்பட்டு, அப்படியே முற்றிலும் மறுரூபமடைந்தான் அன்பு மகன்!

இரட்சிப்பு, அபிஷேகம் யாவும் தொடர்ந்து அவனை நிரப்ப, அவன் முற்றிலும் வேறுபட்ட புது மனிதனானான். நாங்களும் மற்றும் எங்களோடு சேர்ந்து அவனுக்காக ஜெபித்து வந்த மற்றவர்களும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. அவனிமித்தம் எவ்வளவாய் உள்ளத்தில் பாடுபட்டோமோ, அவ்வளவாய் ஆண்டவர் அவன் மூலமாக எங்களுக்கு பெருமையையும், மகிமையையும் தந்தார். கல்வியில் குறைவுபட்டிருந்த மகன் அதே லயோலா கல்லூரியில் தங்கப் பதக்கம் வாங்கி பட்டம் பெற்று கர்த்தருடைய தயவையும், உயர்வையும் பெற்றான். இன்றும் அதே கல்லூரியில்

சகோ. பால் தினகரன்
தங்கப் பதக்கம் பெறும் காட்சி

அவனைக் குறித்து மிகுந்த பெருமை அடைகிறார்கள். அவன் குழந்தையாயிருக்கும்பொழுது நான் வேண்டிக் கொண்டபடியே, ஊழியத்தில் தகப்பனாருக்கு உற்ற துணையாக வெகு விரைவில் உயர்ந்தான். கர்த்தருடைய கிரியைகள்தான் எத்தனை அதிசயமானவைகள்!

> நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்கு செய்ய வல்லவராகிய அவருக்கு, எபேசியர் 3:20

அந்த சமயம் ஆரம்பித்த அந்த "செவ்வாய்கிழமை உபவாச ஜெபத்தை" இன்றும் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக என் குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும், மற்றும் எனக்கு கடிதம் எழுதும் அநேகருடைய ஜெப விண்ணப்பங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபிக்க தேவன் ஆசீர்வதித்து வழிநடத்தி வருகிறார்.

மகன் பால் தினகரனின் வாழ்வினிமித்தம் நாங்கள் கடந்து சென்ற சோதனைகள், நாங்கள் பட்ட பாடுகள் சொல்லி முடியாததுதான்! ஆனால், இத்தனை மன வேதனைகளை அனுபவித்த எங்கள் உள்ளம் "துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கு சரியாக மகிழ்ச்சியடையும்படி" (சங்கீதம் 90:15) எத்தனையாய் மகிமை நிறைந்த வாழ்வை 18 வயது வாலிப வயதிலேயே ஆண்டவர் அவனுக்கு கொடுத்து அதினிமித்தம் எங்களை மகிழ வைத்தார். அவனுக்குள் இளம் வயதில் துளிர் விட்டெழுந்திருந்த அந்த பக்திவைராக்கியம், திரும்பவும் முளைத்தெழும்பி, கிளை விட்டு வளர ஆரம்பித்தது. தன் தகப்பனைப்போலவே நெடுநேரம் இரவில் பணிபுரிந்து, முழுமுயற்சியோடு ஊழியத்தில் பல காரியங்களை உருவாக்க தேவன் அவனுக்கு ஞானம், விவேகம் யாவும் கொடுத்ததை மக்கள் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். ஆண்டவருக்கென்று பிரசங்கிக்கும்

ஆற்றலையும் கர்த்தர் கொடுத்து, அற்புதமான விதத்தில் இளம் ஊழியனாக எழும்பிப் பிரகாசிக்க செய்தார்.

இவ்விதமாக கர்த்தருக்கென்று தன் வாழ்வை முழுவது மாக அர்ப்பணிக்க அர்ப்பணிக்க, அவனுக்கு ஆண்டவர் மறு புறம் ஏராளமான பட்டங்களையும், உயர்வுகளையும் தந்து உயர்த்தினார் (சங்கீதம் 75:10). அதுமட்டுமின்றி, எந்த பெண்ணையும் அவனாக நாடி தெரிந்துகொள்ளாமல், ஏற்ற சமயத்தில், பெற்றோர் தெரிந்தெடுப்பதையே விரும்பி, அழகும், அன்பும், அமைதியும் நிறைந்த மகள் இவாஞ்சலினை வாழ்க்கைத் துணைவியாகப் பெறும் பாக்கியத்தையும், அவள் மூலமாக மூன்று அழகிய குழந்தைகளுக்கு தகப்ப னாகும் பாக்கியத்தையும் கர்த்தரிடத்திலிருந்து பெற்றான்.

அன்பானவர்களே! பிள்ளைகளை பெறுவதோடு நின்று விடாமல், அவர்களுக்கு பக்திவைராக்கியத்தை கர்த்தர் மேல் ஊட்டி வளர்ப்பதிலும் ஜாக்கிரதையாயிருங்கள். பாடுகள் பல நேரிட்டாலும், அது கொஞ்ச காலம் தான் இருக்கும் (I பேதுரு 1:6,7). அதன்பிறகு பலமடங்கு அதிகமாக, நீங்கள் வேண்டிக்கொள்வதற்கும் நினைப்பதற்கும் அதிகமான ஆசீர்வாதமான கிரியைகளை கர்த்தர் தமது வல்லமை யினால் நிறைவேற்றுவார். இது கர்த்தர் என் அனுபவத்தில் காணச்செய்த உண்மை. இன்று மகன் பால் தினகரனைப் பார்த்து, நான்மட்டுமல்ல, இன்னும் அநேகம் தாய்மார்கள் அவனை முத்தமிட்டு, “மகனே! நீ உன் அம்மாவுக்கு மட்டு மல்ல! எனக்கும் அன்பு மகன்” என்று சொல்லி வாழ்த்து கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தர் தமது தெய்வீக வரங்களால், வல்லமையால் அவனை நிரப்பி, தம் நாமத்தை மகிமைப்படுத்திக்கொள்வதைப் பார்க்கும்பொழுது எத்தனையாய் கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டியதா யிருக்கிறது.

"இயேசு அழைக்கிறார்" ஊழியத்திற்கான சொந்த கட்டடம்

இந்த நிலையில் "இயேசு அழைக்கிறார்" ஊழியம் நாளுக்கு நாள் விரிவடைய ஆரம்பித்ததால், ஆண்டவர் அருளியிருந்த எங்கள் சொந்த வீட்டில் இடம் பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே, பல வாடகை வீடுகளில் மாறிமாறி வாழ வேண்டியதாயிற்று. கடைசியில், வீட்டு சொந்தக் காரர்களால் பற்பல பிரச்னைகள் அதில் மாறிமாறி வரவே, சொந்தமாக இடம் ஒன்று தேவைப்பட்டது. இப்பொழுது ஜெபகோபுரம் செயல்பட்டு வருகிற டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலையில் உள்ள கட்டிடம் அந்த நாளில் விலைக்கு வந்தது. முன்தொகை (Advance) ஒரு லட்சம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் எப்படியோ கஷ்டப்பட்டு அந்த பணத்தைக் கொடுத்துவிட்டு, குறிப்பிட்ட நாளில் மீதி பணத்தை கொடுப்பதாக ஒத்துக் கொண்டோம். எப்படியா வது அந்த பணம் குறிப்பிட்ட நாட்களுக்குள் கிடைத்து விடும் என்று எண்ணினோம். ஆனால் வங்கியிலிருந்தோ, வேறு எங்கிருந்தோ அது கிடைப்பதாகவே தெரியவில்லை. நாட்கள் நெருங்கிவிட்டன.

ஒருநாள் அந்த இடத்தினுடைய சொந்தக்காரரின் தம்பி, தொலைபேசியில் தாறுமாறாகப் பேசினார். பாவம்! அச் சமயம் சகோதரர் தினகரன் அவர்கள் வீட்டில் இல்லாததால், என் மாமனார்தான் அந்த மனிதனோடு பேசினார். நானும் அதை கேட்டுக்கொண்டு அங்குதான் அமர்ந்திருந்தேன். சற்றும் அந்த சமயம் பார்த்து, ஜெபம்பண்ணி செல்வதற் காக திரு. அற்புதசாமி என்ற அன்பான சகோதரர் அவர்களும் தின்னனூர் என்ற இடத்திலிருந்து எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அவரும் அதை கவனித்துக்கொண்டிருந்தார். என் மாமனார் முகமெல்லாம் வெந்து வாடிப்போனதை நாங்கள் கண்டோம்.

தொலைபேசியில் சம்பாஷணை முடிந்தவுடன் என்ன நடந்தது என்று நாங்கள் கேட்டோம். அந்த வீட்டின் சொந்தக்காரர் பேசிய வார்த்தைகளையும், "ஏற்ற நாளில் பணத்தைக் கொடுக்காத பட்சத்தில் அந்த முன்பணம் ஒரு லட்சத்தையும் கூட திருப்பிக் கொடுக்க மாட்டேன்" என்று அந்த மனிதன் கடினமாகப் பேசியதையும் கூறினார்.

நாங்கள் இவ்வாறு சஞ்சலப்படுவதைக் கண்ட அந்த பெரியவர் திரு. அற்புதசாமி அவர்கள், "ஐயா! நாளைக் காலை 10.30 மணிக்கு நான் திரும்ப வருகிறேன். சகோதரர் தினகரன் என்னோடு வருவாரானால், என் வங்கிக்கு அழைத்து செல்கிறேன்" என்று சொல்லிவிட்டு போய் விட்டார். அப்படியே அடுத்த நாள் யாவரும் அவரோடு போனபொழுது, அங்குள்ள வங்கியின் முக்கிய அதிகாரி யிடம் திரு.அற்புதசாமி ஐயா அவர்கள், "இவர்களை நம்பி எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கலாம். இவர்களுக்காக நான் எத்தனை கையெழுத்து வேண்டுமா னாலும் போடுகிறேன். உண்மையாக இந்த பணம் உரிய சமயத்தில் உங்களுக்கு திரும்ப வந்துவிடும்" என்று ஆணித் தரமாகப் பேசவே, அவர்கள் அதற்கு இசைந்து, தேவை யான பணத்தைக் கொடுத்தார்கள்.

"இயேசு அழைக்கிறார்" ஜெபகோபுரம்

நாங்கள் வாக்குக்கொடுத்த அதே நாளில் ஒரு பிரச்னையுமின்றி, எங்களை அந்த மனிதன் முன்பு தலைகுனிய விடா மல், மீதி பணத்தை சரியாகக் கட்டிவிட வும், இடம் முழுவ தையும் ஆண்டவ

ரின் ஊழியத்திற்கென்று சுதந்தரிக்கவும் கர்த்தர் அற்புதமாக வழிநடத்தினார். இன்று ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக அந்த இடம் ஆண்டவர் நாம மகிமைக்கென்றும், அநேக மக்களுக்கு ஆறுதல் தரும், விடுதலை அளிக்கும் "கலங்கரை விளக்காகவும்" விளங்கி வருகிறது. அதை இப்பொழுது சற்று விரிவுபடுத்தவும் தேவன் கிருபை புரிந்து அழகாய் வழிநடத்தி வருகிறபடியால், அவருக்கே சகல துதியும், கனமும், மகிமையும் ஏறெடுக்கிறோம்.

தொழில் நுட்பக் கல்லூரியைக் கட்டி எழுப்பும் தேவ திட்டம்

இந்த நிலையில்தான் காருண்யா கல்வி ஸ்தாபனத்திற்கு பணம் ஏராளம் தேவைப்பட்டதால், அதினிமித்தம் மங்களூர் செல்ல, நானும், சகோதரரும் அடுத்த நாள் காலை புறப்பட வேண்டும். எங்களோடு மகளையும் அழைத்து செல்ல ஏற்பாடு செய்தோம். அந்தோ! விமான நிலையம் போகிற வழியிலேயே விபத்து நடந்துவிட்டது. மகளை மயக்க நிலையில் மருத்துவமனையில் சேர்த்தோம். ஆனால், தேவ சித்தப்படி அவள் நிரந்தரமாக ஆண்டவருடைய ராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள். வாழ்வு கசந்தது. நடைபிணம் போலானோம்.

பல நாட்கள் கடந்துபோன பின்பு ஒருநாள் இந்த வேதனையோடுகூட காலை குடும்ப ஜெபத்தில் வழக்கம் போல் ஈடுபட்டோம். ஜெபவேளையில், அன்று விசேஷித்த விதத்தில் தேவ பிரசன்னம் எங்களை அளவில்லாமல் நிறைத்தது. பரிசுத்த ஆவியானவரால் யாவரும் நிரப்பப் பட்டோம். அப்பொழுது ஆண்டவர் எங்களோடு பேசினார். "என் அன்பு பிள்ளைகளே! மகளை இழந்ததால் உங்கள் மனம் உடைந்திருப்பது எனக்கு தெரியும். நானும் உங்களோடு நெருக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். மகள் ஏஞ்சல் என்னோடுதான் இருக்கிறாள். நான் பிசாசிடமும்,

தூதர்களிடமும், 'இந்த நிலையிலும் என் பிள்ளைகள் என்னை கைவிடமாட்டார்கள்; என்னையே பின்பற்றி, என் பணியைத் தொடருவார்கள்' என்று சவால் விட்டிருக்கிறேன். என்னை வெட்கப்படுத்துவீர்களோ ?" என்று கேட்டார். நாங்கள் யாவரும் ஒரேமனதோடு "ஆண்டவரே! இந்த உலகில் உம்மைத் தவிர எங்களுக்கு யார் உண்டு? நாங்கள் உம்மைவிட்டு வேறு எங்கே போவோம்? இந்த கடின சூழ்நிலையில் நீரே எங்களுடன் கூடவேயிருந்து எங்களைத் தாங்கி வழிநடத்தும்" என்று எங்களை ஒப்புக்கொடுத்தோம்.

> அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப் பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர் களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களை தூக்கி சுமந்துவந்தார்.
>
> ஏசாயா 63:9

என்ற வார்த்தையின்படியே, எங்களை அன்புடன் தூக்கி சுமந்து வழிநடத்தினார். திரும்பவுமாக ஊழியத்தைத் தொடரவும் தமது தெய்வீக பெலனைத் தந்தார்.

> நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிற தில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிற தில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை.
>
> II கொரி. 4:8,9

என்ற வசனத்தின்படியே நாங்கள் நடக்க பரிசுத்த ஆவியா னவர் தைரியத்தையும், திடநம்பிக்கையையும் அருளிச் செய்தார் (எபேசியர் 3:12). கர்த்தர் விரும்பியபடியே கண்ணீரோடேகூட "காருண்யா தொழில்நுட்பக் கல்லூரி" கர்த்தருடைய தயவால் அதே ஆண்டிலேயே (1986) அக்டோபர் 10ஆம் தேதியன்று ஆரம்பிக்கப்பட்டு தேவ சித்தம் நிறைவேற்றப்பட்டது. என் மகளின் இழப்பை

நினைக்கும்பொழுதெல்லாம், தேவாதி தேவன் எனக்காக, மனுக்குலத்தின் மீட்புக்காக தம் சொந்தக் குமாரனையே சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுத்த அவரது தியாக அன்பை எண்ணி நான் என்னைத் தானே தேற்றிக் கொள் கிறேன். அவரைவிடவா நாங்கள் பெரிய தியாகம் செய்து விட்டோம்?

இன்றும் எங்களைப்போல், இழப்பினிமித்தம் ஏங்குகிற ஒவ்வொருவரும் கர்த்தருடைய தியாக அன்பை எண்ணி, நீங்களும் உங்களை தேற்றிக்கொள்ளுங்கள்.

இன்று காருண்யாவில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளை, விசேஷமாக மாணவிகளையெல்லாம் பார்க்கும்போது, அவர்களை மகள் ஏஞ்சல் ஸ்தானத்தில் வைத்து, அவர்களுக்காக நான் விசேஷமாக பிரார்த்தித்து வருகிறேன். காருண்யா கல்லூரி தேவ ஒத்தாசையுடன் தேவ னுடைய வழிநடத்துதலால் மட்டுமே இன்று ஓர் சிறந்த பல்கலைக்கழகமாக கர்த்தருக்கு மகிமையாக ஓங்கி வளர்ந்து வருகிறது. எத்தனை எத்தனையோ நெருக்கங்கள், உறக்கம் இல்லாத இரவுகள், நிந்தனைகள், பரியாசங்கள், கூடவே இருந்துகொண்டு நெஞ்சைப் பிளந்த மக்களின் தீய செயல் கள், மற்றும் கடன் பாரம் போன்ற பல்வேறு பாடுகள் வழியாக நாங்கள் கடந்து செல்லவேண்டிய நிலை ஏற்பட்ட பொழுதும், இன்று அதற்கு மூலைக்கல்லாக விளங்கும் ஆண்டவர் சகலத்தையும் ஆளுகிறவராக அற்புதமாக வழிநடத்தி வருகிறார்.

காருண்யா பல்கலைக்கழகத்தின் உயர்வுக்காக பாடு படும், மற்றும் அதற்காக நிதி உதவிகளையும், ஜெப உதவி யையும் செய்து தாங்கும் அன்பு பங்காளர்கள் ஒவ்வொரு வருக்கும் நாங்கள் குடும்பமாக நன்றி செலுத்துகிறோம். உங்கள் தியாக அன்புதான் அதன் உயர்வுக்கு ஓர் முக்கிய காரணமாகும். இடிந்து விழுந்துகிடந்த எருசலேமின் அலங்

கத்தைக் கட்ட பாரத்துடன் நெகேமியா என்ற மனிதன் எழுந்து செயல்பட்டான் என்று நெகேமியா 2:18ல் வாசிக்கிற படி, கர்த்தருடைய சித்தப்படி ஆரம்பிக்கப்பட்ட காருண்யா கல்வி ஸ்தாபனத்தை நாமும் ஒருமனதோடுகூட கர்த்தரு டைய நாம மகிமைக்கென்று சிறந்து விளங்கும்படி தொடர்ந்து தாங்கி, அதை கட்டி எழுப்புவோம். பொறாமை யினால், சத்துருவின் மக்கள் வீண் புரளிகளை எழுப்பி எதிர்நின்று போராடும் காரியங்களிலெல்லாம், கர்த்தர் நமக் காக முன்சென்று ஜெயம் கொடுக்க, கருத்தாய் கர்த்தரை நோக்கி ஒருமனதுடன் வேண்டுதல் செய்வோம். அங்கு கல்வி கற்று வெளியேறும் மாணவச் செல்வங்கள் ஒவ்வொரு வரும் கர்த்தரின் சித்தத்தின்படி நடந்து, அவர் நாமத்தை மகிமைப்படுத்த பாரத்துடன் வேண்டுதல் செய்வோம்.

ஊழியத்தினிமித்தம் நாங்கள் கடந்துசென்ற பலவிதமான சரீரப் பாடுகளைக் குறித்தும், கர்த்தர் ஒவ்வொன்றிலும் எங்களை அற்புதமாக வழிநடத்தின விதங்களைக் குறித்தும் இனி அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

* * * * *

செவ்வாய்கிழமை உபவாச ஜெபத்தின் மூலம் சாட்சி

அன்புள்ள சகோதரிக்கு,

செவ்வாய்கிழமை உபவாச ஜெபத்தை குறித்து 'விலையுயர்ந்த முத்து' பத்திரிகையின் மூலம் அறிந்துகொண்டேன். என்னுடைய மகள் சகல கட்டுகளிலிருந்தும் விடுதலைபெற வேண்டும் என்று செவ்வாய்கிழமை தோறும் உபவாசித்து, ஊக்கமாய் ஜெபம் செய்து வந்தேன். அற்புதமாக என்னுடைய மகள் பூரண விடுதலையை பெற்றாள். தேவனுக்கே மகிமை.

7 ஆகஸ்ட் 2009.

திருமதி. ரோம்லா பிலிப்ஸ்
ஜபால்பூர் – 1, மத்திய பிரதேசம்

5. சரீரத்தின் பாடுகளும், கர்த்தரின் அற்புத பாதுகாவலும்!

குடும்ப வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் கடந்து சென்ற பற்பல பாடுகளைக் குறித்தும், அதன்பின் கர்த்தர் மனமிரங்கி அருளிய நன்மைகளைக் குறித்தும் விளக்கமாகக் கண்டோம். இப்பொழுது அதே வண்ணமாக ஆரம்ப நாட்களிலிருந்து சகோதரன் தினகரன் அவர்கள் தனது சரீரத்தில் அடைந்த பாடுகளின் பயங்கரத்தையும், கடைசியில் அந்தவிதமான மரண இருளின் பள்ளத்தாக்கின் மத்தியில், கர்த்தருடைய ஆணி பாய்ந்த கரம் எப்படியாக நீட்டப்பட்டு, அவர் அற்புதமான ரீதியில் விடுதலை பெற்றார் என்பதையும் கவனிப்போம்.

திருமணமான புதிதில் சமையல் செய்ய தெரியாமலிருந்த நான், அதன்பின் மிகுந்த ஆர்வமுடன், சகோதரன் தினகரன் அவர்களுக்கு பிரியமானவிதத்தில் பலவிதங்களில் சமையல் செய்து, அவரை சந்தோஷப்படுத்த கற்றுக் கொண்டேன். விதம் விதமாக எதையாவது செய்து, அவர் உற்சாகமாய் சாப்பிடுவதைக் கண்டு நான் மிகுந்த மன மகிழ்ச்சியடைவேன். அலுவலக வேலையினிமித்தமும், கர்த்தருடைய ஊழியத்தினிமித்தமும் சில வேளைகளில் இரவு வெகுநேரம் கழித்து அவர் வீடு திரும்பினாலும்கூட, சமையலறையிலேயே அடுப்பினருகில் இரண்டு பேரும் உட்கார்ந்து, தோசையோ, சப்பாத்தியோ நான் சூடாக போட்டுக் கொடுக்கக் கொடுக்க அதை அவர் மிகுந்த மகிழ்ச்சி யுடன் சாப்பிடுவார். நானும் அவரோடு சேர்ந்து எத்தனை மணியானாலும் காத்திருந்துதான் உணவருந்துவேன்.

இந்தவிதமாக மனமகிழ்ச்சியால் நிறைந்து ஓடிக்கொண் டிருந்த எங்கள் இல்லற வாழ்வில் "சோதனை" எனும் புயல் காற்று பயங்கரமானவிதத்தில் வீசத்தொடங்கியது. திருமணத் திற்கு பிறகு குழந்தையில்லாப் பிரச்னையினால் ஒருசில

ஆண்டுகள் மனவேதனையில் உழன்று கொண்டிருந்த எங்களுக்கு அந்த துன்பத்தை மாற்றி, இன்பம் அளிக்கும் முகனாக இரண்டு அழகான குழந்தைகளை அருளி அதிலிருந்து ஜெய வாழ்வை அருளினார்.

செயலிழந்த சுவாச கோசங்கள்

ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் திருமண வாழ்வில் இனிதே கடந்து சென்றபின், பத்தாவது ஆண்டில் திடீரென்று என் கணவர் மெலியத் தொடங்கினார். நாங்களோ அந்த நாட்களில் கர்த்தருக்கென்று மிகுந்த வைராக்கியமாய் எந்தவித மருந்தும் அருந்தாமல், பக்திப்பரவசத்துடன் வாழ்ந்த காலம் அது! அவரைப் பார்த்த என் உறவினர்கள் சிலர் என்னிடம், "ஏன்! உன் கணவருக்கு நீ சரியாக சாப்பாடு போடுவதில்லையா? இப்படி மெலிந்துகொண்டே போவதின் காரணமென்ன?" என்று கேட்பார்கள்.

இந்நிலையில் அவர் அலுவலக வேலைக்கு செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. இருமலும், ஜுரமும் எப்பொழுதும் அவரை வாட்டி வதைத்தது. இதனால் அலுவலகத்தில் விடுப்பு எடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை வந்தது. அப்பொழுது மருத்துவரின் சான்றிதழ் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், அவருடைய இரண்டு நுரையீரல்களும் பாதிக்கப்பட்டிருப்பதையும், அவர் மரணத்திற்கு சமீபமாய் இருக்கிறார் என்பதையும் மருத்துவ பரிசோதனைகள் மூலம் அறிந்து, செய்வதறியாது துடிதுடித்துப்போனோம். பிள்ளைகள் இரண்டுபேரும் மிகவும் சிறுவர்கள். அவருடைய கடினமான சுகவீனத்தின் மத்தியில், குழந்தை ஏஞ்சலுடைய சிரித்த முகம்தான் எங்களை அந்நாட்களில் ஆறுதல்படுத்தியது. நாங்கள் அப்பொழுதுதான் மாறுதல் பெற்று சென்றிருந்த அந்த ஊர் புதியது. அங்கு யாரையும் அதிகம் தெரியாது. குடும்பத்திலோ, எங்கள் பக்திவைராக்கியத்தினிமித்தம் யாவராலும் தள்ளப்பட்டவர்கள் போன்ற தனிமை நிலை!

ஒருநாள் என் கணவர் என்னை அழைத்தார். அங்கு நான் கண்ட காட்சி, என் மனதை சுக்குநூறாக உடைத்தது. அவர் வாயிலிருந்து கட்டி கட்டியாக இரத்தக் கட்டிபோல வாந்தியில் வெளிவந்தது. அதுவரை கர்த்தருக்காகவே மிகுந்த வைராக்கியத்துடன் வாழ்ந்துவந்த எங்கள் மனம் செய்வதறியாது தவித்தது!

இந்த நிலையில்தான் என் கணவரை கவனித்துக் கொண்டிருந்த மருத்துவர் என்னிடம் வந்து, "அம்மா! நீங்கள் ஒரு காரியத்தை அறியவேண்டும். உங்கள் கணவர் மரணத்திற்கு மிகவும் சமீபமாயிருக்கிறார். ஒரு மாதமோ அல்லது ஒரு வாரமோ தான் அவரது வாழ்வு காலம் இருக்கலாம். எனினும், நீங்கள் வணங்குகிற தெய்வம் அவரை இந்த நிலையிலிருந்து விடுவிக்க நீங்கள் தான் அதிகம் பிரார்த்தனை செய்ய வேண்டும்" என்று கூறியபொழுது செய்வதறியாது கலங்கினேன். என் கணவரும், "ஆம்! அவர் சொல்வது சரியே! நான் எந்த நேரத்திலும் மரித்துப்போவேன். ஆனால், நான் இம்மட்டும் உண்மையாய் சேவித்துவந்த என் ஆண்டவர் உன்னையும், நம் இரண்டு குழந்தைகளையும் காப்பாற்றுவார்" என்று கூறினார்.

இதைக் கேட்ட நான் வேதனை தாங்க முடியாமல், ஒரு அறைக்குள்போய் முழந்தாளிட்டு, கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன்! கதறினேன்! "ஆண்டவரே! இம்மட்டும் நானும், என் கணவரும் ஒருவருக்கொருவர் துணையாகவும், ஆறுதலாகவும் இருந்தோம். இப்பொழுது மருத்துவர் கூறுகிறபடி, நீர் அவரை எடுத்துக்கொண்டால், நான் எப்படி வாழுவேன்? எனக்கு உலகமே ஒன்றும் தெரியாதே! அது மட்டுமின்றி உமது ஊழியம் அப்படியே நின்றுபோய் விடத்தானா நீர் அவரை அழைத்து, தெரிந்துகொண்டீர். எப்படியாவது நீர் மனம் இரங்கி, இந்த கடின சூழ்நிலையில் எங்களுக்கு உம் தெய்வீக வல்லமையினால் இரங்கி உதவி

செய்யும்" என்று கதறிய வேளையில், பரிசுத்த ஆவியான வரின் வல்லமை என்னை நிறைத்தது.

எனக்கு அருமையானவர்களே! நான் இதற்குமுன் பல வருடங்களுக்கு முன்பே பரிசுத்த ஆவியின் அபிஷேகத் தினால் நிரப்பப்பட்டிருந்தேன். பல சமயங்களிலும் கடின மான வேளைகள் வரும்பொழுது, கர்த்தரை நோக்கி மன்றாடுகையில், கர்த்தருடைய ஆவியானவர் அங்கு பிரசன்னமாகி, அந்த பயங்கரமான சூழ்நிலையில் தமது வல்லமையை விளங்கச் செய்வதை நான் அனுபவித்திருக் கிறேன்.

ஆம்! பிரியமானவர்களே! இந்த உலகில் பாடுகள், துன்பங்கள், எதிர்பாராத வேதனைகள் நம்மை கலக்கும் பொழுது நம்மை தைரியப்படுத்தி, தூக்கி நிறுத்த வல்லமை யுள்ளது, பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் உண்டாகும் பெலன்தான். எனவே, இதை வாசிக்கிற நீங்கள், நான் பெற்றிருந்ததுபோலவும், பரிசுத்த ஆவியானவரை அன்று ஆண்டவர் இயேசுவின் சீஷர்கள் பெற்று (அப். 2-ம் அதிகாரம்), புது பெலன், தைரியம், ஞானம், தேவ கிருபை மற்றும் வல்லமையால் நிறைந்ததுபோலவும், உடனடியாக ஆண்டவரிடம் ஜெபத்தில் கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள். அவர் மூலமாக மட்டுமே எந்தவித கடின சூழ்நிலையிலும் விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் வெற்றிபெற இயலும்.

ஆம்! அன்றும் நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட பொழுது, ஆண்டவரின் வார்த்தையை என்னால் கேட்க முடிந்தது. "மகளே, பயப்படாதே! நீ நினைப்பதுபோல் உன் கணவர் மரிப்பதில்லை. அவன் உயிரோடு எழும்புவான். அதோடுகூட, இம்மட்டும் சிறுசிறு ஆலயங்களில் மட்டுமே தேவனுடைய ஊழியத்தை செய்து வரும் அவன், இனிமேல் திறந்தவெளி அரங்குகளில் வல்லமையுடனும், வரங்களுட னும் தேவ செய்தியை அளிக்கும் கிருபையையும் நான் அருளுவேன்" என்றார்.

இதைக் கேட்ட நான் மிகுந்த விசுவாசத்துடன், அப்பொழுதே அவைகள் நிறைவேறிவிட்டது போன்று களிகூர்ந்து மகிழ்ந்தேன். ஆனால் உடனடியாக எந்தவிதமான முன்னேற்றத்தையும் அவர் சரீரத்தில் நான் காணவில்லை. ஆனால் என் உள்ளத்திலோ அசைக்க முடியாத நம்பிக்கை! "மனுஷருடைய வார்த்தை மாறக்கூடியது. கர்த்தருடைய வார்த்தையோ என்றும் மாறாதது" என்ற எண்ணம் என்னை நிரப்ப, ஒவ்வொருநாளும் கண்ணீர் விடுவதை நிறுத்தி, கர்த்தர் செய்யப்போகிற அற்புதத்தை எண்ணி, அவரை ஸ்தோத்தரித்துக்கொண்டேயிருந்தேன். இது ஒருநாள், இரண்டு நாட்கள் அல்ல! ஏறக்குறைய நான்கரை மாதங்கள் இவ்வாறாக கடந்து சென்றபொழுதிலும் நம்பிக்கையில் சற்றேனும் தளராமல், அந்த அற்புதத்தைக் காணும் நாளுக்காக ஆவலுடன் காத்திருந்தேன்.

ஒருநாள் மதியவேளை! அவருக்கு உணவு தயாரித்து, அவைகளை கையில் ஏந்திக்கொண்டு, அவரது அறைக்கு வந்தேன். அங்கு நான் கண்ட காட்சி, அப்படியே என்னை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதுவரையிலும் படுக்கவும் இயலாமல், உட்காரவும் இயலாமல் தவித்துக் கொண்டிருந்த என் அன்புக் கணவர், அன்று படுக்கையில் முழங்காலிட்டு ஜெபம் செய்து கொண்டிருப்பதைக் கண்டேன். என் உள்ளம்

அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. நின்று கொண்டிருந்த அதே இடத்தில் நானும் பாத்திரங்களையெல்லாம் கையில் ஏந்திய அந்த நிலையிலேயே, முழங்காற்படியிட்டு, கர்த்தரை நோக்கி ஸ்தோத்தரித்தேன்.

அன்பானவர்களே! நம் ஆண்டவர் வார்த்தையில் மாறாதவர். "வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ள வர்" (எபிரெயர் 10:23). அவர் நம் கண்ணீரையெல்லாம் துடைக்க வல்லவர் (ஏசாயா 25:8).

> இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? எரேமியா 32:27

ஆம்! அவரால் ஆகாதது ஒன்றுமில்லை என்பது நூற்றுக்குநூறு உண்மை தான். அன்று முதல் அவரது கெட்டுப்போயிருந்த இரண்டு நுரையீரல்களும் ஆச்சரிய மான முறையில் குணமடைந்து, அவர் தெய்வீக ஆசீர்வாதத் தால் பரிபூரண சுகத்தைப் பெற்றார்.

மட்டுமின்றி, பரிசுத்த ஆவியானவர் என்னிடம் கூறிய படியே, சில தேவனுடைய ஊழியர்கள் என் கணவரிடம் வந்து, "ஐயா! இனிமேல் நீங்கள் திறந்தவெளி அரங்குகளில் தேவனுடைய ஊழியத்தை செயல்படுத்தவேண்டும். இதற்கு நாங்கள் எங்களாலியன்ற உதவிகளை செய்கிறோம்" என்று கூற, அவ்வாறே, வேலூர் பட்டணத்திலுள்ள ஒரு குடும்பத்தாரின் உதவியோடு, முதன் முறையாக 12.10.1970 அன்று இந்த கூட் டத்தை வேலூரில் நடத்தும்படி தேவன் தமது வாக்கின் படியே கிரியை செய்தார். அன்பான

வர்களே! பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் எத்தனை மகிமையானது என்பதை அதை அனுபவிக்கிறவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

இதை வாசிக்கிற என் அன்பு சகோதர சகோதரிகளே! நீங்களும் பரிசுத்த ஆவியின் நிறைவை இன்றுவரை பெறாமலிருப்பீர்களென்றால், இனிமேலும் காலதாமதம் செய்யாமல், உடனே முழந்தாளிட்டு, லூக்கா சுவிசேஷம் 11:13-ஐ வாசித்துப் பாருங்கள்.

> பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர் களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.

அதில் கூறப்பட்டுள்ளபடி, கர்த்தரை நோக்கி உண்மை யுடனும், வாஞ்சையுடனும் கேளுங்கள்.

> தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத் தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். ஏசாயா 44:3

என்று வாக்கருளிய ஆண்டவர் பட்சபாதமற்றவர்.

> இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர் கள். யோவான் 16:24

என்று ஆண்டவர் அருளிய வாக்குத்தத்தத்தின்படியே அதை உடனடியாக நிறைவேற்றுவார். இந்தவிதமாக ஆவியில் நிரப்பப்படுவதின்மூலம் நான் எத்தனை முறையோ பெல வீனத்தில் பெலன் பெற்று, வாழ்வில் ஜெயம் பெற்றிருக்கி றேன். எனவே, ஏதோ கதை வாசிப்பதைப்போல் இந்த பகுதியினை நீங்கள் வாசித்து அதை அலட்சியப்படுத்தா மல், அதை உடனே தேவ ஒத்தாசையுடன் உங்கள் அனுபவ மாக்கிக் கொள்ளுங்கள்.

செயலிழந்த சிறுநீரகங்கள்

என் கணவர் சகோதரர் தினகரன் அவர்கள் தன் அலுவலக வேலையிலும் கடினமாக உழைப்பார். அதோடுகூட கர்த்தருடைய காரியங்களிலும் தொடர்ந்து கவனமாக பணியாற்றுவார். இரவில் அவர் உறங்கும் நேரம்கூட மிகவும் குறைவாகவே இருந்தது. சில சமயங்களில் ஊழியத் தினிமித்தம் பல பிரச்னைகளை சந்திக்க வேண்டிய நேரங் களிலெல்லாம், இரவு முழுவதும்கூட முழங்காலிலிருந்து கர்த்தரோடு ஜெபத்தில் உரையாடுவதை நான் கண்டிருக் கிறேன்.

இவ்வாறான கடின உழைப்பினிமித்தம், தன் சரீர சுகத்தை அவ்வளவாய் கவனிக்காமல் போனதினிமித்தம் 1985 ஆம் ஆண்டு திடீரென்று அவரது இரண்டு சிறுநீரகங்களும் செயலிழக்கும் நிலை ஏற்பட்டது. இதைக் குறித்து எங்க ளுக்கு ஒன்றுமே தெரியவில்லை. அந்த நாட்களில், சகோதரர் அவர்களுக்கு அருமையான மருத்துவ நண்பர் ஒருவர் இருந்தார். சகோதரருடைய மருத்துவ அறிக்கையை அவர் (Medical Report) பார்த்துவிட்டு "ஓவென்று" அழுதார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அப்பொழுது அவர், "உங்கள் கணவர் மரணத்தருவாயிலிருக்கிறார்" என்று எனக்கு யாவற்றையும் விளக்கிக் கூறினார். உடனே மருத்துவ மனையில் சேர்த்து, இரத்தத்தை சுத்திகரிக்கும்படியான கஷ்டமான சிகிச்சைகளை செய்தனர். அப்பொழுதெல்லாம் என் கணவர், "என்னால் இந்த வலியையெல்லாம் தாங்க முடியவில்லை. எனக்காக ஜெபம் பண்ணாதே. என்னை விட்டுவிடு. நான் ஆண்டவரிடம் போகட்டும்" என்று கண்ணீருடன் கூறுவார். குடும்பமே கண்ணீரில் மூழ்கியது.

இந்த நிலையில் அந்த மருத்துவ நண்பர் மூலம் அதிசய மான விதத்தில் அமெரிக்காவிற்கு சிகிச்சைக்கு செல்லும் படியான அற்புதம் நடந்தது. மெதடிஸ்டு சபை பேராயர்

ஒருவர் அமெரிக்காவிலிருந்து சென்னைக்கு வந்திருந்த பொழுது, சகோதரரின் மருத்துவ நண்பர் அவரிடம், "கர்த்தர் சகோதரரை எவ்வளவு வல்லமையோடு உபயோகிக்கிறார். ஆனால் அவர் மரணத்தருவாயிலிருக்கிறார்" என்று கூறியபொழுது, அவர் அமெரிக்கா திரும்பியவுடனே அங்கிருந்த பெயர்பெற்ற மெதடிஸ்டு மருத்துவமனையுடன் சம்பந்தப்பட்ட பேராயருடனும், மற்றும் மருத்துவக் குழுவினரிடமும் பேசி, அதன் பின்னர் எங்களை உடனே புறப்பட்டு வரும்படி செய்தி அனுப்பினார். எங்கே போய் தங்குவது, கையில் அதற்கு வேண்டிய பணமும் இல்லையே என்று நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் தங்குவதற்கென்று, சகோதாருடைய ஜெபத்தின் மூலம் விடுதலைபெற்ற ஒரு குடும்பத்தினரை கர்த்தர் ஆயத்தப்படுத்தினார். அதேபோன்று பிரயாண செலவுக்கென்று உதவிசெய்ய வேறொருவரை அற்புதமாய் ஏற்படுத்தவே நாங்களும் புறப்பட்டு சென்றோம்.

புறப்படும் நேரம் சென்னை விமான நிலையத்தில் அநேக உடன் ஊழியர்கள் வழியனுப்ப வந்திருந்தனர். அவர்களுள் ஒரு சகோதரி என்னிடம், "சகோதரி! நீங்கள் எப்பொழுது திரும்பி வருவீர்கள்?" என்று கேட்டபொழுது, "சகோதரர் திரும்ப வரும்பொழுது உயிரோடு வருவாரா? அல்லது என்ன நேரிடும்?" என்று எண்ணி என் உள்ளம் வேதனையால் சுக்குநூறாக உடைந்தது. எனினும், என் கண்ணீரை வெளியில் காட்டாமல் அடக்க, என் உதடுகளை அப்படியே இறுக கடித்துக்கொண்டேன். அதினிமித்தம் அதில் காயம் ஏற்பட்டு கஷ்டப்பட்டேன். என் துக்கம் அத்தனையாய் பெரிதாயிருந்தது.

நாங்கள் தங்கியிருந்த அந்த வீட்டார் எங்களுக்கு காண்பித்த அன்பு கொஞ்சநஞ்சமல்ல! ஏனெனில், அவர்கள் வாழ்வில் கர்த்தர் சகோதரர் தினகரன் மூலம் பெரிய அற்புதம் செய்திருந்தார். அந்த நன்றியினிமித்தம் இந்த

குடும்பத்தார் தங்கள் உயிரையே கொடுக்கும் அளவிற்கு அத்தனையாய் அன்பு காண்பித்தனர்.

இந்த நிலையில் எங்களோடுகூட வந்திருந்த அன்பு மகள் ஏஞ்சல், படிப்பினிமித்தம் சென்னை திரும்பவேண்டிய சூழ்நிலை! அவளை வழியனுப்பும் வேளையில், நாங்கள் இருவரும் வடித்த கண்ணீருக்கு அளவேயில்லை. ஏனெனில், சென்னையில், அவளும், என் மாமனார் அவர்களும் மட்டுமே வீட்டில் தனியே இருக்க வேண்டும். இப்படியாக குடும்பம் பிரிந்த நிலை ஒரு புறம், மற்றொருபுறம் கண்ணீரிலும், என்ன நடக்கப்போகிறதோ என்ற கவலையிலும் நாட்களைக் கடத்தி வந்தோம்.

மாதங்கள் பல கடந்தன. ஒருநாள் இரவு, மருத்துவ மனைக்கு வரும்படி அழைக்கப்பட்டோம். இரத்தம் பரிசோதனைக்கு கொடுக்கப்பட்டது. அடுத்த நாள், காலை 6 மணிக்கெல்லாம் மருத்துவமனையில் சேரவேண்டுமென் பதையும், மாற்று சிறுநீரகம் ஒன்று பொருத்தமாகக் கிடைத்திருப்பதையும் தெரிவித்தனர். அதிகாலை 4 மணிக் கெல்லாம் மிகுந்த கவலையோடு நான் ஆயத்தங்களை செய்துகொண்டிருந்தேன். என் கணவரோ அரைக்கண்கள் திறந்தாற்போன்ற நிலையில் ஏதோ ஒரு எண்ணத்தில் ஆழ்ந்திருப்பதை நான் கண்டு, ஏதோ பரலோக தரிசனம் காண்கிறார் என்று அறிந்துகொண்டேன். நான் நினைத் ததைப் போன்றே அன்று, அந்த கடினமான மரண இருளின் மத்தியிலும், கர்த்தர் அவருக்கு “இளம் பங்காளர் திட்டம்” மூலம் சிறுவர்களுக்கான காரியங்களில் ஒரு ஜெப ஊழியம் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற காரியத்தினை வெளிப் படுத்தியிருக்கிறார். 1985ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் நாளன்று இந்த ஊழியம் ஆரம்பமானது.

அதேநாளில்தான் சகோதரருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையும் நடந்தது. நல்லமுறையில் அறுவை

சிகிச்சை முடியவே, சில நாட்களுக்குள் அறைக்கு அனுப்பி னார்கள். அன்று இரவு நான் மட்டும் தனியே அவரோடு தங்கியிருந்தேன். திடீரென்று சிறுநீர் வெளியே வருவது தடையானது. அப்பப்பா! அந்த நேரம் நாங்கள் தவித்த தவிப்பு! ஆனால் உடனே விசுவாசத்துடன் கர்த்தரை நோக்கி இருவரும் மன்றாடினோம். கர்த்தர் அப்பொழுதும் எங்களோடிருப்பதை நிரூபிக்கும் வண்ணமாக, தடைகளை அகற்றி, கர்த்தர் அதில் விடுதலையைக் கொடுத்ததோடு, வெகு விரைவில் "நீங்கள் இனி வீடு திரும்பலாம்" என்றும் மருத்துவர்கள் சில தினங்களுக்குள் கூறும்படி செய்தார். அந்த பயங்கரமான சூழ்நிலையிலும் கர்த்தர் தம் அன்பின் பிரசன்னத்தால், எங்களை ஆற்றித்தேற்றி, அநேக தேவ தாசர்களை அச்சமயத்தில் வீட்டிற்கு அனுப்பி, எங்களை கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கும்படி செய்தார்.

சகோதரர் அவர்கள், சரீரத்தில் அதிகமான வலியின் வழியாக கடந்து சென்றார். ஒருநாள் தான் கடைக்கு ஏதோ வாங்க சென்ற பொழுது, அங்கே "Thank you Jesus" ("ஆண்டவரே, நன்றி") என்ற வாசகமுள்ள ஒரு காபி அருந்தும் கோப்பையைக் கண்டு அதை வாங்கிவந்து, ஒவ்வொரு முறை சகோதரர் அதில் ஏதாவது அருந்தும்பொழுது, "ஆண்டவரே! நன்றி" என்று சொல்லும்படி உற்சாகப் படுத்துவேன். அவர் உடனே சிரித்துவிடுவார். இப்படியாக தேவ தயவால் சரியாக ஆறு மாத சிகிச்சைக்குப்பின் அமெரிக்காவிலிருந்து சென்னைக்கு பூரண சுகத்துடன் திரும்பினோம். விமான நிலையத்தில் அன்பு மகள் ஏஞ்சலும், என் மாமனாரும், மற்றும் நண்பர்களும் வந்து வரவேற்றனர். அந்த நேரம் எத்தனை மகிழ்ச்சியாயிருந்தது! யாவரும் இணைந்து கர்த்தரை மனமாற ஸ்தோத்தரித்தோம்.

அடுத்த நாள் மகள் ஏஞ்சலுடைய 17-வது பிறந்த நாள் (4.11.1985). அந்த நாளை ஜெபத்துடனும், ஸ்தோத்திரத்து டனும் கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து மிகவும்

விமரிசையாக கொண்டாடினோம். ஆனால் அதுதான் எங்களோடு அவன் கொண்டாடின கடைசி பிறந்தநாள் என்பதை நினைக்கும் பொழுது மனம் எத்தனையாய் பாடுபடுகிறது.

மகன் எஞ்சல்,
17-வது பிறந்தநாள்

இதற்கு பிறகு 1986 ஆம் ஆண்டு அவனை விபத்தில் இழந்த துக்கம் எங்களை தொடர்ந்தது! 1989 ஆம் ஆண்டு, மகன் பால் தினகரனின் திருமணம் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால் அதே ஆண்டில் டிசம்பர் முதலாம் தேதி மகள் இவாஞ்சலினின் அன்புத் தாயார் அவர்கள் மரணம் அடைந்தபோது மறுபடியும் துக்கம். இந்த துக்கமெல்லாம் சகோதரரின் மனதை வெகுவாய் தொடர்ந்து பாதித்தது.

இருதயம் பழுதுபட்டதால் வேதனை

1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் தேதி! காலையில் வழக்கம்போல் தனி அறையில் ஜெபித்துக்கொண்டிருந்த சகோதரர் அவர்கள் என்னைக் கூப்பிட்டு, "எனக்கு எப்படியோ இருக்கிறது. கொஞ்சம் ஹார்லிக்ஸ் கொண்டு வா" என்று சொன்னபொழுது, "ஒருநாளும் ஹார்லிக்ஸ் குடிக்க மாட்டாரே" என்று எண்ணிய நான், சமையலறைக்கு சென்று தயாரித்து, அதை கொண்டுவந்தபொழுது, நான் கண்ட காட்சி! ஜெப நிலையில் இருந்த சகோதரர் மயக்கமுற்று கீழே விழுந்து கிடந்ததைக் கண்ட ஊழியர்கள் அவரைத் தூக்கி கட்டிலில் படுக்க வைத்திருந்தனர். அவர் மயக்க நிலையில் இருந்தார். முழங்கால்வரை உடல் சில்லிட்டுவிடவே, உடன் ஊழியர்கள் தைலத்தைப் பூசி

சூடு உண்டாக்கிக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் எங்களுக்கு தெரிந்த பல மருத்துவர்களை தொலைபேசி மூலம் அணுகியபொழுது ஒருவரும் கிடைக்காத நிலையில், அப்படியே சகோதரரைத் தூக்கிக்கொண்டு விஜயா மருத்துவமனையை நோக்கிக் காரில் கிளம்பினோம். போய் சேரும்வரை "இது எப்படி ஆகுமோ" என்று எங்கள் மனம் பட்ட பாடு!

எனினும் "கிறிஸ்துவே என் மகிமையின் நம்பிக்கையாக இருக்கிறார்" (கொலோ. 1:27) என்ற வசனத்தின் படியே, கர்த்தர் மேலுள்ள விசுவாசத்துடனும், கர்த்தர் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையுடனும் கர்த்தரையே சார்ந்துகொண்டு, மருத்துவமனையை அடைந்தோம். சரியாக நாங்கள் தேடிய நபரும், சகோதரரை அதிகம் நேசித்தவருமான மருத்துவர் ஓடோடி வந்து அவரை அறைக்கு கொண்டுசென்று, மற்றும் பல மருத்துவர்களின் உதவியைக் கொண்டு, மார்பில் தலையணையை வைத்து அடிக்கவே, போன உயிர் தேவ கிருபையால் திரும்ப வந்தது. அதன்பிறகு இருதய அறுவை சிகிச்சையும் பல மணி நேரங்கள் தொடர்ந்து நடந்தது. அப்பப்பா! அந்நாட்களி லெல்லாம் நாங்கள் கடந்து சென்ற கண்ணீரின் பாதை பயங்கரமாயிருந்தது.

அந்த நாட்களில்தான் பேரன் சாமுவேல் பால் தினகரனை இவாஞ்சலின் கருத்தரித்திருந்தாள். ஒன்றுமே சாப்பிட முடியாமல் வாந்தி எடுப்பாள். மருத்துவமனை அறையில் ஒருபுறம் சகோதரர் தினகரன் அவர்கள் கட்டிலில் படுத்தி ருப்பார். மற்றொருபுறம் எனக்கு கொடுக்கப்பட்ட சிறிய கட்டிலில் மகள் படுத்துக்கொள்வாள். ஆரஞ்சுப்பழம் வாங்கி உரித்துக்கொடுத்து, சாப்பாட்டையும் அவளுக்கு ஊட்டிவிடுவேன். சில மாதங்களுக்கு பிறகு மருத்துவமனை யிலிருந்து வீடு திரும்பினோம். சகோதரர் பெலவீனமாகவே இருந்தார். அப்பொழுது தான் எங்கள் நொந்த மனம்

ஆறுதலடையத்தக்கதாக, பேரன் பிறந்தான். ஆம்! நம் ஆண்டவர்"துன்பப்பட்ட வருஷங்களுக்கு சரியாக மகிழ்ச்சி யாக்குகிறவர்" *(சங்கீதம் 90:15).*

சகோதரரை மருத்துவமனையில் அனுமதிக்கவேண்டிய பல வேதனையான சூழ்நிலைகள் இவ்விதமாக தொடர்ந்து பலமுறைகள் வந்தன. அப்பொழுதெல்லாம் மரணத் தருவாயினை பலமுறை சந்திக்க வேண்டிய நிலமை! ஆனால், கர்த்தரோ, ஒவ்வொரு முறையும் எங்கள் கண்ணீரையெல்லாம் பார்த்து, அற்புதம், அதிசயம் செய்து அவரை குணமாக்கி, வீடு திரும்ப செய்தார். ஆனால், அந்த பெலவீன நிலையிலும் தன்னாலியன்ற அளவில் தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தை உண்மையும், உத்தமுமாய் அவர் நிறைவேற்றி வந்தார்.

பாதிக்கப்பட்ட பாதங்களால் வேதனை!

இவைகளுக்கு பிறகு, பல ஆண்டுகளாக, ஜெப நேரங் களில், தனது கால்களை மடக்கி வைத்த நிலையில் பல மணி நேரம் ஜெப நிலையில் இருந்ததின் விளைவாகவும் மற்றும் பல மணி நேர இருதய அறுவை சிகிச்சைக்கு பின்னர் இரத்த ஓட்டம் குறைவுபட்டதினிமித்தமும் அவரது கால்கள் பெலவீனப்பட்டு, அவரால் தனியே நடக்க முடியாத பரிதாப நிலை வந்தது. அப்பொழுது அவர் மனம் அடைந்த வேதனை சொல்லி முடியாதது. எனினும், ஊழியத்தை செய்யும்பொழுதும், பிரசங்கிக்கும்பொழுதும் தேவ வல்லமை அவரில் அந்த நாட்களிலும் வெகுவாய் வெளிப் படும். எனவே, "சரீரம் பெலவீனப்பட்டால் என்ன? ஆண்டவர் உங்களோடுகூட இருந்து, ஊழியத்தில் எத்தனை அழகாய் உபயோகப்படுத்துகிறார்" என்று கூறி உற்சாகப் படுத்துவேன். பாவம்! கால் நன்றாக நடப்பதற்கான கடுமை யான உடற்பயிற்சிகளையெல்லாம் தினமும் செய்வார். ஒவ்வொருநாளும் என் அறைக்கு வந்து, கர்த்தர் செய்யும்

மாற்றங்களை பகிர்ந்துகொண்டு மகிழ்வார். கால்களில் பெலன் கொஞ்சம் கொஞ்சமாக வர ஆரம்பித்தது.

இந்த நேரத்தில்தான் 2008ஆம் ஆண்டில் பிப்ரவரி 20ஆம் தேதியன்று தேவன் தம்முடைய சித்தப்படி அவருக்கு இளைப்பாறுதல் தர எண்ணி, தம் பரலோக இராஜ்யத்திற்கு அவரை அழைத்துக் கொண்டு போய்விட்டார். அவர் மரிப்பதற்கு சற்று முந்தைய நாட்களில், குடும்ப ஜெப வேளை களிலெல்லாம், "ஆண்டவரே! எங்கள் இருவரையும் ஒன்றாய் உம் இராஜ்யத்திற்குள் எடுத்துக்கொள்ளும்" என்று ஜெபிப்பார். எனவே, அவர் மரணமடைந்தபொழுது, அவர் ஜெபம் கேட்கப்பட்டு, எனக்கும் முடிவு உடனே வரும் என்று ஆவலாய் காத்திருந்தேன். ஆனால் தாங்க முடியாத துக்கத்துடன் இரண்டு நாட்களைக் கடந்து சென்ற என்னிடம், "மகளே! இவ்வளவு நாள் உன் கணவனை உண்மையும், உத்தமமுமாக கவனித்துக்கொண்டே எனக் காக ஊழியமும் செய்து வந்தாய். இனி நீ நூறு சதவீதம் எனக்காக, என் ஊழியத்திற்காக, உன்னை ஒப்புவிக்க வேண்டும்" என்று கர்த்தர் பேசினார்.

மாம்சப்பிரகாரமாக சில வேளைகளில் "தனிமை" என்னை வாட்டி வதைக்கும். அதே நேரம் தேவ பிரசன்னம் என்னை அளவில்லாமல் நிரப்பும். உடனே தேவன் ஏதாவது ஒரு ஊழியத்தை செய்யும்படி என்னை உற்சாகப்படுத்து வார். இவ்விதமாகத்தான் என் கணவர் ஆண்டவரின் இராஜ் யத்திற்கு அழைக்கப்பட்ட பின்பும், மாம்சப்பிரகாரமாக இருதயம் துக்கத்தால் நிறைந்தபொழுதிலும், ஆவியான வரின் பெலன் என்னை ஆச்சரியமான விதத்தில் பெலப் படுத்தி வருகிறது. பிசாசானவன் என் சரீரத்தில் வியாதி, பெலவீனம் இவைகளின் வழியாக நான் கடந்து செல்லும் படி முயற்சி செய்தபொழுதிலும், அநேக தேவனுடைய ஊழியர்களின் ஜெபத்தின்மூலம் பரிசுத்த ஆவியானவரின் சந்தோஷம் என்னை நிரப்பவும், கர்த்தர் என்னை அற்புத

மாக சுகத்துடன் காத்து, தம் ஊழியத்தில் நான் ஈடுபடவும் பிசாசை ஜெயிக்கவும் அற்புதமாக வழிநடத்தி வருகிறார்.

> நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.
>
> I கொரிந்தியர் 15:57

என்ற வேதவசனத்தின்படியே, இவ்வுலகத்தின் பாடுகள் மத்தியிலேயும் ஜெயம் கொடுக்கிற தேவன் எங்களோடு கூடவே இருந்து, கரம்பிடித்து வழிநடத்தி வருகிறார்.

இதுபோன்றே, குடும்ப வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் பல்வேறு விதங்களில் கண்ணீரின் பாதையில் வாழ்கின்ற எனக்கன்பானவர்களே!

> நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றை யுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத் தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.
>
> பிலிப்பியர் 4:6,7

என்ற வேத வசனங்களின்படியே, நீங்களும் கர்த்தரை மட்டும் உறுதியாக பற்றிப்பிடித்துக்கொண்டு, அவர் தரும் பூரண சமாதானத்தால் நிறைந்து கொள்ளுங்கள். சோர்வுக்கு இடம் கொடாமல், ஆண்டவருடைய பரிசுத்த பாதத்தில் காத்திருந்து, புது பெலன் பெற்று, ஜெயம்கொண்ட வாழ்வைப் பெறுங்கள்.

> உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டி ருக்கிறவர்களும் பாக்கியவான்கள். அழுகையின் பள்ளத் தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகி றார்கள்; மழையும் குளங்களை நிரப்பும். சங்கீதம் 84:5,6

என்ற வசனங்களின்படியே, என்னைப் போல் இழப்புகளையும், மரண இருளையும் வாழ்வில் மாறி மாறி காணும் ஒவ்வொருவரையும் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களாகவும் (ஏசாயா 61:3), நித்தமும் உங்களை கரம் பற்றி நடத்தி, வறட்சியான காலங்களிலும் உங்கள் ஆத்துமாவை திருப்தியாக்கி, நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் செழிக்கச் செய்து (ஏசாயா 58:11) சம்பூரண நன்மைகளால் நிரப்பி வழிநடத்துவார்.

* * * * *

குடிப்பழக்கம் நீங்கி சந்தோஷ வாழ்வு!

அன்புள்ள ஸ்டெல்லா அம்மா அவர்களுக்கு,

நான் 20 வருட காலமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தேன். இதனால் எனக்கு கடன் பிரச்னை அதிகமானது. எனவே, குடும்பத்தில் எப்போதும் சண்டைதான். சமாதானம் என்பது கொஞ்சம்கூட இல்லாமல் என்னுடைய குடும்பம் மிகவும் வேதனைப்பட்டது. நான் குடித்துவிட்டு என் மனைவி பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்துவேன். என்னுடைய வாழ்க்கையில் குடிப்பழக்கம் தான் எல்லாம்; குடியில்லாமல் நான் இல்லை என்ற அளவுக்கு ஆகிவிட்டது. இதினிமித்தம் ஒரு சமயம் நான் தற்கொலை செய்வதற்கும் முடிவெடுத்தேன். ஆனால் என் மகள் மூலம் அந்த காரியத்தை கைவிட்டேன். என்னுடைய அம்மா, ஜெப வீரர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர்களும் எனக்காக ஜெபித்தார்கள். அதன்பிறகு என்னுடைய வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. 2007 ஜனவரி 13 ஆம் தேதி, ஜெபகோபுரத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் நான் கலந்து கொண்டேன். அன்று உங்களுடைய ஜெபமும், ஆசீர்வாதமும் எனக்கு கிடைத்தது. அன்றிலிருந்து என்னுடைய எல்லாப் பாவ பழக்கத்தையும் விட்டு விட்டு குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறேன். எனக்காக ஜெபித்த உங்களுக்கும், ஜெப வீரருக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். தேவனுக்கே மகிமை.

மார்ச் 27, 2007.

ஜே. ஜோஸ்,
சென்னை – 16

6. ஊழியத்தில் அறிந்த உன்னத இரகசியங்கள்!

சகோதரர் தினகரன் அவர்கள் தன் வாலிப வயதில் வாழ்க்கையில் அடைந்த பல பாடுகளினிமித்தம் இந்த உலக வாழ்வையே வெறுத்து, தற்கொலைக்கு நேராக சென்ற வேளையில்தான், இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்து அவருக்காகவே தன் வேலை நேரம் போக மீதி நேரமெல்லாம் உழைத்து வந்த அவரது சித்தப்பா மூலம், இயேசுவின் அன்பைக் குறித்து கேள்விப்பட்டார். உடனடியாக, அதை சோதித்துப் பார்க்க எண்ணி, தன் வீடு திரும்பினார். ஏறக்குறைய 4 மணி நேர வேண்டுதலுக்குப்பின், தன் வாழ்வின் பாவக்கறைகளினிமித்தமே சமாதானமற்றதும், யாதொரு ஆசீர்வாதமற்றதுமான வாழ்வை தான் அனுபவிக்க நேரிடுகிறது என்ற உண்மையை உணர்ந்து, பின்பு இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டு, 1955ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 11ஆம் நாளில் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அதோடுகூட, உடனடியாக தன் சித்தப்பாவோடு சேர்ந்து ஓய்வு நேரங்களிலெல்லாம் ஆண்டவரின் சேவையில் ஈடுபட தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

அந்த நாட்களில் தான் எங்களுக்கு திருமணம் நடந்தது. கர்த்தர் தமது மிகுந்த கிருபையினால், எனது 16வது வயதிலேயே தமது தெய்வீக அன்பினால் என் உள்ளத்தை நிரப்பியிருந்தபடியால், திருமணம் ஆனவுடன், என்னைவிட அதிக ஆழமான பக்தியுடன் வாழ்ந்த என் கணவர் வாழ்வை எனக்கு முன்மாதிரியாகக் கொண்டு, அவரது வேத வாசிப்பு, ஜெபவாழ்வு இவைகளை நானும் பின்பற்றலானேன். ஊழியத்திற்காக அவர் செல்லும் வேளைகளிலெல்லாம் அவரை உற்சாகப்படுத்தி அனுப்புவதுடன், அவர் திரும்பி

வரும்வரை அவருக்காக பாரத்துடன் ஜெபிக்கும் பழக்கத்தையும் மேற்கொண்டேன்.

பரிசுத்த ஆவியின் நிறைவிற்கான வாஞ்சை

இந்த நிலையில் சகோதரர் அவர்கள் வேத புத்தகத்தை வாசித்தபொழுது, அப்.10:38ஆம் வசனத்தில், தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை எவ்வாறு பரிசுத்த ஆவியினால் நிறைத்து, உபயோகித்தார் என்பதை வாசித்து, அதே விதமான தெய்வீக அனுபவத்தை தானும் பெற வேண்டும் என்று கருத்தாய் ஜெபித்து வந்தார். ஆனால் எனக்கோ அந்த தெய்வீக அனுபவத்தின் மேன்மையைப் பற்றிய அறிவு கொஞ்சமும் இல்லாமலிருந்தது. ஆனால், திருமணமான புதிதில், ஒரு நாள், என் கணவர் அலுவலகத்திலிருந்து வருவதற்கு காலதாமதமானபொழுது, நான் தனிமையில் முழங்கால்படியிட்டு, எனக்கு மனப்பாடமாக தெரிந்த சில பக்திப் பாடல்களைப் பாடி, உள்ளத்தின் ஆழத்திலிருந்து கர்த்தரை முழுமனதுடன் துதிக்க ஆரம்பித்தேன். அவ்வாறு துதிக்க துதிக்க தேவ பிரசன்னம் என்னை அளவில்லாமல் நிரப்பியது. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை மின்சாரம் கடந்து செல்வதைப்போன்று ஒரு இனந்தெரியாத தெய்வீக அனுபவமும், நாவில் ஒருவிதமான அனுபவமும் ஏற்பட்டது.

ஆனால் அதன் மேன்மையை என் கணவர் அறிந்து வைத்திருந்ததுபோல், நான் அறியாதிருந்தபடியாலும், என் தகப்பனாரின் பல பாரம்பரிய உறுதியான உபதேசங்களினிமித்தமும் அந்த அனுபவத்தை தொடர்ந்து வாஞ்சித்து நாடாமல், அப்படியே விட்டுவிட்டேன். என் கணவரோ 1962ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் நாளில் அந்த தெய்வீக அனுபவத்தினால் நிறைந்து ஆனந்த மகிழ்ச்சி அடைந்தார். அப்பொழுது அவர் தன் பெற்றோரோடு தங்கியிருந்தார். மகன் பால் தினகரன் குழந்தையாயிருந்தபடியால், அதே

ஊரில் நான் என் பெற்றோரோடு தங்கியிருந்தேன். தினமும் காலையில் அலுவலகம் செல்லுமுன் 10 அல்லது 15 நிமிடங்கள் மட்டுமே குழந்தையைப் பார்க்க என் வீட்டிற்கு வருவார். தான் அனுபவிக்கும் உன்னதமான தெய்வீக அனுபவங்களையெல்லாம் அப்பொழுது என்னிடம் பகிர்ந்து கொள்வார். இதைக் குறித்து கேட்கும்பொழுதெல்லாம், என் உள்ளத்திலும், "நானும் பரிசுத்த ஆவியினால் நிறைய வேண்டும்" என்ற வாஞ்சை எழும்ப ஆரம்பித்தது. என் மகனை என் அன்புத் தாயாரும், தகப்பனாரும் மாற்றி மாற்றி கவனித்துக் கொள்வார்கள். எனவே, என் நேரத்தை யெல்லாம் வேத வாசிப்பிலும், ஜெபத்திலும் அதிகம் செலவழிப்பதோடு, கர்த்தர் என் வாஞ்சையை நிறைவேற்ற வேண்டும் என்று பாரத்துடன் கர்த்தரை விடாமல் பற்றிக் கொள்ளவும் செய்தேன்.

பிறகு என் மாமனார், மாமியார் வீட்டிற்கு சென்றேன். அங்கு, அநேக உறவினர்கள் குழந்தையை பார்க்கும்படி ஊரிலிருந்து வந்திருந்தனர். அவர்களில் ஒருசிலர் கிறிஸ்துவை அறியாத மக்கள். ஒருநாள் மாலை, சமையல் வேலையையெல்லாம் முடித்தபின்பு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியமாக வெளியில் போவதற்கு திட்டம் பண்ணிகொண்டிருந்தபோது, நான் என் மனதில், கர்த்த ருடைய சமூகத்தில் தனித்து ஜெபம் பண்ணவும், கர்த்தரை ஸ்தோத்தரிக்கவும் திட்டமிட்டு, ஒரு இருண்ட அறையில் யாருக்கும் தெரியாமல், முழங்கால்படியிட்டேன். குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது தான் அலுவலகத்திலிருந்து வந்த என் கணவருக்கு காபி கொடுத்துவிட்டு, குழந்தை அழுதால், தொட்டிலை லேசாக ஆட்டிவிடும்படி அவரிடம் சொல்லிவிட்டு, தனிமையில் ஜெபிக்க சென்றேன். முழங்கால்படியிட்டு, கர்த்தருக்கு, நன்றியுடன், "உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை" செலுத்த ஆரம்பித்தேன் (எபி. 13:15).

அதுவரை நான் அனுபவித்திராத விதத்தில் அன்று தேவ பிரசன்னம் என்னை அதிகமதிகமாய் நிரப்ப, என்னையே நான் மறந்தவளானேன். அதன்பிறகு நான் வாஞ்சித்து கேட்டபடியே, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்னை நிறைத்தது.

எப்பொழுதும் மிகவும் அமைதலாய் ஜெபிக்கும் நான், அன்று போட்ட கூச்சலைக் கேட்ட என் மாமனாரும், என் கணவரும் மற்றும் வெளியூரிலிருந்து வந்திருந்த உறவினர் களில் சிலரும் நான் இருந்த அறைக்கு ஓடோடி வந்தனர். என் கணவர், என் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டார். உடனே, செய்வதறியாது கண்களை மூடி அவரும் ஜெபித்த பொழுது, தரிசனத்தில் ஒரு தேவதூதன், "உன் கரங்களை அவள் தலைமீது வைத்து ஜெபம் பண்ணு. அவள் விருப்பத் தின்படியே அவளும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவாள்" என்று கூற, அவர் என் தலைமீது கை வைத்து ஜெபித்தவுடனே அந்த தெய்வீக அனுபவத்தை நானும் பெற்றேன். 1963ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ஆம் நாளில் கர்த்தர் என்னையும் அவ்வாறு நிறைத்தார்.

எனக்கு அன்பானவர்களே! நீங்களும் பரிசுத்த ஆவியான வரால் நிரம்பவேண்டுமென்று வாஞ்சிக்கிறீர்களா? அதை நீங்களும் நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் வீணும் விருதாவுமாக செலவழிக்காமல், பயபக்தியுடன் கர்த்தரை நாடித் தேடுங்கள்.

> அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.
>
> எபேசியர் 5:4

என்ற வசனத்தின்படி உங்கள் வாழ்வை வீணான லௌகீக காரியங்களினால் களங்கப்படுத்திக் கொள்ளாமல், கர்த்த ருடைய சமூகத்தில் தனித்திருந்து, கர்த்தர் செய்த நன்மை

களை ஒவ்வொன்றாக எண்ணியெண்ணி, இருதயத்தின் ஆழத்திலிருந்து கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள். கர்த்தர் துதிகளுக்குள் வாசமாயிருக்கிறார் (சங்கீதம் 22:3). நீங்கள் ஸ்தோத்தரிக்க ஸ்தோத்தரிக்க கர்த்தருடைய பிரசன்னம் உங்களை நிரப்பும். அவ்விதமாக நிரம்பும்பொழுது, தேவன் வாக்குத்தத்தம் பண்ணிய பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் இறங்குவார். அதன்பிறகு உங்கள் வாழ்வு பற்பல தெய்வீக ஆசீர்வாதங்களால் நிரம்பும். தெய்வீக பெலன், ஞானம், அன்பு இவைகளெல்லாம் உங்கள் வாழ்வை நிரப்பும்.

> தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். II தீமோத்தேயு 1:7

முதல் ஒலிப்பதிவாளர்

இந்த நிலையில், கர்த்தர் தமது மிகுந்த கிருபையினால் சகோதரர் தினகரன் அவர்களை ஊழியத்தில் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்த ஆரம்பித்தார். "இயேசு அழைக் கிறார்" என்ற பெயரில் திறந்தவெளி கூட்டங்களை பல இடங்களிலும் நடத்த ஆரம்பித்தோம். அங்கு பேசப்படுகிற செய்திகளை பதிவு செய்வதற்காக முதல் முதல் ஒரு டேப் ரிக்கார்டர் வாங்கினோம். ஆனால் சகோதரர் என்னிடம் மிகவும் கண்டிப்பாக, "நீ தான் மேடையில் அமர்ந்து, செய்திகள் யாவற்றையும் அதில் பதிவுசெய்ய வேண்டும்" என்று சொல்லிவிட்டார். எனக்கோ மேடையில் அமர்ந்த வுடன் ஒரே பயம். கை, கால்களெல்லாம் நடுங்க ஆரம் பித்தன. எப்படியோ நாளடைவில் பழகிக்கொள்ளும் படியான கிருபையை தேவன் எனக்கு கொடுத்தார். ஆக, நான் தான் "மீடியாத் துறையின் முதல் பணியாளர்" ஆனேன்.

அதன்பிறகு, தேவ கிருபையால் ஆண்டவருடைய இரட்சிப்பையும், அதை தொடர்ந்து பரிசுத்த ஆவியின் நிறைவையும் பெற்ற அன்பு மகன் பால் தினகரன், ஆண்டவர் அருளிய தெய்வீக ஞானத்தினாலும், வாஞ்சையினாலும் ஒலிநாடா ஊழியத்தை திறம்பட எடுத்து நடத்தும்படியான கிருபையையும் அதைத் தொடர்ந்து ஒளிநாடா மூலமும் தேவ ஊழியம் விஸ்தரிக்கப்படவும், மக்கள் அதன்மூலம் ஆசீர்வதிக்கப்படவும் ஆண்டவர் வழி திறந்தார். ஆண்டவருடைய பெரிதான கிருபையால், இன்று அதே மீடியாத் துறை, "இயேசு அழைக்கிறார்" அலுவலகத்தில் எத்தனை அழகாய் பலுகிப் பெருகி, இன்று எத்தனை கோடானகோடி மக்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கி வரும்படி தேவன் வழிநடத்தி வந்திருக்கிறார்.

ஊழியத்தில் நான் அறிந்த உன்னத இரகசியங்கள்

ஆரம்ப காலத்தில், ஊழியங்களுக்கு என் அன்பு கணவர் அழைக்கப்படும்பொழுது, தங்குமிடங்களில் நாங்கள் பலவிதமான அசௌகரியங்களை சந்திக்கவேண்டியது வரும். இரவிலே படுப்பதற்கு ஒரே ஒரு கட்டில், ஒரே ஒரு தலையணை மட்டும் கொடுக்கப்படும். இதை அறிந்தே நான் போகும்பொழுதே, மடக்கு பாய், ஊதி விரிவாகிற தலையணை இவைகளை கையில் எடுத்து செல்வேன். "நீங்கள் படுப்பதற்கு என்ன செய்யப் போகிறீர்கள். ஏதாவது வேண்டுமா?" என்று என்னை கேட்கக்கூட ஒருவரும் இருக்க மாட்டார்கள். அதில் என்ன ஆச்சரியம் என்றால், அந்த நிலையிலும் நான் கவலைப்படாமல், முறுமுறுக்காமல், குட்டி மகன் பால் தினகரனை பாயை விரித்து அதில் படுக்க வைத்துக்கொண்டு, நானும் ஒரு குழந்தையைப் போல அவனுடன் உறங்கிவிடுவேன். சாப்பாடு போடும் பொழுதும், "சகோதரியே! உங்களுக்கு எதுவும் வேண்டுமா?" என்று ஒருவரும் கேட்க மாட்டார்கள். நான்

ஒருவரையும் இதினிமித்தம் குறைவாகக் கூறவில்லை. எந்த நிலையிலும் திருப்தியாயிருக்கும்படியும், பொறுமையாயிருக்கும்படியும் அந்த வழியாக கடந்து செல்லும்படியாக கர்த்தரே என்னை வழிநடத்தினார்.

ஒரு குறிப்பிட்ட ஊரில் தங்கியபொழுது, நாங்கள் தங்கிய அறைக்கு கதவே இல்லை. துணியால் (Screen) மட்டுமே மறைவு இருந்தது. அதையும் யாராவது சொல்லாமல் கொள்ளாமல் தள்ளிவிட்டு வந்துவிடுவார்கள். வேறு ஒரு ஊரில் அட்டாளி (Attic) என்று சொல்லக்கூடிய சிறிய மேலறை, தங்குவதற்காக எங்களுக்கு கொடுக்கப்பட்டது. அங்கு செல்ல கால் வைத்து ஏறுவதற்கென்று மிகவும் குறுகியதான ஏணி ஒன்று வைக்கப்பட்டு, அதில்தான் ஏறியிறங்க வேண்டும். ஆனால் ஊழியத்தின் மேல் இருந்த வைராக்கிய வாஞ்சையினால் இவைகள் அப்பொழுதெல்லாம் மனதிற்கு கஷ்டமாகவே தெரியவில்லை. "கொஞ்சத்தில் உண்மையுள்ளவனை அநேகத்தின்மேல் அதிகாரியாக்குகிற தேவன் (மத்தேயு 25:21,23) மெல்ல மெல்ல உயர்த்தினார். "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான்" (நீதி. 28:20) என்ற வசனத்தின்படி, எங்களை சகலவிதங்களிலும் உயர்த்தின தேவன், தாழ்ந்திருக்கவும், வாழ்ந்திருக்கவும், பட்டினியாயிருக்கவும், திருப்தியாயிருக்கவும், குறைவுபடவும், பரிபூரணமடைய வும், போதித்து அழகாய் வழிநடத்தினார். "வாழ்வு காலத்தில் நன்மையை அநுபவித்திரு; தாழ்வுகாலத்தில் சிந்தனை செய்;" (பிர. 7:14) என்ற வசனத்தின்படி, எந்த நிலைமையிலும் கர்த்தர் மேல் மட்டுமே எங்கள் கண்களை வைத்து, அவருக்கு பயந்து நடப்பதில் ஜாக்கிரதையாயிருக்க கற்றுக் கொடுத்தார்.

எனக்கு அருமையான தேவனுடைய ஊழியர்களே! உங்களையும் கர்த்தர் குறைவுகளின் மத்தியிலே நடத்தும் பொழுது, அவருடைய வழிநடத்துதலின்படியே (ஏசாயா

30:21) அவரோடு இணைந்து, அவரது சித்தத்தை நிறை வேற்றுவதில் கவனமாயிருங்கள். இதைத்தான் பேதுருவும் அவருடைய நிருபத்தில், "ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (I பேதுரு 5:6) என்று எழுதியிருக்கிறார்.

இதேபோன்றுதான், ஆரம்ப நாட்களில் எங்கள் வீட்டில் 'உபயோகமான பொருட்கள்' என்று சொல்லக்கூடிய பொருட்கள் ஒன்றுமே இருக்காது. அந்நாட்களில் அடிக்கடி பல ஊர்களுக்கு மாறுதல் இருந்தபடியால், ஜாதிக்காய் பலகைகளில் பெரிய பெரிய பெட்டிகள் வைத்திருப்போம். அதைத்தான், சாப்பாட்டு மேஜையாகவும், பொருட்களை வைப்பதற்கான மேஜைகள் போலவும் அலங்கரித்து வைப்பேன். அதையும் சில பெண்கள் பார்த்து "அடடா! இது எவ்வளவு அழகாயிருக்கிறது" என்று கூறும்பொழுது எனக்கு ஆச்சரியமாயிருக்கும். இப்படி கொஞ்சத்தில் திருப்தி கொண்டிருந்த எங்களுக்கு கர்த்தர் கொஞ்சம் கொஞ்சமாக பொருட்களை கொடுக்க ஆரம்பித்தார். ஒரு ஞாயிறன்று ஆலயம் போய் திரும்பி வருகிற வேளையில், எங்கள் வீட்டிற்கு சற்று தூரத்தில் ஒரு கடையில், பிளாஸ்டிக் கயிற்றினால் அழகாக பின்னப்பட்ட கட்டில் ஒன்று நிறைவு பெறும் நிலையில் இருந்தபொழுது, நானும் என் கணவரும் அதை ஆவலோடு நின்று பார்த்துக் கொண்டிருந்தோம். பின்னர், கையில் பணம் இல்லாதபடியால் பேசாமல் வீடு வந்து சேர்ந்தோம்.

நாங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்தில், அந்த கட்டிலை தயாரித்த மனிதன், அதைத் தூக்கிக் கொண்டு வந்து எங்கள் வீட்டில் வைத்துவிட்டு, "ஐயா! இது உங்க ளுக்குத்தான்; மாதம் 5 ரூபாய் கொடுத்தால் போதும். நீங்கள் முழுத் தொகையையும் விரைவில் கட்டி விடுவீர்கள்" என்றான். அந்நாட்களில் அதன் விலை 95 ரூபாய் தான். அன்று நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

இதை நினைவுகூறும் பொருட்டு, இன்றும் அந்த கட்டிலை பத்திரமாக வைத்திருக்கிறோம். "எனக்கு நீங்கள் எந்த நிலைமையிலும் உண்மையாய் இருக்கிறபடியால், வரும் நாட்களில் உங்கள் வீட்டிலே சாமான்கள் வைப்பதற்கு இடமில்லையே என்று சொல்லுமளவிற்கு நான் உங்களை ஆசீர்வதிப்பேன்" என்று எங்களுக்கு வாக்கருளிய தேவன் நீதியின் வழிகளிலே எங்களை நடத்தி, தமது வார்த்தை யின்படியே இன்று நிறைவாய் ஆசீர்வதித்திருக்கிறார்.

நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் (கர்த்தர்) ஆசீர்வதிக்கிறார். **நீதிமொழிகள் 3:33**

குறைவுகளினிமித்தம் கலங்கியிருக்கிற எனக்கு அருமை யான ஊழியர்களே! விசேஷமாக சகோதரிகளே! உங்கள் கண்கள் இவ்விதமான பொருட்கள் மேலிராமல், மேலான வைகளையே நாடித் தேடும்பொழுது, இவ்விதமாக கர்த்தரே உங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பார் (கொலோ. 3:2).

பத்திரிகை பிரசுரிப்பாளராக!

பின்பு, 1973ஆம் வருடம் மே மாதம், "இயேசு அழைக் கிறார்" என்ற பெயருடன் மாதாந்தர பத்திரிகை ஊழியம் ஆரம்பமானது. சகோதரர் அவர்கள் அலுவலகப் பணியில் இருந்தபடியால் அவர்கள் பிரசுரிப்பாளராக (Publisher) இருக்க முடியாது என்ற காரணத்தினால் என்னை பிரசுரிப்பாளராக இருக்கும்படி கூறினார்கள். இதற்காக பல இடங்களுக்கு நான் செல்ல வேண்டியதாயிருந்தது. அப்பொழுது சென்னையில் IIT-யிலுள்ள State Bank-ல் சகோதரர் மேனேஜ ராக பணிபுரிந்து கொண்டிருந்தார். பேரூந்தில் ஒரு இடத்தி லிருந்து மற்றொரு இடம் ஏறிச் செல்லவும்கூட எனக்கு அந்நாட்களில் மிகவும் பயம். யாராவது துணைக்கு வரவேண்டும். இவ்வளவு பயம் நிறைந்திருந்த என்னை, பரிசுத்த ஆவியானவரே வெகுவாக தைரியப்படுத்தினார்

(சங்கீதம் 138:3). அதன்பிறகு பத்திரிகையில் பெண்களுக்கான தேவ செய்தி எழுதவும் ஆவியானவர் என்னை உற்சாகப்படுத்தினார்.

அன்று ஆரம்பித்த எழுத்துப்பணி தேவ ஆவியானவரின் வழிநடத்துதலால் இன்றுவரை தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கிறது. இவ்விதமாக கர்த்தர் கொடுத்த இந்த "இயேசு அழைக்கிறார்" பத்திரிகை ஊழியமானது ஆரம்பித்து பல வருடங்களாகியும், இன்றும், இந்த பத்திரிகையில் நாங்கள் பிரசுரிக்கும் எங்கள் குடும்பத்தினர் யாவருடைய தேவ செய்திகள் மக்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக அமைய ஆண்டவர் வழிநடத்தி வந்திருக்கிறார். அவருடைய பரிசுத்த வழிநடத்துதலுக்காக கர்த்தருக்கு கோடாகோடி ஸ்தோத்திரம் செலுத்துவோமாக.

அதேபோன்று கர்த்தர் தம் ஊழியர் சகோதரர் தினகரனோடு பேசி, பல ஆவிக்குரிய புத்தகங்களை எழுதி வெளியிடும்படியும் பேசியதால், அந்த ஆரம்ப நாட்களில் அதற்கான வசதிகளோ, தட்டெழுத்தாளர்களோ இல்லாத நிலையில், நானே வீட்டுக்காரியங்கள் யாவற்றையும் முடித்துவிட்டு, சகோதரர் தனித்து ஜெபிக்கும்படி சென்றிருக்கும் அந்த இடத்திற்கு சென்று அந்த அமைதியான சூழ்நிலையில், சகோதரர் சொல்ல சொல்ல என் கையாலேயே முழு புத்தகத்தின் சாராம்சத்தையும் எழுதி முடித்திருக்கிறேன். இரவில் வெகுநேரம்வரை அப்படி எழுதுவேன். அதிகாலையில் புறப்பட்டு திரும்ப வீடு வந்து சேர்ந்து வீட்டுக் காரியங்களையெல்லாம் கவனிக்க ஆரம்பிப்பேன். அப்பொழுதெல்லாம் பேரூந்தில்தான் பிரயாணம் செய்ய வசதியிருக்கும். அதுவும் சென்னையில் எனக்கு தனியே செல்ல சரியாக வழியும் தெரியாத பட்சத்தில், வெகுதூரம் நடந்தே சென்றிருக்கிறேன். இப்படி உருவானவைகள் தான் சகோதரர் எழுதிய முதல் இரண்டு புத்தகங்களாகிய

"குணமாக்கும் தழும்புகள்" மற்றும் "உருகாயோ நெஞ்சமே" என்பவைகளாகும்.

புத்தக எழுத்தாளராக!

இந்த நிலையில் யாதொரு தைரியமுமின்றி, மிகுந்த பயத்துடன் இருந்த என் வாழ்வில் வேறொரு திருப்பம் ஏற்பட்டது. ஒருநாள் சகோதரர் ஒரு கூட்டத்தில் பேச அழைப்பு பெற்றிருந்தமையாலும், தீர்க்கதரிசன வரம் பெற்ற வேறொரு அயல் நாட்டு ஊழியர் ஒருவரும் அங்கு வந்திருந்தபடியாலும், சகோதரர் அவர்களோடு நானும் அக்கூட்டத்திற்கு சென்றிருந்தேன். வழக்கம்போல் கூட்டத்தின் கடைசி பகுதியில் மூலையில் அமர்ந்திருந்தேன். அந்த வெளிநாட்டு ஊழியர் ஜெபவேளையில் திடீரென்று "இங்கு ஒரு சகோதரி இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய நாம மகிமைக்கென்று அநேகம் ஆவிக்குரிய புத்தகங்கள் எழுது வார்கள். ஆவியானவர் உணர்த்துவாரானால், அந்த சகோதரி மேடைக்கு எழுந்து வாருங்கள்" என்று அழைப்பு கொடுத்தார். ஒருவரும் எழுந்து முன்னே போகவில்லை. நானும் என் கண்களை இறுக மூடிக்கொண்டு "இந்தவித மான பணியில் செயல்பட எனக்கு ஏது திறமை?" என்று ஜெபநிலையில் இருந்தேன். அப்பொழுது அந்த ஊழியர் நான் இருந்த வரிசைக்கு நேரே வந்துநின்று, என்னை கரம் நீட்டி அழைத்ததால், மிகுந்த பயத்துடன் அவர் பின்னே "அடிக்கப்படப் போகிற ஆட்டுக்குட்டியைப் போல்" நடு நடுங்கி முன்னே சென்றேன். என் கணவர், "இந்தவிதமான பாக்கியம் பெறும் பெண் யாராயிருக்கும்? என்று கண் திறந்து பார்த்தபொழுது, என்னைக் கண்டதும் அவரும் அதிர்ச்சியடைந்தார். ஆம்! அவ்வளவாக பயமும், ஞான மற்றவளாகவும் நான் இருந்தேன்.

கர்த்தர் தமது வார்த்தையில் மாறாதவர். பரிசுத்த ஆவியானவர் அருளிய தெய்வீக ஞானத்தால், 1997ஆம்

ஆண்டு, முதல் முதலாக "விலையுயர்ந்த முத்து" எனும் புத்த கத்தை எழுத தேவன் கிருபை புரிந்தார். அந்த புத்தகம் இன்று பல மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு, அநேக பெண்கள் வாழ்வில் மிகுந்த மறுமலர்ச்சியைக் கொண்டு வருகிறது. ஹிந்தி மொழியில் வெளிவந்த புத்தகத்திற்கு "தேசிய விருது" பெறும் ஆசீர்வாதத்தையும் ஆண்டவர் கூட்டிக் கொடுத்தார். அந்த சமயத்தில் தான் அன்பு சகோதரர் அவர்கள் இருதய அறுவை சிகிச்சையினால் மிகுந்த வேதனையுடன் மருத்துவமனையில் இருந்தார். அந்த கண்ணீரின் சமயத்தில் தான் ஆண்டவர் இந்த நற் செய்தியை அனுப்பி, சோர்ந்துபோயிருந்த என் உள்ளத்தை ஆற்றித் தேற்றினார்.

என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம் முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது.

சங்கீதம் 94:19

இவ்விதமாக தேவ ஆவியானவரின் உதவியால் இன்று வரை ஏராளமான புத்தகங்களை எழுதி வெளியிட அவருடைய தெய்வீகக் கிருபையோடுகூடிய ஞானம் அழகாக செயல்பட்டு வருகிறது. விசேஷமாக "நாளுக்கு ஓர் நல் வார்த்தை" என்ற தினசரி தியான புத்தகம் பஞ்சாபி, குஜராத்தி போன்ற புதிய மொழிகளிலும்கூட வெளியிடப் பட கர்த்தரே வாசல்களைத் திறந்திருப்பது எத்தனை ஆச்சரியமாக இருக்கிறது. இவைகளெல்லாம் ஆவியான வரின் அதிசய நடத்துதலேயல்லாமல் வேறொன்றுமில்லை.

என் அன்பு சகோதரிகளே! நம்முடைய பெலவீனம், ஞானமற்ற நிலை போன்ற குறைவுகளை எண்ணி "நான் ஒன்றுக்கும் தகுதியில்லாதவள்" என்ற முடிவுக்கு வந்து விடாதீர்கள். அதற்கு பதிலாக, ஆவியில் அனலுள்ளவர் களாக உங்கள் ஜெபவேளையில் ஆண்டவருடைய பிரசன் னத்தால் அதிகமாக நிறைந்துகொள்ளுங்கள். "கர்த்தருக்காக

நான் எதையாவது செய்ய வேண்டுமே” என்று அவர் பணிக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். எதை செய்தாலும் உண்மை மனதோடு செய்யுங்கள். அப்பொழுது கர்த்தர் நீங்கள் எதிர்பார்க்கும் நன்மைகளுக்கு மேலாக உங்களை உயர்த்தி கனப்படுத்துவார்.

> நான் அவர்களுக்கு செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்கு முன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும், புகழ்ச்சி யாயும் மகிமையாயும் இருக்கும்; நான் அவர்களுக்கு அருளிச் செய்யும் எல்லா நன்மையினிமித்தமும், எல்லா சமாதானத்தினிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்கு வார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 33:9

வானொலி ஊழியத்தின் ஆரம்பப் பாடுகளும், பெற்ற நன்மைகளும்!

மேட்டூர் என்ற ஊரில் சகோதரர் வங்கியில் பணிபுரிந்து கொண்டிருந்த வேளையில், தேவன், பல அன்பு சகோதரர் களின் உதவியால் வானொலி வழியாக ஊழியம் செய்யும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார். ஆனால் அதற்கு பணம் செலுத்த வேண்டியதிருந்தது. எங்களிடமோ அதற் கான வசதியில்லை. அப்பொழுது அந்த ஊரிலிருந்த சில பெரியோர் முன்வந்து, இந்த ஊழியத்தினை நீங்கள் நிறை வேற்ற நாங்கள் நிச்சயம் முயற்சி செய்வோம் என்று எங்களை உற்சாகப்படுத்தினார்கள். அந்த ஊரிலுள்ள கிறிஸ்தவ மக்களிடம் தங்களாலியன்ற பண உதவியை செய்யும்படி முதல்முறையாக கேட்க, அதினிமித்தம் அவர்கள் பெற்ற வசை வார்த்தைகள், பரிகாசங்கள் எத்தனையெத்தனை! இருப்பினும் கர்த்தருக்காக பொறுமையுடன் அவர்கள் இந்த காரியத்தில் ஈடுபட்டதினிமித்தம், எப்படியோ முதலில் செலுத்தவேண்டிய 2000 ரூபாய் கிடைத்து, நிகழ்ச்சிகளை

பதிவு செய்ய பெங்களூர் FEBA நிலையம் சென்றோம். சகோதரர் அவர்கள் செய்தி கொடுக்கும்பொழுது, அதை பதிவு செய்யும் வேளையில், அவருக்கு செய்தி நேரத்தை கணக்கிட்டு குறிப்பிடும் பணியை எனக்கு கொடுத்தார்கள். அப்பொழுதெல்லாம் அதை சரியாக செய்ய வேண்டுமே என்று பயத்துடனும், நடுக்கத்துடனும் செயல்படுவேன்.

இந்த வானொலி நிகழ்ச்சிகள் மூலம் ஆசீர்வாதம் பெற்ற மக்கள் ஏராளம்பேர். சிலர் இன்றும் அதின்மூலம் தாங்கள் பெற்ற சாட்சியைக் கூறும்பொழுது, கர்த்தரின் மகிமையைக் கேட்டு உள்ளமெல்லாம் பூரிக்கிறது.

இவ்வளவு பயத்தோடு சகோதரருக்கு உதவியாளராக பணிபுரிந்த என்னை, கர்த்தர் தமது மகா இரக்கத்தாலும், கிருபையாலும் இன்று வானொலி மற்றும் தொலைக் காட்சி ஊழியங்கள் மூலம் எத்தனையாய் பயன்படுத்தி வருகிறார்! அவருடைய வழிநடத்துதல் தான் எத்தனை மேன்மையானது!

அந்த சமயத்தில் தான் ஒரு அன்பான சகோதரர் மூலமாக "இயேசு அழைக்கிறார்" கருத்துப்பாடல் (Theme Song) இயற்றப்பட்டு, அதற்கு அவரே அழகாக இசையும் அமைத்துக் கொடுத்தார். அந்த பாடல் உண்மையாகவே கர்த்தரே அருளிய பாடல் என்று சொல்லலாம். ஏனெனில், ஆரம்ப நாளிலிருந்து இன்றுவரை அந்த பாடலைக் கேட்டு உள்ளம் உருகியவர்கள், கண்ணீர் துடைக்கப்பட்டு ஆறுதல் பெற்றோர் பல்லாயிரம்பேர் என்று சொன்னால் அது மிகையாகாது.

"இயேசு அழைக்கிறார்" ஊழியத்தில் ஒரு திறந்தவெளி கூட்டத்தை முழுவதுமாக படம் எடுக்க சகோதரர் வெகு பாடுபட்டார். அதற்காக இரவெல்லாம் விழித்திருந்து செயல்பட வேண்டிய நிலை! மற்றும், தேவையான பணம் இல்லாத சூழ்நிலைகள். அந்த நாட்களிலெல்லாம் இரவெல்

லாம் அவர்களோடு கூடவே தங்கி, அவர்களை உற்சாகப் படுத்தும் கிருபையையும் கர்த்தர் எனக்கு கொடுத்தார்.

தேவனை மகிமைப்படுத்தும் பாடகியாக!

அதன்பிறகு பாடல் ஒலிநாடாவின் மூலம் கர்த்தருடைய ஊழியத்தை செயல்படுத்தும்படியாக, ஆவியானவரால் ஏவப்பட்ட என் கணவருக்கு அதிலும் பல பாடுகளை சந்திக்க நேர்ந்தது. ஆனால் அந்த சமயங்களிலெல்லாம் வீட்டுக்காரியங்களையும் கவனித்துக்கொள்ளவும், சகோதர ரோடு துணையாக எப்பொழுதும் நின்று அந்த தெய்வப் பணியை நிறைவேற்றி முடிக்கவும் தேவாதி தேவன் எனக்கும் கிருபை அளித்தார். இவ்விதமான நெருக்கமான சூழ் நிலைகளின் மத்தியில்தான் முதல் பாடல் இசைத்தட்டு வெளி வந்தது. ஆனால் இன்றோ, சகோதரர் முதல் குட்டி பேத்தி Sweety வரை குடும்பமாக ஏராளம் பாடல் ஒலி நாடாக்களும், ஒளி நாடாக்களும் வெளியிட தேவன் தமது கிருபையை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். அவ்வள வாக பாடும் திறன் அற்றவளாகத்தான் நான் இருந்தேன். ஆனால் ஒருசிலர், "நீங்களும் பாடல்களை பாடி ஒலி நாடாவைத் தயாரியுங்கள்" என்று என்னை உற்சாகப் படுத்தினார்கள்.

இந்த நிலையில் என் அன்பு கணவரின் மரணத்திற்குப் பின், என்னை ஒவ்வொருநாளும் அதிசயமான முறையில் கரம்பற்றி வழிநடத்தி வரும் ஆண்டவர், ஒருநாள், நான் வேலைகளையெல்லாம் முடித்து, "அடுத்து என்ன செய்ய லாம்?" என்று எண்ணி அமர்ந்திருந்தபொழுது "நீ இயேசு அழைக்கிறார் அலுவலகத்தில் பாடல் பதிவு செய்யும் அறைக்கு (Studio) செல். நான் மற்ற காரியங்களில் உன்னை வழிநடத்துவேன்" என்று பரிசுத்த ஆவியானவர் பேசியபடி யால், அதற்கு இசைந்து, "கர்த்தர் மேலேயே முற்றிலும் சார்ந்து" அவருடைய தெய்வீக சித்தத்தின்படியே பாடல்

களைப் பாடவும் "இயேசுவின் மார்பினில் சாருவேனே" என்ற அந்த பாடல் ஒலி நாடாவை தமிழிலும், மற்றும் பல மொழிகளிலும் வெளியிடவும் கிருபை செய்தார். இது தேவ கிருபையாலேயன்றி, என் சொந்த முயற்சியாலோ, திறமையினாலோ ஆன காரியமேயல்ல! கர்த்தருக்கே சகல துதியும், கனமும், மகிமையும் உண்டாவதாக.

இதை தேவனுடைய பரிபூரண வழிநடத்துதலால் ஒலி நாடாவிலும் தயாரிக்க தேவன் வழிநடத்திய அவருடைய வழிநடத்துதலை எவ்வளவாய் போற்றித் துதித்தாலும் போதாது. இதற்காக முழு முயற்சியுடன் என்னோடு அரும் பாடுபட்ட "இயேசு அழைக்கிறார்" அலுவலகத்தில், "மீடியா"த் துறையில் பணிபுரியும் சகோதரர்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே தம் கரம் நீட்டி அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.

"இயேசு அழைக்கிறார்" மீடியாத் துறை அலுவலர்கள்

நாங்கள் சென்னைக்கு வந்த புதிதில், சகோதரர் அவர்கள் தேவ வழிநடத்துதலின்படி, ஊழியங்களை பல விதத்திலும் செயல்படுத்த முயற்சி செய்த வேளைகளிலெல்லாம் அவருக்கு உதவிசெய்ய வந்தவர்களைக் காட்டிலும், உபத்திரவம், நிந்தனை இவைகளினால் வேதனைப்படுத்தி

யவர்களே மிக அதிகம். எனினும், கர்த்தருடைய சித்தத்தை முழுமனதுடன் செயல்படுத்த இரவும், பகலும் சகோதரர் செய்த ஜெபத்தின் வாயிலாகவும், கடின உழைப்பினிமித்த மாகவும் தேவ சித்தம் நிறைவேறவும்தக்கதாக தேவனே துணையாக நின்று எங்களை தாங்கினார். சகோதரர், பல்வேறு எதிர்மறையான வேதனை தரும் வார்த்தைகளால் சோர்ந்து போன வேளைகளிலெல்லாம் அவருக்கு உற்சாகமளித்து, அவரோடு இணைந்து ஜெபத்தில் தாங்க, தேவன் தமது மட்டில்லாத கிருபையை எனக்கும் அளித்தார்.

> சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தை பெருகப் பண்ணு கிறார். ஏசாயா 40:29

> ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்ட தினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். எபிரெயர் 2:18

ஆகிய வசனங்களின்படியே கர்த்தர் அப்பொழுது நாங்கள் கடந்துசென்ற நெருக்கத்தின் பாதைகளிலெல்லாம் தம் பிரசன்னத்தின் இன்பத்தினால் நிறைத்து தாம் செய்ய நினைத்ததை தடையின்றி நிறைவேற்றி முடிக்க எங்களோடு கூடவே துணை நின்றும், முன்பதாக சென்றும், கோணலான யாவற்றையும் சீராக்கி தம் நாமம் மகிமைப்பட செய்து முடிக்கவும் அருள் புரிந்தார் (ஏசாயா 45:2). எப்பக்கம் திரும்பினாலும் எதிர்ப்பையே கண்டபோதும், சகோதரர் அவர்களின் ஜெப வாழ்வின் மூலம் தெய்வீக அன்பு வெளிப் பட வெளிப்பட, ஊழியத்தை ஆதரிக்க ஒரு சில மக்கள் எழும்ப ஆரம்பித்தனர். அவர்களுடைய ஜெப ஒத்தாசை மற்றும் எங்கள் ஊழியத்தை விரிவுபடுத்த அவர்கள் காண்பித்த ஆதரவு யாவும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க ஆரம்பித்ததால், ஊழியம் விரிவடைய ஆரம்பித்தது. அதே நேரம் "இந்த ஊழியம் விரைவில் வீழ்ந்துபோகும்" என்று

கூறிக்கொண்டு அதற்காக காத்திருந்த சில ஊழியர்களும், மக்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால்,

> நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னை தாங்குவேன். ஏசாயா 41:10

என்ற வசனத்தின்படி, கர்த்தர் எங்களை தைரியப்படுத்தி, தமது தெய்வீக சித்தத்தின்படி ஊழியத்தின் காரியங்கள் யாவும் அடுத்தடுத்து நிறைவேற அழகாக வழிநடத்தினார்.

குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்களின் நற்செய்தியாளராக!

பல இடங்களில் தேவனுடைய இராஜ்யத்தை பரப்புவதற்கான விதத்தில் திறந்தவெளி கூட்டங்கள் நடத்தவும் கர்த்தர் வாசல்களைத் திறந்தார். காலைக் கூட்டங்களில் குடும்ப வாழ்வின் ஆசீர்வாதத்திற்கான செய்திகளை பகிர்ந்தளிக்கும் வாய்ப்பும் எனக்கு ஏற்படுத்தப்பட்டது. நான் பேசிய பிறகு, சகோதரர் அவர்கள் தொடர்ந்து செய்தியளிப்பார்கள். எனவே, "சகோதரர் வந்துவிட்டார்" என்று தெரிந்ததும், உடனடியாக செய்தி கொடுப்பதை நான் நிறுத்திவிடுவேன். இதைக்கண்ட அவர், அதன்பிறகு, சத்தமில்லாமல் அமைதியாக வந்து, மேடையின் பின்னால் இருக்கும் அறையில் காத்திருப்பார். அதுமட்டுமா? ஆரம்ப நாட்களில், "மைக்" முன்பாக நின்று நான் செய்தி கொடுக்கும்போது, பயத்தில் 'மைக்'கை விட்டுவிட்டு வெளியே வந்துவிடுவேன். போட்டோ எடுப்பதை விரும்பவே மாட்டேன். இப்படித்தான் பயந்துகொண்டும், நடுங்கிக் கொண்டும் செய்தி கொடுக்க ஆரம்பித்தேன். ஆனால் இன்று கர்த்தர் எவ்வளவு தைரியத்தை கொடுத்து எந்த கூட்டத்திலும் பயமின்றியும், பாரத்துடனும் பேசுவதற்கு என்னை உபயோகித்து வருகிறார்.

பல வருடங்களுக்கு முன்பு, ஒருமுறை சென்னையில் நடந்த பெண்கள் கூட்டமொன்றில் நான் செய்தி கொடுத்து முடித்தபின்பு, அங்கு வந்திருந்த மிஷனெரி அம்மாள் ஒருவர், கூட்டம் முடிந்தவுடன் என்னை பார்க்க வந்தார்கள். நான் ஆசிரியைப் பயிற்சி பெற்ற காலத்தில் அவர்கள் எனக்கு ஆங்கிலப் பாட ஆசிரியையாகவும் மற்றும் விடுதியின் வார்டனாகவும் இருந்தார்கள். நான் அந்த நாட்களில் எவ்வளவு பயந்து நடுங்குகிறவளாக இருந்தேன் என்று அவர்கள் நன்றாய் அறிந்திருந்தபடியால், மிகவும் ஆச்சரியத்துடன், "ஆண்டவர் உன்னை எவ்வளவு அருமையாக இன்று உபயோகிக்கிறார். நீ அந்த நாளில் எவ்வளவு பயம் நிறைந்து காணப்பட்டாய்" என்று கூறி நான் கர்த்தருக்கென்று ஊழியம் செய்வதைக் குறித்து மிகுந்த சந்தோஷமடைந்தார்கள்.

எஸ்தர் ஜெபக்குழு ஊழியம்

என் மகள் ஏஞ்சல் மறைவுக்குப்பின், 1988ஆம் ஆண்டு, ஒருநாள் நான் காரில் போய்க் கொண்டிருந்த வேளையில் ஆண்டவர் என்னோடு பேசினார். "மகளே! அதோபார்! பெண்களில் சிலர் ஒருமித்துக் கூடி பேசி மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களில் அநேகருக்கு என்னைப் பற்றிய அறிவு கிடையாது. மாத்திரமல்ல! அவர்கள் வாழ்வில் பாடுகளும், சஞ்சலமும் நேரிடும்பொழுது, என்னால் அவர்களை விடுவித்து காக்க முடியும் என்பதையும் அறியாமலிருக்கிறார்கள். எனவே, பெண்கள் என்னைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கு, பெண்களாக சேர்ந்து ஆவியில் அனலுள்ளவர்களாக பாரத்துடன் மன்றாடும்படி நீ ஒரு ஜெபக்குழுவை ஏற்படுத்த வேண்டும்" என்றும் கூறினார். அவ்வாறு ஒருசில சகோதரிகளின் துணையோடு ஆரம்பிக்கப்பட்டதுதான் "எஸ்தர் ஜெபக்குழு" ஆகும். இன்று பெரியவர்களுக்கான இந்த எஸ்தர் ஜெபக்குழு மட்டுமல்லாமல், வாலிபப் பெண்களும் உற்சாகமாக தங்கள் பகுதியில்

"வாலிபர் எஸ்தர் ஜெபக்குழு"க்களை நடத்தி, அநேகம் பெண்கள் ஆண்டவரின் வல்லமையையும், இரட்சிப்பின் மேன்மையையும் அறியும்படியாக இந்த ஊழியத்தினை என்னோடு இணைந்து நடத்தி வருகிறார்கள். இந்தியாவில் மட்டுமின்றி, ஏனைய பல தேசங்களிலும் பெண்கள் இதனை பொறுப்பேற்று நடத்தி, அநேகம் பெண்களுக்கு ஒளி வீசும் நட்சத்திரங்களாக விளங்கி வருகிறார்கள்.

ஒருமுறை ஒரு செவ்வாய் கிழமையன்று நான் உபவாசித்து ஜெபித்துக்கொண்டிருந்த நாளில், ஏறக்குறைய ஜெபம் முடிய கொஞ்சம் முன்னதாக, நான் ஆவியிலே நிரம்பியிருந்தபொழுது, அந்நிய பாஷையில் ஒரு பாடலை திரும்பவும் திரும்பவுமாக பாடிக் கொண்டேயிருந்தேன். அதோடு அதை தமிழிலும் என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. உடனே ஒரு தாளில் அதை மடமடவென்று எழுதினேன். என்ன ஆச்சரியம்! அது ஒரு அருமையான பாடல். எஸ்தர் ஜெபக்குழு சகோதரிகள் ஜெப வேளையில் பாடுவதற்கென ஒரு கருத்துப்பாடல் (Theme Song) தேவை என்று நான் வெகுநாளாய் ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டிருந்தேன். ஆம்! ஆவியானவர் மூலம் அன்று ஜெப வேளையில் எனக்கு அருளப்பட்ட பாடல், அந்த அழகான கருத்துப்பாடல் தான் என்பது எத்தனை மகிழ்ச்சியை தந்தது. ஜெபம் முடிந்தவுடனே என் அன்பு கணவரிடம் அதை எடுத்துக் கொண்டு ஓடினேன். அவரிடம் பாடி காண்பித்தேன். அவர் அதைக் கேட்டு அளவில்லாத மகிழ்ச்சியடைந்து, என்னோடுகூட கர்த்தரை ஸ்தோத்தரித்தார். அந்த பாடலை இப்பொழுது, "இயேசுவின் மார்பினில் சாருவேனே" என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிற ஒலி நாடாவில் தமிழிலும் மற்றும் தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளிலும் பாடி வெளியிட்டிருக்கிறேன். மேலும், பல மொழிகளிலும்கூட மொழிபெயர்த்து எல்லா எஸ்தர் ஜெபக்குழுவினரும் அவர்கள் ஜெபத்தை நடத்துகிற நாளில், முதலாவது இந்த பாடலைப் பாடி, அதன்பிறகே ஜெபக்

குறிப்புகளுக்காக ஜெபிக்கும் ஜெப ஊழியத்தை தேவன் தயவாகத் தந்து தமது கிருபையை பொழிந்திருக்கிறார். கர்த்தருடைய செயலின் மேன்மை எத்தனை பெரியது பாருங்கள்!

அப்போஸ்தலனாகிய பவுல் மனந்திரும்பிய மாத்திரத்தில் தானே, "ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?" என்று கேட்டதோடு நிறுத்திவிடாமல், அதை உடனே செயல்படுத்தினார் என்று அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தில் நாம் வாசிப்பதுபோல், என் அன்பு சகோதரிகளே! நீங்களும் "இரட்சிப்பைப் பெற்றுவிட்டேன், பரிசுத்த ஆவியினாலும் நிறைந்திருக்கிறேன்" என்று அவைகளிலே திருப்தியடைந்துவிடாமல், பவுலைப் போன்றே கர்த்தரை நோக்கி, "ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று ஜெபத்தில் காத்திருந்து, தேவ சித்தத்தையறிந்து, அவர் தரும் பெலத்தோடும், ஞானத்தோடும் செயல்படுங்கள். எவ்வளவு அதிகமாய் கர்த்தருக்கென்று உழைக்க நம் நேரத்தையும், நம்மையும் ஒப்படைக்கிறோமோ, அத்தனையாய் அவர் நமக்கு சுகம், பெலன் அளித்து எல்லாப் பொல்லாங்குகளுக்கும் விலக்கி, அற்புதமாக வழிநடத்துவார். அன்பு சகோதரிகளே! "எஸ்தர் ஜெபக்குழு" ஜெப ஊழியத்தில் நீங்களும் பங்குபெற விரும்புவீர்களானால், என்னிடம் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். இந்த கடைசி காலத்தில், கர்த்தருடைய வருகைக்கென்று ஒரு சிலரை ஆயத்தப்படுத்த ஜெப ஆவியினால் நிறைய இது உங்களுக்கு உதவியாயிருக்கும்.

இதை வாசிக்கிற அன்பானவர்களே!

பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.

ஏசாயா 6:8

என்ற வசனத்தின்படி, நீங்களும் உடனே ஆண்டவருடைய தெய்வீக சேவைக்கு உங்களை ஒப்படையுங்கள். அதற்காக உங்கள் வாழ்வை பரிசுத்தப்படுத்திக்கொண்டு, தெய்வ பெலனால் நிறைந்து, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுங்கள். உங்கள் கணவன் / மனைவி ஊழியம் செய்பவரானால், அவர்களைப் பற்றிய குறைவுகளையெல்லாம் கூறி வேதனைப்படுத்தாமல், தெய்வ பயத்துடன் அவர்களுக்கு உங்களாலியன்ற விதங்களில் அன்புடன் சேவை செய்யுங்கள். கூடுமானவரை, கணவனும் மனைவியுமாக இணைந்து கர்த்தருடைய சேவையில் ஈடுபடுங்கள். காலம் கடந்து போகிறது. கர்த்தரின் வருகையும் சமீபமாயிருக்கிறது. செய்யும்படி உங்கள் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உங்கள் பெலத்தோடே செய்ய எழும்புங்கள் (பிர. 9:10). உங்களுக்கு ஆண்டவர் அருளியிருக்கும் தாலந்துகளைக் கொண்டு என்னென்ன விதங்களில் அவர் நாமத்தை மகிமைப்படுத்தலாம், கெட்டுப்போகிற ஆத்துமாக்களை எப்படி கர்த்தருக்கென்று ஆயத்தப்படுத்தலாம் என்று சிந்தித்து முழுமூச்சுடன் செயல்படுங்கள்.

* * * * *

ரெயின்போ டி.வி. சாட்சி

அன்புள்ள சகோதரி ஸ்டெல்லா தினகரன் அவர்களுக்கு,

ரெயின்போ தொலைக்காட்சியில் உங்கள் நிகழ்ச்சியைப் பார்த்து, இருதயத்தில் தொடப்பட்டு, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய என்னை ஒப்புக்கொடுத்தேன். இந்த நிகழ்ச்சி மூலம் நாங்கள் பெற்ற அற்புதங்கள் ஏராளம். ஒருமுறை நான் சுகவீனப்பட்டு, மருத்துவரால் கைவிடப்பட்ட நிலையில் இருந்தேன். அந்த சமயத்தில் உங்கள் நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஜெப நேரத்தில் நானும் உங்களோடு இணைந்து ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றேன். தேவனுக்கே மகிமை!

3 செப்டம்பர் 2007

சகோதரி நாமி அபோட்
கெய்ரோ, எகிப்து

7. அழைத்தவரின் அளவற்ற அன்பு!

...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். யோவான் 16:33

என்று கூறிய ஆண்டவரின் வாக்கின்படியே என் வாழ்க்கையில் பல்வேறு உபத்திரவங்கள், தனிமை, கண்ணீர் யாவற்றின் மத்தியிலேயும் அன்பின் தேவன் முற்றிலும் ஜெயம் கொடுக்கிறவராக (ரோமர் *8:36,37*) என்னோடு கூடவேயிருந்து, 'எபெனேசராக' (I சாமுவேல் *7:12*) இம்மட்டும் எனக்கு உதவி செய்திருக்கிறார். இந்த நேசரின் அன்புக்கு ஈடாய் நான் என்னத்தை செலுத்துவேன்?

கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தை செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுவேன். சங்கீதம் 116:12,13

காலைதோறும் புதிய கிருபை

அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. புலம்பல் 3:23

ஒவ்வொருநாளும் எந்த விதத்திலும் நிர்மூலமாகாதபடிக்கு காத்து தமது கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டி வருகிற அவருடைய அன்பின் மேன்மை எத்தனை பெரியது!

...அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். நீதி. 8:17

என்ற வசனத்தின்படி, அவரை உண்மையோடும், முழு இருதயத்தோடும் தேடத் தேட அவருடைய தெய்வீகப் பிரசன்னத்தால் நிரப்பியும் (எரேமியா *29:13*) அவரை

நோக்கிக் கூப்பிடுகையில், எனக்கு உத்தரவு கொடுத்தும், நான் அறியாததும், எனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை அறிவித்தும் (எரேமியா 33:3) வழிநடத்தி வரும் அவருடைய மேன்மை நிறைந்த கிருபையை என்ன வென்று சொல்வேன்!

தேவனுடைய கிருபாசனத்தண்டையில் காத்திருக்கும் பொழுதெல்லாம், ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்தி லும் புது பெலன் தருகிறார். உள்ளத்தின் சோர்வையெல் லாம் அகற்றி, புது ஜீவனைக் கொடுக்கிறார். அவருடைய தெய்வீகப் பிரசன்னத்தால் நிரப்பி, ஓர் புது தைரியத்தோடு முன்னே காலடி எடுத்து வைக்க மன தைரியத்தை கொடுக் கிறார். வாழ்க்கையில் பயம், திகைப்பு இவற்றிற்கு இடமே யில்லாதபடி தெளிந்த புத்தியால் நிரப்பி தமது ஆறுதலினால் தாங்குகிறார். ஆம்! பிரியமானவர்களே! இதுதான் பரிசுத்த ஆவியால் நிரம்பி வாழ்கிற தெய்வீக வாழ்வின் மேன்மை!

> நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னை பலப் படுத்தி உனக்கு சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.
>
> உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்கு துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.
>
> யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறு கூட்டமே, பயப்படாதே; நான் உனக்கு துணை நிற்கிறேன் என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தரு மாகிய உன் மீட்பர் உரைக்கிறார். ஏசாயா 41:10,13,14

என்ற ஆண்டவரின் வார்த்தை ஒருபோதும் மாறாதது. அதன்படியே ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும் தமது கிருபையினால் ஆண்டவர் நடத்தும் விதம் எத்தனை மேன்மையாயிருக்கிறது!

ஒரு சமயம் என் வாழ்வில் முக்கியமான நாள் அது. என்னைவிட்டு நிரந்தரமாக பிரிந்து சென்ற என் கணவரின் அன்பை எண்ணி அன்று தனிமையில் உள்ளத்தில் பாரம் கொண்டிருந்தேன். என் பிள்ளைகளும் வெளியூரிலிருந்த தால், மனதிற்குள் ஒருவித சஞ்சலம் நிறைந்திருந்தது. அந்த நேரத்தில் என் சிறிய அண்ணன் குடும்பத்தினர் யாவரும் என்னை சந்தோஷப்படுத்துவதற்காக புறப்பட்டு வந்து, பக்திப் பாடல்களைப் பாடியும், ஜெபித்தும், பல்வேறு பொருட்களை கொண்டுவந்து கொடுத்தும் என்னோடு ஒரு சில மணி நேரங்கள் செலவிட்டபொழுது,

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

I பேதுரு 5:7

என்ற வசனத்தின்படியே, கர்த்தர் என்மேல் எவ்வளவு கரிசனையுள்ளவராய் தமது கிருபையை ஏற்ற சமயத்தில் அருளுகிறார் என்பதை அறிந்து, அவரை மனதார ஸ்தோத்தரித்தேன்.

அன்பானவர்களே, விசேஷமாக வயது சென்ற நிலையில் வாழும் என் சகோதர சகோதரிகளே! உங்கள் மீதும் இதே ஆண்டவர் பட்சபாதமற்றவராகவும், கரிசனையுள்ளவராக வும் இருக்கிறார் என்பதை மறந்து போகாமல், நீங்களும் இவ்விதமான கிருபையை அருளிச்செய்கிற அவரையே உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள். அதேபோன்று உங்கள் மீதும் அன்பு செலுத்த மக்களை அனுப்பி ஆற்றித்தேற்றி, மகிழ்ந்து களிகூரச் செய்வார். இதை செய்யாமல், வீணான கவலைகளுக்கும், பாரங்களுக்கும் உள்ளத்தில் இடம் கொடுத்து முறுமுறுப்போடும், குறை சொல்லிக்கொண்டும் வாழ்வதால் வீணான வியாதிகளும், மக்களுடைய வெறுப்புமே நம்மை சூழ்ந்து, மனசமாதானத்தையும், சந்தோஷத்தையும் கெடுத்துப்போடும். அதற்கு பதிலாக

"இத்தனை கிருபைகள் நித்தமும் அருளிய கர்த்தனைக் கொண்டாடுவேன்" என்று பக்தன் பாடியதைப் போன்று, நாம் பெற்ற நன்மைகளையெல்லாம் ஸ்தோத்திரத்தோடே எண்ணியெண்ணி பாடி மகிழுவது எத்தனை தெய்வீக மான மகிழ்வைத் தரும்!

எல்லாவற்றையும் செய்ய பெலன்

> என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லா வற்றையுஞ்செய்ய எனக்கு பெலனுண்டு.
>
> பிலிப்பியர் 4:13

என்ற வசனத்தின்படியே, ஆவியில் சோர்ந்து போகிற வேளையில் பரிசுத்த ஆவியானவர் அருளும் உன்னத பெலன், என் வாழ்வை கர்த்தருக்குள் புதுப்பித்து, திடமனம் வைராக்கியம் தந்து திரும்ப எழுந்து செயல்பட என் உள்ளத்தை தேவ மகிமையால் நிரப்புகிறது. தொடர்ந்து புது உற்சாகத்தையும், வழிநடத்துதலையும் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளும்பொழுது, தேவன் என்னை ஒருபோதும் கைவிடாதவர் என்பதை அறியும்படி செய்கிறது.

பிரியமானவர்களே! பரிசுத்த ஆவியின் பெலனால் ஒவ் வொருநாளும் நிறைந்து வாழ்வது மட்டுமே இத்தகைய தெய்வீக பெலனைப் பெறுவதற்கு ஒரே வழி என்பதை என்னுடைய இந்த முதிர்ந்த வயதிலும் நான் அறிந்து கொள்ளும்படி தேவன் அற்புதமாக வழிநடத்தி வருகிறார்.

தேவனுடைய ஊழியங்களை செய்ய பல்வேறு முயற்சிகள் எடுக்கும்பொழுதும், அதேபோன்று மிகவும் ஆச்சரியப் படத்தக்கதான விதத்தில் தேவ பெலன் என்னை நிரப்புவதும், பிரசங்கிக்கையில் பரிசுத்த ஆவியானவரின் தெய்வீக ஞானத்தையும், கடினமாக சக்திக்கு மீறி உழைப்பதற்கான பெலனைப் பெற்று ஒவ்வொரு ஊழியம் முடிந்தபின்னரும் வெற்றியுடன் திரும்புவதையும் எண்ணிப்பார்க்கும்பொழுது,

தேவன் அருளும் தெய்வீக பெலனால் மட்டுமே இவைகள் நடக்கின்றன என்பதை உணரும்படி செய்கிறது. இதைத் தான்,

> அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமை யுமாயிருப்பார்கள். சங்கீதம் 92:15

என்று வாசிக்கிறோம். வயது ஏற ஏற, சரீரத்தில் பல்வேறு பெலவீனங்கள் நம்மை தாக்குகின்றது. ஆனால், கர்த்தரு டைய பரிசுத்த ஆவியானவர் அருளும் பெலனோ, நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் உயிர்ப்பிக்கிறது.

> அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவ ருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேது வான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.
> ரோமர் 8:11

என்ற வசனமும் அதையே உணர்த்துகிறதல்லவா? இது வரையில் என் வாழ்விலும்கூட இதே தெய்வீக பெலன் தான் என்னை உயிர்ப்பித்து, ஆண்டவரின் சேவையில் பரி பூரணமாக ஈடுபட என்னை தமது தெய்வீகக் கிருபையினால் நிரப்புகிறது. தேவ ஊழியனாகிய பவுல் அப்போஸ்தலனும் கூட "என் கிருபை உனக்கு போதும்; உன் பெலவீனத்திலே என் பலம் பூரணமாக விளங்கும்" (II கொரி. 12:9) என்ற தேவனுடைய வார்த்தையின் நிச்சயத்தின்படியே, தன் பலவீனங்களைக் குறித்து மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுகிறவராய், "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். கிறிஸ்துவினிமித்தம் வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படு கிறேன்" (II கொரி. 12:10) என்று மகிழ்வுடன் கூறுகிறான்.

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லு கிறேன். பிலிப்பியர் 4:4

இது நடக்கிற காரியமா? உலகத்தின் உபத்திரவங்கள் நம்மை நெருக்குகையில் எப்பொழுதும் சந்தோஷமாக எப்படி இருக்க முடியும்? ஆனால் வேதம் என்ன சொல்லு கிறது? ஆண்டவரிடம் விசுவாசம் வைக்கும்போது, தேவன் நம்மை "சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தினால் களிகூரச் செய்வார்" என்று வாசிக்கிறோம் (I பேதுரு *1:8*). இந்த சந்தோஷம் பரிசுத்த ஆவியானவரால் நிரம்பியிருக்கும் வாழ்வின் மூலம்தான் பெறமுடியும். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்திய சபைக்கு எழுதும் பொழுது "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவ டைகிறதில்லை" (II கொரி. *4:8*) என்று எழுதுகிறார். இதற்கு காரணம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும்பும் பரிசுத்த ஆவியானவர் அருளும் தெய்வீக சந்தோஷமே. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுவிட்டால் மாத்திரம் போதாது. ஆண்டவர் இயேசுவைப் போலவே கர்த்தருடைய ஆவியினால் அளவில்லாமல் நிரம்பியிருக்கும்படி *(யோவான் 3:34)* அவர் பாதத்தில் காத்திருந்து செய்கிற "ஜெபம்" மிகவும் அவசியம்.

விசேஷமாக, ஊழியம் செய்கிறவர்கள் இவ்வித தெய்வீக சந்தோஷத்தை பெற்று, எப்பொழுதும் நிரம்பி வழிகிறதான அனுபவத்தை பெற்றிருக்க வேண்டியது மிகவும் அவசியம் *(சங். 23:5)*.

என் வாழ்க்கையிலும் தேவன் தமது மிகுந்த கிருபை யினால் பரிசுத்த ஆவியினால் நிரப்பியதோடுமட்டுமின்றி,

நிரம்பி வழியும் பாத்திரமாகவும் மாற்றியிருந்தமையால், யோபுவைப் போல் பல்வேறு சோதனைகளுக்குப் பின்பும் பொன்னாக விளங்கும்படியும், அவைகளை மகிழ்ச்சியோடு கடந்துசென்று வெற்றிபெறும்படியும் தேவன் வழி நடத்தினார்.

ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னை சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன். யோபு 23:10

சமீபத்தில் என் சரீரத்தில் பெலவீனம் ஏற்பட்டது. ஆனால், தேவனுடைய தாசர்கள் பலர் எனக்காக கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தனர். அப்பொழுது என் சரீரத்தில் ஏற்பட்ட பலவீனத்தின் மத்தியில், என் ஆத்துமாவில் ஒரு வித தெய்வீக சந்தோஷம் நிரம்புவதை நான் உணர்ந்தேன். இந்த சந்தோஷம் எனக்குள் பெருகப் பெருக, என் சரீர பலவீனம் என்னைவிட்டு விலக ஆரம்பித்தது. ஆம்! பிரியமானவர்களே! வேத புத்தகத்தில் இது மிக அழகாக எழுதப்பட்டிருப்பதை நாம் வாசிக்கிறோம்.

நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்; சங்கீதம் 138:3

நானோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன். மீகா 3:8

இந்த மேலான பாக்கியம் நிறைந்த வாழ்வில் நம் ஆண்டவர் இயேசு நிரம்பியிருந்தது போன்று நாமும் பரிசுத்த ஆவியினால் நிரம்பி வாழ்கிற வாழ்வை வாஞ்சித்து, அதை அவர் அருளும்வரை விடாமல் யாக்கோபைப் போல் அவரை உறுதியாய் பற்றி பிடித்துக்கொள்வோம்.

> இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள். யோவான் 16:24

என்ற வார்த்தையைக் கூறிய ஆண்டவர் நிச்சயமாக உங்களையும் தமது தெய்வீக சந்தோஷத்தால் நிரம்பி வழியும் பாத்திரமாக எப்பொழுதும் இருக்கும்படி அருள் புரிவார்.

தாயினும் மேலான அன்புகூருதல்

> ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. ஏசாயா 49:15

என்ற ஆண்டவரின் வாக்குப்படி, என்னை தாயின் வயிற்றிலேயே தமது ஊழியத்திற்கென்று பிரித்தெடுத்த தேவனுடைய அன்பு என்றென்றும் மாறாதது என்பதை என் வாழ்நாளில் அனுபவிக்கும்படி என் ஆண்டவர் அருள்புரிந்து வருகிறார். மக்கள் பலரும் காண்பிக்கும் அன்புத் தாழ்ச்சியின் நிமித்தம் பல முறை சோர்ந்துபோன வேளைகளிலெல்லாம், கர்த்தர் தமது தெய்வீக அன்பினால் பெலப்படுத்தி, தைரியப்படுத்தி, தொடர்ந்து உற்சாகமாய் உழைக்க வழிநடத்தியதையெல்லாம் நினைக்கும்பொழுது, நான் கர்த்தருக்கு மிகுந்த நன்றியுள்ளவளாயிருக்கிறேன்.

ஒன்றுமில்லாமையிலிருந்து சர்வத்தையும் சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள தேவனுடைய அன்பின் வழிநடத்துதல் எவ்வளவு மேன்மையானது என்பதை நான் உணர்ந்து கொள்ளும்படி வாழ்க்கையில் ஒன்றுமில்லாமை, குறைவுகள், தேவைகள் போன்ற நிலைகளிலிருந்த என்னை அவர் வெட்கத்திற்குட்படப் பண்ணாமல், எவ்வளவு அழகாக உயர்த்தி கனப்படுத்தி வழிநடத்துகிறார் என்பதை பார்க்கும்

பொழுது அவருடைய அன்பின் மேன்மை எத்தனை மேலானது என்பதை என்னால் உணரமுடிகிறது. தாழ்மையை அனுபவிக்கிற நேரத்திலும் அவருடைய ஊழியத்தை உண்மையோடும், உத்தம இருதயத்தோடும் செய்ததை கண்ணுற்ற தேவன் தமது மிகுந்த அன்பினால், தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறவர் என்பதில் சிறிதளவும் மாறாமல் சகல நன்மைகளாலும் பரிபூரணமாய் ஆசீர்வதித்திருக்கிறார்.

> **கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். நீதி. 10:22**

என்பது எத்தனை உண்மையான காரியம்!

அன்பானவர்களே! "கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது" (சங்கீதம் *34:10*) என்ற வார்த்தையை விசுவாசித்து, நீங்களும் பயபக்தியோடும், உண்மையோடும், உத்தமத்தோடும் ஆண்டவரை கருத்தாய் தேடுங்கள். ஆபிரகாம் உண்மையாய் ஆண்டவரில் அன்பு கூர்ந்தான். எனவே, அவனை சகல காரியங்களிலும் கர்த்தர் ஆசீர்வதித்தார். அவன் சீமானாயிருந்தான் (ஆதி. *24:1,35*) ஈசாக்கு விதை விதைத்தான்; கர்த்தர் நூறு மடங்கு விளையச் செய்தார் (ஆதி. *26:12*). யாக்கோபு வெறும் கோலும், கையுமாக தன் மாமா வீடு நோக்கி சென்றான். ஆனால், கர்த்தர் அவனோடிருந்ததால், அவனை ஆசீர்வதித்து பெருகப்பண்ணியதால், இரண்டு பரிவாரங்களை உடையவனாக அவனை ஆசீர்வதித்தார் (ஆதி. *32:10*). அப்படியே தேவனுடைய தாசர்கள் யோசேப்பு, தானியேல், தாவீது போன்றோர் தேவனுடைய ஆசீர்வாதத்தால் எவ்வளவாய் நிறைந்தார்கள் என்பதை வேத புத்தகத்தில் நாம் வாசிக்கிறோமல்லவா!

எனவே, உங்கள் குறைவுகளையே எண்ணியெண்ணி மனம் உடைந்து, சோர்ந்து போகாமல், "ஐசுவரியமும்,

கனமும் கர்த்தராலே வருகிறது. எவரையும் மேன்மைப் படுத்தவும், பலப்படுத்தவும் அவராலே ஆகும்" (I நாளா. 29:12) என்பதை உணர்ந்தவர்களாய், "ஒத்தாசை வரும் பர்வதமாகிய" (சங்கீதம் 121:1) கர்த்தரையே நோக்கிப் பாருங்கள். என் வாழ்வை உயர்த்தின ஆண்டவர் உங்களையும் தாயன்போடுகூட நிச்சயம் உயர்த்துவார் என்பதை அனுபவித்து ஆசீர்வாதம் பெறுங்கள்.

> பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.
> III யோவான் 2

என்ற வசனத்தின்படியே நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகித்திருப்பதையே கர்த்தர் விரும்புகிறார்.

கர்த்தர் அருளும் தெய்வீக ஞானம்

> கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்.
> நீதி. 2:6,7

கர்த்தருடைய அழைப்பு மேன்மை நிறைந்தது. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளை தெரிந்துகொண்டார் (I கொரி. 1:27). "கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" (I கொரி. 1:31).

தாவீது ராஜாவின் மகனாகிய சாலொமோன், ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டபொழுது, அவனிடம், "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" என்று தேவன் கேட்டபொழுது, அவன் கேட்டதென்ன? "நான் போக்குவரவு அறியாத சிறு பிள்ளையாயிருக்கிறேன். இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரிக்க உமது அடியேனுக்கு

ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும்" (I இராஜா. 3:5,7,9) என்றான். அப்பொழுது தேவன் செய்ததென்ன? ஞானமும், உணர்வு முள்ள இருதயத்தை தந்ததோடு அவன் கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும்கூட அவனுக்கு தந்து அவனை ஆசீர்வதித்தார் (I இராஜா. 3:12,13). சாலொமோனின் இத்தகைய தெய்வீக ஞானத்தை நேரில் பார்க்கவும், கேட்கவும் பூமியின் சகல ராஜாக்களிடத்திலிருந்து நானா ஜாதியான ஜனங்களும் வந்தார்கள்.

அதுபோலவே, நீங்களும்கூட ஞானத்தில் குறைவுள்ளவர்களாயிருப்பீர்களானால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேளுங்கள். அப்பொழுது அவர் உங்களுக்கும் நிச்சயம் கொடுப்பார் (யாக்கோபு 1:5).

ஆம்! என் வாழ்விலும்கூட, ஆண்டவருடைய ஊழியத்தில் மற்றும் என் வாழ்க்கையில் அவர் சித்தத்தை நிறைவேற்றி முடிப்பதற்கு எந்தெந்த விதங்களில் தேவ ஞானம் தேவைப்பட்டதோ அதை அவர் அவ்வப்பொழுது அளவில்லாமல் கொடுத்தமையால்தான், இன்று ஆறுதலற்று, எந்த வழியில் திரும்புவது என்று அறியாமலிருக்கிற மக்களுக்கு நல்வழியை போதித்து நடத்தும் தாயாக, சகோதரியாக கர்த்தர் என்னை உபயோகித்து வருகிறார். தேவனுடைய நாம மகிமைக்காக எத்தனையோ புத்தகங்களை எழுதி வெளியிட அவரது ஞானத்தை அபரிமிதமாக அருளிச் செய்திருக்கிறார். ஆம்! ஞானம், அறிவு, புத்தி யாவும் பரலோகப் பிதாவினிடத்திலிருந்தே நமக்கு அருளப்படுகிறது (யாக்கோபு 1:17).

பெசலெயேல் என்ற மனிதனுக்கு கர்த்தர் ஆசரிப்பு கூடாரத்தின் சகலவித வேலைகளையும் யூகித்து செய்வதற்கு ஞானமும், புத்தியும், அறிவும் உண்டாக தேவ ஆவியினால் நிரப்பினார் (யாத். 31:2,5). அதேபோன்று, "ஞான

இருதயமுள்ள ஸ்திரீகள் ஞான எழுப்புதல் அடைந்து தேவ சித்தத்தை நிறைவேற்றினார்கள் (யாத். 35:25,26) என்றும் வாசிக்கிறோம்.

ஆம்! இவர்களுக்கெல்லாம் பரிசுத்த ஆவியானவர் மூலம் ஞானம் அருளிய தேவன், உங்களையும் ஞான எழுப்புதலினால் நிரப்பி விடுவார். இந்த மேலான நன்மைகளினால் நிரப்பும்படி கர்த்தரிடம் மன்றாடுவோம். ஆண்டவர் நாம மகிமைக்கென்று எழும்பிப் பிரகாசிப்போம்.

அவருடைய வல்லமையால் பலப்படுத்துவார்!

> சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். கொலோ. 1:11

என்று பவுல் கொலோசெயருக்கு எழுதியதுபோல், நம்மையும் கர்த்தர் தமது தெய்வீக வல்லமையினால் நிரப்புவார்.

பற்பல வியாதிகளினாலும், பிசாசின் கட்டுகளினாலும் கட்டப்பட்டிருக்கிறவர்களை குணமாக்கும்படி கர்த்தர் நம்மை தமது வல்லமையினால் நிறைத்து, குணமாக்கும் பாத்திரங்களாக நம்மை உபயோகிக்க விரும்புகிறார்.

> அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கவும், பிணியாளிகளை சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார். லூக்கா 9:1,2

என்ற வசனங்களின்படியே, அன்று இயேசுவானவர் தம் சீஷர்களை அழைத்து வல்லமையும், அதிகாரமும் கொடுத்ததுபோல் இன்று நமக்கும் கொடுப்பார். சகோதரர் தினகரன் அவர்கள் தனது 20ஆம் வயதில் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட நாள் முதல், வேத புத்தகத்தை கருத்தாய் வாசித்தார். அதன்படியே, தேவனுடைய வல்லமை, வரங்கள் தனக்கும் வேண்டும் என்று கருத்தாய் கர்த்தரிடம் வேண்டுதல் செய்தார். கர்த்தர் அவருடைய உண்மையான வேண்டுதல்களைக் கேட்டு அவர் மூலம் தமது வல்லமையை வெளிப்படுத்தினார். கர்த்தருடைய நாமம் வெகுவாய் மகிமைப்பட்டது. அதேபோன்று,

> தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது; . . . II நாளா. 16:9

என்ற வசனத்தின்படியே என் வாழ்விலும்கூட உத்தம இருதயத்தோடு அவரை பின்பற்றுகிறதினால் கர்த்தருடைய கண்கள் என்மீதிருக்கவும், அவருடைய தெய்வீக வல்லமை என் கூப்பிடுதல்மூலம் மக்கள் வாழ்வில், சரீரத்தில் இறங்கவும், அவர்கள் கட்டுகள், அடிமைத்தனங்கள் இவற்றினின்று விடுதலை பெறவும் தேவன் அற்புதமாக வழிநடத்தி வருகிறார். பரிசுத்தாவியானவரால் நிரம்ப நிரம்ப, தெய்வீக அன்பு உள்ளத்தில் நீரூற்றுபோல் பாய்ந்து செல்கிறது. ஏசாயா *61:1-3* ல் வாசிக்கிற தெய்வீகம் நிறைந்த ஆவிக்குரிய அனுபவங்களை எனக்கும் கொடுத்து, கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சமாக மாற்றி வழிநடத்தி வருகிறார். இதற்காக நான் என்றும் அவருக்கு நன்றியுள்ளவளாயிருக்கிறேன்.

ஆபிரகாமை அழைத்து அழகாய் கரம்பற்றி வழிநடத்திய தேவன், தமது மகா கிருபையினாலும், இரக்கத்தி

னாலும் என்னையும் தேடிவந்து, "கோபாக்கினையின் பிள்ளையாயிருந்த என் வாழ்வை (எபே. 2:3; ரோமர் 9:23) தமது அனாதி தீர்மானத்தினால் "கிருபா பாத்திரமாக" தெரிந்துகொண்டார். "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா. 2:20) என்று பவுல் தன் அனுபவத்தை கூறியதுபோல் என்னையும் கரம்பிடித்து இம்மட்டும் வழிநடத்தி வந்திருக்கிறார். முடிவுபரியந்தம் வாழ்நாள் முழுவதும் அவருக்காகவே உத்தமமாய் வாழவும், அவர் சித்தத்தை நிறைவேற்றவும் நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடிக்கவும், அதுவரை விசுவாசத்தை காத்துக்கொள்ளவும் தேவன் தாமே தொடர்ந்து அருள் புரிவார் என்று நிச்சயம் நம்புகிறேன் (II தீமோ. 4:7).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.
I கொரி. 15:57

* * * * *

குடும்ப ஆசீர்வாத கூட்ட சாட்சி

அன்புள்ள சகோதரி ஸ்டெல்லா தினகரன் அவர்களுக்கு,

நான் என்னுடைய எதிர்காலத்தைக் குறித்து கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். மேலும் மரண பயமும் என்னை வாட்டிக்கொண்டிருந்தது. இதனால் நான் மிகவும் வேதனைப்பட்டு வந்தேன். இந்நிலையில் கடந்த மாதம் ஏற்காட்டில் "குடும்ப ஆசீர்வாத கூட்டம்" நடைபெறுவதாக கேள்விப்பட்டு, அதில் கலந்துகொண்டேன். நீங்கள் செய்தி கொடுத்துவிட்டு ஜெபிக்கும்போது, நானும் உங்களோடு இணைந்து ஜெபித்தேன். அப்போது தேவனுடைய வல்லமை என்மீது இறங்கியது. அந்த நாளில் இருந்து என் மனதில் ஒரு தெளிவும், நம்பிக்கையும் வந்தது. தற்போது நான் ஆண்டவருக்காக வாழ்ந்து வருகிறேன். தேவனுக்கே மகிமை.

ஏ. ரெகு, ஏற்காடு.

ஆகஸ்ட் 5, 2010.

ஆசிரியரைப்பற்றி...

...நான் உங்களுக்கு சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோவான் 6:63

என்ற அருள்வாக்கிற்கேற்ப தன்னுடைய 16-வது வயதில் தன் உள்ளத்தை ஆண்டவருக்கு பறிகொடுத்து, அன்றுமுதல் இன்றுவரை கிறிஸ்துவோடு நடக்கிற தன் ஆழமான அனுபவத்தின் மூலம், பரிசுத்த ஆவியானவரின் துணையோடு அநேக புத்தகங்களை எழுதவும், அதை வாசிக்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் ஜீவனைப் பெற்று, அவர்களும் ஆண்டவருக்கென்று எழும்பிப் பிரகாசிக்க வேண்டும் என்ற ஆத்தும தாகத்தோடு, தன் அனுபவப் பாதையை ஒரு திறந்த புத்தகமாக எழுதி வெளியிட்டு, மக்களுக்கு தெய்வீக ஒளியைக் காண்பிக்கும் கிருபா பாத்திரமாக சகோதரி ஸ்டெல்லா தினகரன் அவர்கள் விளங்கி வருகிறார்.

தேவ கிருபையால் ஆண்டவர் இம்மட்டும் **'விலையுயர்ந்த முத்து'**, **'புத்தியுள்ள ஸ்திரீ '**, **'கனிதரும் செடி'**, **'முள்ளில் ரோஜா'**, **ஜெபமே ஜெயம் - பாகம் 2'**, **'என் வேண்டுதலின் சத்தம்'**, **'சின்னஞ்சிறு தீபம்'**, **'தெய்வீக பரிசுத்தம்'**, **'கிறிஸ்துவுக்குள் நற்கந்தம்'**, **'பாக்கியம் பெறும் குடும்பம்'**, **'நாளுக்கு ஓர் நல் வார்த்தை'**, **'இருளில் வெற்றி தரும் வாழ்வு'**, **'பாடுகளும் மகிமையும்'**, **'இனிய இல்லறம்'** ஆகிய புத்தகங்களை அவருடைய சித்தத்தின்படி எழுதி வெளியிட உதவி செய்திருக்கிறார்.

"அழைப்பின் மேன்மை" என்ற இந்த புத்தகத்தில் அன்பு சகோதரி ஸ்டெல்லா தினகரன் அவர்கள், தன்னுடைய வாழ்க்கை சரிதையையும், அதோடுகூட அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் காணப்பட்ட தேவனுடைய அழைப்பின் மேன்மையையும் மிகவும் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். இதை வாசிக்கும் சாதாரண நிலையில் இருப்பவர்களும் சரி, ஊழியத்தின் பாதையில் இருப்பவர்களும் சரி, மிகுந்த உற்சாகத்தையும் தேவன்மேல் ஒரு அசைக்க முடியாத உறுதியான நம்பிக்கையையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. **இது, கர்த்தர் தம் நாம மகிமைக்கென்று சகோதரியை எழுதி வெளியிடும்படி செய்த 15-வது புத்தகம்.**

அன்பு சகோதரி அவர்களை இந்த நற்பணியில் கரம்பிடித்து வழி நடத்திவரும் ஆண்டவராகிய இயேசு தாமே, இதிலும் பெரிதான தெய்வீகக் கிரியைகளை புத்தகங்கள் வாயிலாக நிறைவேற்ற, அவர்களுக்கு தேவையான சுகம், பெலன், ஜீவன் அளித்து, தொடர்ந்து கோடிக்கணக்கானவர்களுக்கு ஆசீர்வாதமாய் திகழ அருள்புரிவாராக!

உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்கு தரிக்கப்பட்டிருக்கிறது. எரேமியா 15:16